www.padippkam.com



www.padippkam.com

# “எது வன்முறை? யார் வன்முறையாளர்கள்?”

## – முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிராகப் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரம்-கருத்தரங்கம்-பொதுக்கூட்டம்

‘‘திரண்டெழுந்தனர் மாருதி தொழிலாளர்கள் தீக்கிரையானது முதலாளித்துவ பயங்கரவாதம்! எது வன்முறை? யார் வன்முறையாளர்கள்?’- என்ற மைய முழக்கத்துடன், தீவிரமாகிவரும் முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிராக தமிழகம் தழுவிய பிரச்சார இயக்கத்தை நடத்திவரும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் தொடர்ச்சியாக கருத்தரங்குகளையும் பொதுக் கூட்டங்களையும் கடந்த ஆகஸ்ட் - செப்டம்பர் மாதங்களில் நடத்தின.




25.8.2012 சென்னை - திருவொற்றியூர் பெரியார் நகரிலுள்ள பொது வர்த்தகர் சங்கக் கட்டிடத்தில் பு.ஜ.தொ.மு. மாநில இணைச் செயலர் தோழர் சுதேஷ்குமார் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில், பு.ஜ.தொ.மு. மாநிலப் பொருளாளர் தோழர் விஜயகுமார், ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் ஆகியோர் தீவிரமாகிவரும் முதலாளித்துவப் பயங்கரவாதத்தை வீழ்த்த தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் அணிதிரண்டு போராட வேண்டிய அவசியத்தை உணர்த்தினர். தொழிலாளர்கள் குடும்பத்தோடு பங்கேற்ற இக்கருத்தரங்கில் திருவள்ளூர் மாவட்ட பு.ஜ.தொ.மு. பிரச்சாரக் குழுவின் சார்பில் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

ஓசூரில், பாகலூர் சாலையிலுள்ள சங்கீத் அரங்கில் 26.8.2012 அன்று பு.ஜ.தொ.மு. கிருஷ்ணகிரி மாவட்டத் தலைவர் தோழர் பரசுராமன் தலைமையில் நடந்த கருத்தரங்கில்,பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன், கர்நாடக உயர் நீதிமன்ற வழக்குரைஞர் தோழர் பாலன் ஆகியோர், மாருதி தொழிலாளர்களின் உரிமைக்கான போராட்டத்தை வன்முறை என்று சித்தரித்து, நாடு தழுவிய அளவில் தொழிலாளர்களையும் தொழிற்சங்கங்களையும் ஒடுக்கத் துடிக்கும் முதலாளித்துவ பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தி சிறப்புரையாற்றினர். திரளான தொழிலாளர்கள் கலந்துக் கொண்ட இக்கருத்தரங்கில்இடையிடையே புரட்சிகர பாடல்கள் இசைக்கப்பட்டன.

கோவையில் 26.8.2012 அன்று பாரதி நகரிலுள்ள கிருஷ்ணா திருமண மண்டபத்தில் பு.ஜ.தொ.மு. கோவை மாவட்டச் செயலர் தோழர் விளவை இராமசாமி தலைமையில் நடந்த கருத்தரங்கில், ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜு, பு.ஜ.தொ.மு. மாநில அமைப்பாளர் தோழர் வெற்றிவேல் செழியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ம.க. இ.க. தோழர்கள் வர்க்க உணர்வூட்டும் பாடல்களை இசைத்தனர்.

திருச்சி - திருவெறும்பூர் யூனியன் அலுவலகம் முன்பாக 26.8.2012 அன்று பு.ஜ.தொ.மு. சார்பில் அதன் இணைப்புச் சங்கங்களான பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியன், ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்புச் சங்கம், அனைத்து தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்புச் சங்கம், சுமைப்பணி தொழிலாளர் பாதுகாப்புச் சங்கம் ஆகியன இணைந்து பொதுக்கூட்டத்தை நடத்தின.பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியன் துணைச் செயலாளர் தோழர் சுந்தரராஜன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், பு.ஜ.தொ.மு. மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் சுப.தங்கராசு சிறப்புரையாற்றினார். முதலாளித்துவப் பயங்கரவாதத்தைத் திரைகிழித்துக் காட்டிய ம.க. இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி, பார்வையாளர்களிடம் போராட்ட உணர்வூட்டியது.



இக்கருத்தரங்குகள் மற்றும் பொதுக்கூட்டத்தில், தொழிற்சங்க சட்டத்தை மதிக்காததோடு தொழிலாளர்களையும் தொழிற்சங்கங்களையும் வன்முறையாளர்களாகச் சித்தரித்து அவதூறு செய்து தடைசெய்ய முயற்சித்துவரும் சி.ஐ.ஐ. (CII), ஈ.எஃப்.எஸ்.ஐ.(EFSI), ஃபிக்கி (FICCI) முதலான முதலாளிகளின் சங்கங்களைத் தடைசெய்ய வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippkam.com

| சோனியா | மன்மோகன் | ப.சிதம்பரம் | மாண்டேக் சிங்

# அமெரிக்காவின் கூலிப்படை!

ஊக்க மருந்து கொடுக்கப்பட்ட பந்தயக் குதிரைக்கு வெறி வந்ததைப் போல, உலக மூலதனத்தின் இலாபவெறிக்கு ஊழியஞ் செய்வதில் இறங்கிவிட்டது சோனியா-மன்மோகன்-மாண்டேக்சிங்-சிதம்பரம் கும்பல். மாயாவதி, முலயம் சிங், கருணாநிதி, சரத்பவார் போன்ற சில்லறை அரசியல்வாதிகளின் ஆதரவில் ஒரு தொங்குநிலை சிறுபான்மை ஆதரவில்தான் ஆட்சியில் நீடிக்க முடியும், மக்களின் கடும் எதிர்ப்புக் கிளம்பும் என்று அறிந்திருந்தும் நாட்டையே நாசமாக்கும் மறுகாலனியாக்கச் சீர்திருத்தங்களை முன்தள்ளுவது என்று அக்கும்பல் முடிவு செய்துவிட்டது. இது ஏகாதிபத்திய அடிமையான காங்கிர கும்பலின் அரசியல் சாதுர்யம், சாமர்த்தியம், துணிவு என்று கூற முடியாது. உலகையே தன் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துவிட்ட பன்னாட்டு நிதி மூலதனம் என்ன தகிடுதத்தம் செய்தும், எவ்வளவு கோடி டாலர்களை அள்ளி வீசியும் தன்னைப் பிணையில் எடுத்துக் காப்பாற்றிவிடும்; சட்டமும், நீதியும்கூட எதையும் செய்து விட முடியாது என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில் அக்கும்பல் உள்ளது.

2007-ஆம் ஆண்டு அமெரிக்காவில் வெடித்த பொருளாதார நெருக்கடி தொடர்வதோடு, ஐரோப்பிய மண்டலப் பொருளாதார நெருக்கடி நீண்டதாக நீடிப்பதும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையால் புகுத்தப்பட்ட புதிய தாராளமயக் கொள்கையின் படுதோல்வியைப் பறைசாற்றுவதாக அமைந்தன. இதனால் உலக நாடுகள், குறிப்பாக உலகமயமாக்கத்துக்கு பெரும் வாய்ப்புக்களை வழங்கக்கூடிய வளரும் நாடுகள் பன்னாட்டு நிதிமூலதனத்தின் விரிவாக்கத்திற்கான கதவுகளை அடைத்து விடலாம்; அல்லது உலகமயமாக்கலும், புதிய தாராளமயமும் மந்தப்படுத்தப்படலாம் என்று ஏகாதிபத்தியங்கள் அஞ் கின்றன. எனவே, தொடரும் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வாக, தமது நிதி மூலதனத்துக்கான முதலீட்டுச் சந்தையை மேலும் விரிவுபடுத்துவதற்கான வேலைகளை விரைவுபடுத்துவதற்காக, வளரும் நாடுகள் மீதான நெருக்குதல்களைத் தீவிரப்படுத்துகின்றன. மேலும், உலகப் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமான நிதிக் கழகங்களுக்கே பல பில்லியன் டாலர்கள் ''மீட்புப் பொதியாக'' ஏகாதிபத்திய நாடுகளின் அர களாலும், அதோடு டாலர் பொருளாதாரத்துடன் பிணைக்கப்பட்ட வளரும் நாடுகளின் அர களாலும் கொட்டப்படுகின்றன. மீட்புப் பொதிகளைப் பெறும் நிதிக்கழகங்களும், அவற்றின் மூலம் பன்னாட்டு நிதி மூலதனமும் தமது கொள்ளையை விரிவுபடுத்திக் கொண்டே போகின்றன. இதனால் ''மீட்புப் பொதிகளை'' வழங்கிய அர கள் திவாலாகின்றன; அலைஅலையாகப் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டு அவற்றின் மை வளரும் நாடுகள் மற்றும் மக்கள் மீது திருப்பிவிடப்படுகின்றன.

இந்திய ஆளும் கும்பல் புளுகித் தள்ளியவாறு தாராளமயமும் சீர்திருத்தங்களும் நாட்டின் பொருளாதாரத்திலும் மக்கள் வாழ்நிலையிலும் மாய வித்தைகளை ஏற்படுத்திவிடவில்லை. அந்நிய முதலீடும், உலக நிதி மூலதனமும் தொழில்நுட்பத்தை முன்னேற்றுவதாகவும், பொருளுற்பத்தியையும் அதன் மூலம் வேலைவாய்ப்பைப் பெருக்குவதாகவும் இல்லை. அவை இலாபம் கொழிக்கும் பங்கு மற்றும் ஊகச்சந்தை மூலமும் இயற்கை வளங்களைச் சூறையாடுவதன் மூலமும், அவற்றிலும் வரி ஏய்ப்பு-மோசடி, இலஞ்ச-ஊழல்கள் மூலம் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதிலும்தான் கவனம் செலுத்துகின்றன. இவற்றால்தான், கடந்த சில ஆண்டுகளாகக் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி வேகமும் தொழிலுற்பத்தியும் வீழ்ச்சி அடைந்து தேக்க-வீக்க நிலை நிரந்தரமாகிப் போனது.

ஆனால், அந்நிய மூலதனத்தின் வில்லத்தனமான நம்பிக்கையைப் பெறுவதும் தக்கவைத்துக் கொள்வதும்தான் நாட்டு நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் அவசியமானது என்று ஒப்பாரி வைக்கின்றது, ஆளும் கும்பல். அந்நிய முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும், அவர்களின் வருகையும் எங்கே குலைந்து போகுமோ என்ற பயத்தில் நாட்டையே மூழ்கடிக்கிறது. அவர்களின் நம்பிக்கையைப் பெறுவதுதான் தனது ஒரே கடமையாகக் கருதுகிறது.

உலக நிதி மூலதனக் கொள்ளையின் விளைவுகள்தாம் இவை என்ற போதிலும், அந்த உண்மை அப்பட்டமாக வெளிப்பட்ட போதும், புதிய தாராளமயப் பொருளாதாரத்தை விரைவுபடுத்தும்படி பலவகையிலும் ஏகாதிபத்தியங்கள் நிர்பந்திக்கின்றன. அந்நிய மூலதனக் கொள்ளையின் மீது வரிமோசடியைத் தடுக்கும் நட

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 27 இதழ்: 12**
**அக்டோபர் 2012**

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: *முகிலன்*

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561



படிப்பகம்

வடிக்கைகளை நிறுத்தும்படியும், அதற்கு மாறாக, அதன் கொள்ளைக்கு அகலக் கதவு திறந்து விடும்படியும் உலக நிதிமூலதனமும் ஏகாதிபத்தியங்களும் நேரடியாகவே நெருக்குதல்கள் தருகின்றன.

சமீபத்தில் பெங்களூருவில் நடந்த உலக முதலீட்டாளர்களின் 2012 மாநாட்டில் தாராளமயமாக்கம் தொடர வேண்டியதன் அவசியத்தை நியாயப்படுத்தி, பொருளாதாரச் சீர்திருத்தம் மந்தமாவதால் அந்நிய முதலீட்டாளர்களின் ஆர்வம் குறைகிறது என்று பன்னாட்டு நிதி முதலாளிகளும் உள்நாட்டு தரகு முதலாளிகளும் வாதிட்டிருக்கிறார்கள்.

மன்மோகன் சிங் இலக்கை எட்டுவதில் தோல்வி கண்டுவருவதாக அமெரிக்கா மற்றும் மேலை நாடுகளின் ஊதுகுழலாகிய ''டைம்ஸ்'' ஏடு, அட்டைப்படச் சிறப்புக் கட்டுரை வெளியிட்டு விமர்சிக்கிறது. அவற்றின் பொருளாதார மதிப்பீடு நிறுவனமான ''ஸ்டாண்டர்டு அண்டு புவர்'' வளரும் நாடுகளிலேயே இந்தியப் பொருளாதாரம்தான் அந்நிய முதலீடு குறைவதால் வீழ்ச்சியுறும் என்று ஆரூடம் கூறுகிறது. மற்றொரு மதிப்பீடு நிறுவனமான ''ஃபிட்ச்'' இந்தியப் பொருளாதாரம் உறுதிப்பாட்டிலிருந்து எதிர்மறைத் தன்மைக்கு மாறிப் போய்விட்டதாகக் கணிக்கிறது.

அமெரிக்க அதிபர் ஒபாமா, தன் பாணியில் இந்திய ஆளும் கும்பலுக்கு எச்சரிக்கையும் உத்திரவும் விடுத்திருக்கிறார். இந்தியாவின் முதலீட்டுச் சூழல் மோசமாகி வருகிறதென்று அமெரிக்க முதலீட்டாளர்கள் தன்னிடம் பெரிதும் கவலை வெளியிட்டார்களென்றும், பொருளாதாரச் சீர்திருத்தங்களைக் கட்டவிழ்த்து விடுவதற்கு இதுதான் தருணம் என்ற கருத்து இந்தியாவில் வளர்ந்து வருவதாகவும் ஒரு கொக்கியைப் போட்டு, ''சீர்திருத்தங்களை இந்தியா உடனடியாக அமல்படுத்தத் தொடங்க வேண்டும்; பிரச்சினைக்குரிய சீர்திருத்தங்களை இந்தியா அமல்படுத்தத் தொடங்குமானால், அமெரிக்கா இந்தியாவுக்குத் துணை நிற்கும்'' என்றார். அதற்கு ஒத்து வராதவர்கள் இருந்தால், அவர்களை த்தான் சரிகட்டுவதாக மறைமுகமாக வாக்குறுதியும் கொடுத்தார்.

அதனால்தான், தன் எஜமானன் ஒன்று சொன்னால் பத்தாகச் சீர்திருத்தங்களை - உலக நிதிமூலதனச் சேவையை முன்தள்ளுகிறது மன்மோகன் சிங் கும்பல். இதுதான் உண்மை. அதற்கு மாறாக, காங்கிர -மமதா, பா.ஜ.க. ஆகியோர் நடத்தும் அரசியல் கூத்துக்கள் பெரிதாக்கிக் காட்டப்படுகின்றன. •

# காவிரி:

# கர்நாடகத்தின் அடாவடி மைய அரசின் நழுவும் தீர்வு

ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர், கடந்த செப்.19-ஆம் தேதியன்று டெல்லியில் பிரதமர் தலைமையில் நடந்த காவிரி நதி நீர் ஆணையத்தின் கூட்டத்தில், செப்.21 முதல் அக்.15 வரை தினமும் வினாடிக்கு 9000 கன அடி வீதம் கர்நாடக அரசு காவிரி நீரைத் திறந்துவிட வேண்டும் என்ற பிரதமரின் உத்தரவை ஏற்க மறுத்து, ஒரு துளி தண்ணீர்கூடத் தமிழகத்துக்குத் தரமாட்டோம் என்று கொக்கரித்து, அக்கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தார், கர்நாடக முதல்வர். இதையடுத்து, தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதிகள், காவிரி நதிநீர் ஆணையத்துக்கு கர்நாடகம் கட்டுப்பட மறுப்பது கண்டனத்துக்குரியது என்றும், தீர்மானித்தபடி அக்.15 வரை தண்ணீரைத் தமிழகத்துக்குத் தரவேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளனர். இதையும் ஏற்க மறுத்து ஆர்ப்பாட்டங்களையும் சாலை மறியலையும் நடத்தும் கர்நாடக ஓட்டுக்கட்சிகளும் அமைப்புகளும், அக்.6 அன்று முழு அடைப்புப் போராட்டத்தை அறிவித்துள்ளன.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தடையாணை பெறவதென தீர்மானித்துள்ள கர்நாடக அரசு, உச்ச நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தாவிட்டால், கர்நாடக அரசின் மனுவை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதில் பிரச்சினையாகும் என்பதால், செப்.29 இரவு முதலாக வினாடிக்கு 5000 கன அடி அளவுக்குத் தண்ணீரை இப்போது திறந்து விடுகிறது. உச்ச நீதிமன்ற உத்தரவை மதிப்பது போல நாடகமாடும் தந்திரம்தான் இது. உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக கர்நாடக அரசின் மனு, அதன் மீதான விசாரணை என்று மீண்டும் இழுத்தடிக்கப்பட்டு, தமிழகத்தின் காவிரி நீர்ப்பாசன மாவட்டங்களின் விவசாயமும் விவசாயிகளும் மீண்டும் நாசமாக்கப்படும் அபாயம் நீடிக்கிறது.

தமிழகத்தின் இந்தத் துயர நிலைக்கு பிரதமரின் தலைமையிலான காவிரி நதிநீர் ஆணையத்தின் உத்தரவுகளையோ, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளையோ, எதையுமே மதிக்காமல் அடாவடித்தனம் செய்யும் கர்நாடகம் மட்டுமே காரணமில்லை. இவற்றை நடைமுறைப்படுத்த மறுக்கும் கர்நாடக அரசை நிர்ப்பந்திக்கவும், மீறினால் தண்டிக்கவும் அதிகாரம் கொண்ட மைய அரசின் ஒருதலைப்பட்சமான வஞ்சகமும் துரோகமும் நழுவிக் கொள்ளும் போக்கும்தான் முக்கிய காரணமாகும்.

தனது உத்தரவுப்படி பஞ்சாயத்துத் தேர்தலைகளை நடத்த மறுக்கும் மாநிலங்களுக்கு நிதியளிக்க முடியாது என்று மைய அரசு மிரட்டுகிறது. தனது பரிந்துரையின்படி பாடத் திட்டங்களில் சுற்றுச்சூழல் கல்வியைப் பாடத் திட்டமாக்கவில்லை என்பதற்காக மாநிலங்களின் தலைமைச் செயலர்களை வரவழைத்து மன்னிப்புக் கோரும்படி உச்ச நீதிமன்றம் நிர்ப்பந்தித்தது. ஆனால், காவிரி நீர்ப் பிரச்சினையில் இத்தகைய உறுதியை மைய அரசோ, உச்ச நீதிமன்றமோ காட்டாதது ஏன்? காவிரி நீரைப் பெற்றுத் தருவதில் நழுவும் போக்கும் நயவஞ்சகமும் காட்டும் மைய அரசு, தங்கள் வாழ்வுரிமை பலியாக்கப்படுவதை எதிர்த்து மக்கள் போராடிவரும்

www.padippkam.com




சம்பா சாகுபடிக்கு காவிரிநீர் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசை வலியுறுத்தியும், குறுவை சாகுபடி செய்ய முடியாமல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் கோரியும் தஞ்சையில் தமிழக விவசாயிகள் சங்கத்தினர் நடத்திய ஆர்ப்பாட்டம்.

கூடங்குளம் அணுஉலைத் திட்டத்தை அமலாக்குவதற்கு மட்டும் பாசிச வெறியாட்டம் போடுவது ஏன்?

காவிரி, ஈழம், தமிழக மீனவர் சுட்டுக் கொல்லப்படுவது, முல்லைப் பெரியாறு - எனத் தமிழகம் வஞ்சிக்கப்படுவது தொடர்கதையாகிக் கொண்டிருக்கிறது. இருப்பினும், தமிழகத்தில் பருவமழை பொய்த்து, காவிரியில் நீருமில்லாத நெருக்கடியான இத்தருணத்தில், மைய அரசை முடுக்கி அதனை நிர்ப்பந்திக்க எந்த நடவடிக்கையுமின்றிக் கிடக்கிறது ஜெயா அரசு. சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடு விவகாரத்தில் மம்தாவைப் போல மைய அரசை மிரட்டமாட்டோம் என்று கூறும் கருணாநிதி, காவிரி விவகாரத்தில் மைய அரசை மிரட்டவும் நிர்ப்பந்திக்கவும் வாய்ப்புள்ள போதிலும் அடக்கி வாசிக்கிறார்.

தங்கள் மாநில நலன்களுக்கு எதிரான மைய அரசின் கொள்கைகளையும் திட்டங்களையும் கர்நாடகம் மட்டுமின்றி, பஞ்சாப், கேரளம் முதலான மாநிலங்களின் அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் ஒன்றுபட்டு அடாவடியாகப் போராடி முறியடிக்கின்றன. ஆனால் காவிரி, முல்லைப் பெரியாறு முதலான தமிழகத்தின் நியாயவுரிமைக்கான கோரிக்கைகளுக்காகக்கூடத் தமிழக அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் ஒன்றுதிரள்வதில்லை. பிரச்சினை வரும்போது மட்டும் அடையாள எதிர்ப்பு காட்டுவதும், பிழைப்புவாத வாய்ச்சவடால் அடிப்பதும், பின்னர் மைய அரசு பிரிவினைவாத முத்திரை குத்தி நடவடிக்கை எடுத்துவிடுமோ என்று அஞ்சி சமரசமாகவும் நடந்து கொள்கின்றன.

நியாயமான மாநில உரிமைக்காகவும் தேசிய இன உரிமைக்காகவும் நடத்தப்படும் போராட்டங்களைப் பிரிவினைவாத முத்திரை குத்தி ஒடுக்குவதுதான் இந்திய தேசியத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் வழி என்பதுதான் பா.ஜ.க., காங்கிரசு மற்றும் போலி கம்யூனிஸ்டுகளின் கொள்கை. நதிநீர்ப் பங்கீடு மற்றும் எல்லைப் பிரச்சினைகள் போன்ற மாநிலங்களுக்கிடையிலான தகராறுகளில் நியாய- அநியாயங்களைப் பரிசீலித்து நிலைப்பாடு எடுப்பதற்குப் பதிலாக, ஓட்டுப் பொறுக்குவதற்காக மாநில வெறி, இனவெறியைத் தூண்டுவதே இந்த தேசியக் கட்சிகளது மாநிலப் பிரிவுகளின் நடைமுறையாக உள்ளது. ஆனால் ஒருமைப்பாடு என்பது ஒருவழிப் பாதையல்ல.

இந்நிலையில், காவிரியில் தமிழகத்தின் நியாயவுரிமையை நிலைநாட்டத் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த மறுத்து நழுவிக்கொள்ளும் மைய அரசு, தமிழகத்தில் வரிவசூல் செய்வது உட்பட எந்தவொரு அதிகாரத்தையும் செலுத்துவதற்கு தமிழக மக்கள் அனுமதிக்க மறுத்து, மைய அரசின் அதிகார அமைப்புகள் செயல்படாத வண்ணம் தொடர் முற்றுகைப் போராட்டங்களை நடத்தி நிர்ப்பந்திக்க வேண்டும். அதன் பிறகும் தமிழகத்தின் உரிமைகள் மறுக்கப்படுமானால், நெய்வேலி மின்சாரம், நரிமணம் எண்ணெய் போன்றவற்றை மைய அரசுக்குக் கொடுப்பதைத் தடுத்தும், வரி கொடுக்க மறுத்தும், பெருந்திரள் மக்களின் போர்க்குணமிக்க போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர வேறுவழியில்லை. சட்டபூர்வ - நியாயமான தீர்வை மைய அரசு செயல்படுத்த மறுத்து நழுவும் போது, தவிர்க்கவியலாமல் முரண்பாடு முற்றுவதால், நாமும் தவிர்க்கவியலாமல் இத்தகைய நடவடிக்கைகளையும் போராட்டங்களையும் நடத்துமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறோம். ஆனால், எல்லா பிரச்சினைகளுக்கும், எப்போதும் பிற இனத்தவருடன் முரண்பட்டுப் பகைமையுடன் போராட வேண்டும் என்பதாகத் தமிழினக் குழுக்கள் நடந்து கொள்கின்றன. தமிழகத்தின் நியாயவுரிமை தொடர்ந்து மறுக்கப்பட்டு முரண்பாடு முற்றுவதாலேயே தமிழக மக்கள் இத்தகைய நிலை எடுக்க வேண்டியது தவிர்க்கவியலாததாகிறது.

● குமார்

காவிரி நதிநீர் ஆணைய முடிவின்படி தமிழகத்தின் சம்பா சாகுபடிக்குத் தண்ணீர் திறந்துவிடுமாறு உத்தரவிட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து பெங்களூருவில் கர்நாடக ரக்ஷன வேதிகே அமைப்பினர் நடத்தும் தீவட்டி ஊர்வலம்.





படிப்பகம்

## கூடங்குளம்:

# போர்க்குணம் கமழும் எழுச்சி!



அணு உலைக்கு எதிராக இடிந்தகரை, கூடங்குளம் மக்கள் செப்டம்பர் 9, 10 தேதிகளில் நடத்திய போராட்டமும், அம்மக்கள் மீது ஏவப்பட்ட கொடிய போலீசு அடக்கு முறையும், தமிழக மக்களின் பொதுக்கருத்தை அணுஉலைக்கு எதிராகக் குறிப்பிடத்தக்க அளவிற்குத் திருப்பியிருக்கின்றன. மின்வெட்டு முன்னைவிட அதிகரித்திருந்த போதிலும், 'அணு மின்சாரமே சரணம்' என்ற ஆலாபனை மக்களிடம் எடுபடாத சூழல் இன்றைக்கு உருவாகியிருக்கிறது. இந்த மாற்றத்தைச் சாதித்ததில் ஜெயலலிதாவுக்கும் அவரது அபிமான போலீசுக்கும் பெரும்பங்கு உண்டு.

மார்ச் 18 அன்று ஜெ. அரசால் தொடுக்கப்பட்ட போலீசு தாக்குதல், ஜெயலலிதா குறித்த பிரமையை அகற்றியதென்றால், செப்.10 தாக்குதல் மூலம் போலீசும் நீதிமன்றமும் தங்கள் மீதான பிரமைகளையும் கைவிட்டு விடுமாறு வலியுறுத்தியிருக்கின்றன.

செப்.6 - ஆம் தேதி சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து, செப்.11 அன்று அணு உலையில் எரிபொருளை நிரப்ப இருப்பதாக என்.பி.சி.ஐ.எல். அறிவித்தது. அணு உலையை நோக்கி அமைதியான முறையில் ஊர்வலமாகச் செல்ல இருப்பதாக செப்.7-ஆம் தேதியன்று அறிவித்தார் உதயகுமார்.

ஏற்கெனவே மார்ச் மாதம் முதல் தொடர்ச்சியாக 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கும் அப்பகுதியைக் கலவரப் பகுதி போல மாற்றியது போலீசு. ராஜேஷ் தாஸ், ஜார்ஜ், வரதராஜு, பிதாரி ஆகியோர் தலைமையிலான போலீசு படைகள் கூடங்குளம்- இடிந்தகரை வட்டாரம் முழுவதையும் சுற்றி வளைத்தன. இக்கட்டான இத்தருணத்தில் போராடும் மக்களுக்குத் துணை நிற்கும் பொருட்டு, செப்.9 அன்று காலை, கடல் வழியே இடிந்தகரைக்குச் சென்று விட்டார்கள் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர்கள் 9 பேர்.

செப்.9 அன்று காலை, அணு உலையின் வாயிற்புறம் நோக்கி ஊர்வலமாக மக்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்து, கைது செய்து கொண்டு செல்வதற்கான பேருந்துகளுடன் போலீசு காத்திருக்க, அணு உலையின் பின்புறம் நோக்கி, கடலோரமாகச் செல்லத் தொடங்கியது மக்களின் பேரணி. இதனைச் சற்றும் எதிர்பாராத போலீசார் மக்களைத் தடுத்து நிறுத்துவதற்காக அணு உலையின் பின்புறத்துக்கு வந்து சேர்வதற்குள், மக்கள் அணு உலைக்கு சுமார் முக்கால் கி.மீ. தூரத்திற்கு வந்து விட்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒருபுறம் நிற்க, பல வண்ணச்சீருடை அணிந்த போலீசு படைகள் அவர்களை வழிமறிக்க, மக்கள் அனைவரும் அப்படியே கடலோரம் அமர்ந்து விட்டனர்.

வயது முதிர்ந்தவர்கள் சிலரைத் தவிர, முற்றுகைப் போராட்டத்திற்கு ஊரே திரண்டு வந்திருந்தது. சிறுவர்-சிறுமியர் மட்டுமல்ல, தாய்மார்கள் கைக்

www.padippkam.com

குழந்தைகளையும் போராட்டத்திற்குக் கொண்டு வந்திருந்தார்கள். வெயில் ஏறிக் கொண்டிருந்தது. தாகத்தால் தவிக்கும் மக்களுக்காக கடல் வழியே படகுகள் மூலம் கொண்டு வந்து இறக்கிய தண்ணீர் பாக்கெட்டுகளை, போராட்டத்தை ஒடுக்க வந்த போலீசு படையினரும் கேட்டு வாங்கி குடித்துக் கொண்டார்கள்.

கையில் மைக்குடன் மக்களை நோக்கி வந்த போலீசு எஸ்.பி, ''உயர்நீதிமன்றம் நன்றாக ஆலோசித்து அணு உலையை திறக்கலாம் என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. முதல்வர் அமைத்த குழுவும் அணு உலை பாதுகாப்பானது என்று கூறியிருக்கிறது. வேண்டுமானால் நீங்கள் உச்ச நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்யலாம். இங்கே 144 தடை உத்தரவு போட்டிருக்கிறோம். நீங்கள் இப்படிக் கூடுவது சட்டவிரோதம். கலைந்து செல்லுங்கள்'' என்று மைக்கில் அறிவித்தார்.

முன்வரிசையில் இருந்த ஒரு பெண் மைக்கை அவரிடமிருந்து வாங்கி, ''இந்த மண்ணும் கடலும் எங்களுடையது. நாங்கள் வாழ விரும்புகிறோம். நீங்கள் சொல்லும் யார் மீதும் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. நாங்கள் போக மாட்டோம்'' என்று அறிவித்தார்.

''உதயகுமாரைக் கூப்பிடு'' என்று ராஜேஷ்தாஸ் அதட்ட, ''உதயகுமார் எதற்கு? எங்களுடன் பேசு!'' என்றார்கள் மக்கள். இதனால் ஆத்திரமடைந்த ராஜேஷ்தாஸ், ''இடிந்தகரைக்கே வந்து உதயகுமாரைத் தூக்கிடுவேன்'' என்று சொல்ல, மறுகணமே ''யாரடா தூக்குவே'' என்று கிளம்பினார்கள் இளைஞர்கள். அடிபட்ட நாயைப் போல ஒரு உறுமலுடன் பின்வாங்கியது போலீசு.

''நாங்கள் இங்கேயே தொடர்ந்து உட்கார்ந்திருப்போம். அரசியல் கட்சித் தலைவர்களும் சிவில் சமூகத்தினரும் இங்கே வந்து எங்களுக்கு ஒரு நியாயம் சொல்லட்டும்'' என்று மக்கள் கூட்டத்தின் வேறொரு பகுதியில் தொலைக்காட்சிகளுக்குப் பேட்டியளித்துக் கொண்டிருந்தார் உதயகுமார்.

9-ஆம் தேதி இரவு முழுவதும் சில்லென்ற கடற்காற்றில், நடுக்கும் குளிரில் கடல் நீர் காலைத் தொட்டுச் செல்லும் தூரத்தில், சின்னஞ்சிறு குழந்தைகள் உள்ளிட்ட அனைவரும் கடற்கரையிலேயே உறங்கினர். போலீசார் திருமண மண்டபங்களுக்கு உறங்கச் சென்று விட்டனர். இரவு முழுவதும் மக்களுக்கு காவல் நின்றார்கள் சில இளைஞர்கள். வேறு சிலர் கூட்டத்தின் பக்கவாட்டிலிருந்து போலீசு உள்ளே நுழைய முடியாமல் தடுப்பதற்காக அந்தப் பகுதிகளில் வலைகளை இழுத்துக் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

செப்-10 அன்று காலையிலேயே தாக்குதலுக்கான முன் தயாரிப்புகளைத் தொடங்கிவிட்டது போலீசு. ராஜேஷ்தாஸ் தலைமையில் வந்த அதிரடிப்படை வலைகளை அறுத்தெறிய, மக்கள் முட்களை பிடுங்கிப் போட்டு போலீசைத் தடுத்தனர். தடியடி தொடங்கியது. கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும், பார்வையையும் செவிப்புலனையும் தாக்கி நிலைகுலைய வைக்கும் ''ஸ்டன் கிரனேடு'' எனும் எறிகுண்டுகளையும் வீசியபடியே, மேற்குப் புறத்தின் மேட்டுப் பகுதியிலிருந்து அதிரடிப்படை மக்கள் மீது இறங்கியது. மக்களைக் கடலை நோக்கித் துரத்தியது.

தடியடிக்கு அஞ்சி மக்கள் சிதறியோடவில்லை. மாறாக, மணலை அள்ளி வீசியும், முட்களை எறிந்தும் போலீசை விரட்டினர். கண்ணீர்ப் புகை குண்டுகளை எதிர்கொள்ளும் முறை மக்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. மேலும், மக்கள் மீது வீசப்பட்ட ஸ்டன் கிரெனேடுகள் 2001-ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட காலாவதியான குண்டுகள். கண்களும் மூக்கும் உதடுகளும் எரியவே செய்வதறியாமல் மக்கள் திகைத்தனர். கடலில் இறங்கி, தம் எதிர்ப்பைத் தொடர்ந்தனர்.

அதேநேரத்தில், குண்டுகளை வீசியபடியே இடிந்தகரை ஊருக்குள் நுழைந்த ஒரு போலீசு படை போராட்ட பேனர்களைக் கிழித்து எறிந்ததுடன், மேடையில் சிறுநீர் கழித்தது. மாதாகோயில் சிலையையும் சேதப்படுத்தியது. சுனாமி காலனி மற்றும் அருகாமையில் உள்ள வைராவி கிணறு ஆகிய பகுதிகளில் வீடு புகுந்து கொள்ளையடித்ததுடன், பொருட்களை உடைத்து நாசப்படுத்தியும், பெண்களை கேவலமாக ஏசியும் தாக்கியும் தனது வக்கிரங்களைத் தீர்த்துக் கொண்டது.

போலீசின் இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து உதயகுமார் உள்ளிட்டோர் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டு விட்டனர். போராட்டப் பந்தலில் யாருமில்லை. போலீசு தாக்குதலுக்கு யாரும் அஞ்சவில்லை. மாறாக, பின்வாங்க நேர்ந்ததை எண்ணி அவமான உணர்ச்சிக்கு ஆளாகியிருந்தனர். ஊருக்குள் புகுந்து போலீசு மீண்டும் தாக்குதல் தொடுக்கும் என்று எதிர்பார்த்ததால், பந்தலுக்கு வராமல் மக்கள் ஆங்காங்கே சிதறியிருந்தனர்.

கடலில் மனிதச் சங்கிலி போராட்டத்தை நடத்தும் இடிந்தகரை மக்களை அச்சுறுத்தும் வகையில் தாழப்பறந்து செல்கிறது, கடற்படை விமானம்.





படிப்பகம்

www.padippkam.com



தமிழகப் போலீசால்  ட்டுக்கொல்லப்பட்ட தூத்துக்குடி மீனவர் அந்தோணி ஜான் (இடது); இந்தியக் கடற்படையால் கொல்லப்பட்ட இடிந்தகரை மீனவர் சகாயம்.

''போலீசால் தாக்கப்படுவதில் தனிப்பட்ட அவமானம் ஏதும் இல்லை என்றும், தாக்குதலுக்கு அஞ்சாமல் போராட்டத்தைத் தொடர்வதுதான் சரியான பதிலடியாக இருக்கும்'' என்றும் விளக்கி இளைஞர்களைத் திரட்டினார்கள், மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் தோழர்கள். ம.உ.பா.மையத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜுவை,  போராட்டப் பந்தலில் உரையாற்றுமாறு கோரிய இளைஞர்கள், கோயில் மணியை அடித்து மக்களைப் பந்தலில் திரட்டினார்கள். போலீசால் உடைத்தெறியப்பட்ட மைக்குகளை சரி செய்தார்கள். ''இந்தத் தாக்குதல் மூலம் நம்மை சிதறச் செய்வதும் ஆத்திரமூட்டுவதும்தான் போலீசின் நோக்கம். அந்த நோக்கத்தை முறியடிக்க வேண்டும். நமக்காக தமிழகமெங்கும் மக்கள் போராடத் தொடங்கியிருக்கும் சூழலில், மீண்டும் இதே இடத்தில் ஒன்றுதிரண்டு போராடுவது நம் கடமை'' என்று பேசினார் தோழர் ராஜு. அதன் பிறகு ஊர்க்கமிட்டியுடன் பேசி, 48 மணி நேர உண்ணாவிரதம் தொடங்குவதாகப் போராட்டக் குழுவின் சார்பில் அறிவித்தார், மை.பா.யேசுராசன்.

பத்தாம் தேதியன்று காலை கடற்கரையில் தாக்குதல் நடக்கும் போதே, அணு உலையின் வாயிற்புறத்தில், கூடங்குளம் மக்கள் போலீசுக்கு எதிராக வீரமிக்க போராட்டமொன்றை நடத்தினர். இடிந்தகரையில் பல்லாயிரக்கணக்கில் போலீசு குவிக்கப்பட்டிருப்பதால், அம்மக்கள் கொடூரமாகத் தாக்கப்படுவர் என்றஞ்சி, அப்படையின் ஒரு பிரிவினை தம் பக்கம் இழுப்பதற்காக, அங்கே தாக்குதல் தொடங்கியவுடனே,  இங்கே சாலை மறியலைத் தொடங்கினர்.

கலைந்து செல்லுமாறு மெகாபோனில் பேசிய டி.எஸ்.பி, இடிந்தகரை மீனவர்களுக்கும் கூடங்குளம் நாடார்சாதியினருக்கும் ஏற்கெனவே நடந்த மோதல்களை நினைவுபடுத்தி, சாதிப்பிளவை ஏற்படுத்த முயன்றார். அதனைக் காறி உமிழ்ந்து நிராகரித்துவிட்டனர்கூடங்குளம் மக்கள். முன்வரிசையில் நின்ற மாணவர்கள் போலீசின் கண்ணீர்ப் புகை குண்டுகளை எதிர்கொண்டனர்.

சின்னஞ்சிறிய அந்த ஊரின் முக்கிய சாலையைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கே, அவ்வூர் இளைஞர்களுடன் போலீசு பல மணி நேரம் யுத்தம் நடத்த வேண்டியிருந்தது. போலீசுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு 'லைவ் டெலிகாஸ்ட்' செய்த தொலைக்காட்சிகள் தம்மையுமறியாமல் மக்களின் இந்த வீரத்தை ஒளிபரப்பினர்.

செப்.11 காலை 'மக்கள் மீதான அடக்குமுறையை நிறுத்தும் பொருட்டு, தான் கைதாக முன்வருவதாக' தொலைக்காட்சிகள் மூலம் அறிவித்தார் உதயகுமார். இந்த முடிவு மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் குழப்பத்தையும் பரப்பியது. ''இம்முடிவு தவறானது, இதன் மூலமெல்லாம் போலீசு அடக்குமுறையை நிறுத்தமுடியாது. இந்த முடிவு போராட்டத்தின் பின்னடைவுக்கே வழி வகுக்கும்'' என்று இடிந்தகரை போராட்ட மேடையில் அன்று காலையிலேயே பேசினார், தோழர் ராஜு.

எனினும், தனது முடிவில் உறுதியாக இருந்த உதயகுமார் அன்று பிற்பகல் இடிந்தகரை பந்தலுக்கு வந்து, தான் கைதாகவிருப்பதாக ஊடகங்களுக்கு பேட்டியளித்

கைதாகப் போவதாக அறிவித்த உதயகுமாரைச்  ற்றி நின்று தடுக்கும் இடிந்தகரை மக்களின் உணர்ச்சிப் பெருக்கு.





படிப்பகம்

www.padippkam.com

தார். உணர்ச்சிமயமான ஒரு தருணத்தில், 'கைதாகக் கூடாது' என்று கூறி, அவரை அங்கிருந்து படகில் தூக்கிச் சென்றனர் இளைஞர்கள். அதன் பின்னர், அன்று இரவு இடிந்தகரை வந்த கேஜ்ரிவாலும் கைதாகக் கூடாது என்ற கருத்தையே வலியுறுத்தினார்.



தூத்துக்குடியில் நடைபெற்ற துறைமுக முற்றுகைப் போராட்டம்.

செப்.12 அன்று வழக்குரைஞர் தோழர் வாஞ்சிநாதன் தலைமையில் ம.உ.பா.மையத்தின் சார்பில் பத்து வழக்குரைஞர்கள் கொண்ட உண்மை அறியும் குழு கூடங்குளம் சென்று, போலீசு அடக்குமுறைக்கு ஆளான மக்களை வீடுவீடாகச் சென்று சந்தித்தது. போராடிய குற்றத்துக்காக அந்த ஊர் முழுவதையுமே போலீசு வேட்டையாடியிருந்தது. வீடுகள், சொத்துகள், வாகனங்கள், வேன்கள் நாசமாக்கியது மட்டுமின்றி, பொருட்களையும் இரு சக்கர வாகனங்களையும் போலீசு திருடியும் சென்றிருந்தது. வீடு வீடாகப் புகுந்து பெண்களை இழிவுபடுத்தி, பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கும் ஆளாக்கியிருந்தது. ஊர் முழுவதும் தண்ணீர் சப்ளை துண்டிக்கப்பட்டிருந்தது. சுமார் 50-க்கும் மேற்பட்டோர் ராஜத்துரோகம் உள்ளிட்ட பிரிவுகளில் கைது செய்யப்பட்டிருந்தனர். ஊரில் வயது முதிர்ந்தவர்கள் சிலரைத் தவிர, ஆண்களே இல்லை. எனினும், இத்தனை அடக்குமுறைகளுக்குப் பின்னரும், அணு உலை எதிர்ப்பிலிருந்து கடுகளவும் அப்பெண்கள் பின்வாங்கவில்லை.

போலீசு அராஜகம் குறித்த விவரங்களைத் தொகுத்துக் கொண்டு உண்மையறியும் குழு அன்றிரவு இடிந்தகரை வந்தது. கூடங்குளத்தில் போலீசு நடத்திய வன்முறை பற்றி, தோழர் வாஞ்சிநாதன் பேசியதை, மிகுந்த அக்கறையுடனும் அனுதாபத்துடனும் இடிந்தகரை மக்கள் கேட்டனர். இரு பகுதி மக்களுக்குமிடையிலான ஐக்கியத்தையும் தோழமை உணர்ச்சியையும் இது மேம்படுத்தியது.

செப்.13 காலை முதல் 'கடலில் மனிதச்சங்கிலி' என்ற அறிவிப்பு மக்களிடையே பெரும் உற்சாகத்தை தோற்றுவித்திருந்தது. போராட்டம் துவங்கு முன்னர், மக்களிடையே உரையாற்றுமாறு அழைக்கப்பட்ட தோழர் ராஜு, தேடப்படும் குற்றவாளியென உதயகுமாரைச் சித்தரிக்கும் வாய்தா ராணி ஜெயலலிதாவின் அரசை எள்ளி நகையாடினார். அணு உலைக்கு எதிராக கல்பாக்கத்திலும் மற்ற கரையோர கிராமங்களிலும் தொடங்கிவிட்ட போராட்டத்தைச் சுட்டிக்காட்டி, கிரிமினல் வழக்கு போடுவதன் மூலம் மக்கள் போராட்டத்தை ஒடுக்கவும் முடியாது, நீதிமன்றத் தீர்ப்பைக் காட்டி அணு உலையை இயக்கவும் முடியாது என்று விளக்கினார்.

போராட்ட முழக்கங்களை வாஞ்சிநாதன் எழுப்ப, ஆயிரக்கணக்கான மக்கள் விண்ணதிரும் முழக்கங்களுடன் கடலில் இறங்கினர். அச்சுறுத்தும் நோக்கத்துக்காகவே தலைக்கு மேலே பத்தடி உயரத்தில் பறந்த கடற்படை விமானம் மக்களின் ஆத்திரத்தை மேலும் தூண்டியது. மீண்டும் மீண்டும் தலைக்கு மேலே சீறிச்சென்ற விமானத்தின் ஒலியால் பலர் மயங்கி விழுந்தனர். ஒரு சிறிய பாறையின் மீது நின்று மக்களுக்கான பாதுகாப்பு கயிறுகளைக் கட்டிக் கொண்டிருந்த மீனவர் சகாயத்தின் தலைக்கு மிக அருகில் விமானம் பறந்ததால், அவர் நிலை குலைந்து மயங்கிச் சரிந்தார். அபாயகரமான நிலையில் அன்றிரவே நாகர்கோயில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

செப்.14 மதியம் அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்தனர். ஒலியின் அதிர்ச்சி காரணமாக மூளை மற்றும் இதயத்தின் ரத்தநாளங்கள் வெடித்ததுதான் அவரது மரணத்துக்குக் காரணம். தனக்கும் இதற்கும் தொடர்பில்லை என்பது போல நழுவிக்கொள்ள முயன்றது போலீசு. மருத்துவமனையிலேயே உடனிருந்த ம.உ.பா.மையத்தின் நாகர்கோயில் செயலர் வழக்குரைஞர் பூபதி, வழக்கு பதிவு செய்து உடலைப் பரிசோதனைக்கு அனுப்புமாறு போலீசுடன் போராடினார். சகாயத்தின் மனைவி மற்றும் உறவினர்களும் இதில் உறுதியாக இருந்தனர்.

செப்.15 அன்று சந்தேக மரணம் என்று வழக்கு பதிவு செய்து அவரது உடலை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு வந்தது போலீசு. அடுத்து, மக்களின் கோபத்திலிருந்து தப்பிக்கும் பொருட்டு, பிரச்சினையை ஆறப்போடுவதற்காகப் பிரேத பரிசோதனையை வேண்டுமென்றே தாமதப்படுத்தும் நாடகம் அரங்கேறத் தொடங்கியது.

செப்.16, ஞாயிறு அன்று காலை தோழர் ராஜு தலைமையில் ம.உ.பா. மைய வழக்குரைஞர்கள், அருகாமை மீனவ கிராமத்து இளைஞர்களை இணைத்துக் கொண்டு மருத்துவமனை வாயிலிலேயே ஆர்ப்பாட்டம் நடத்தினர். இது கடற்படை நடத்திய படுகொலை என்றும், சிறுவனைச்சுட்டுக் கொன்ற சென்னை இராணுவ அதிகாரியைக் கைது செய்தது போல, கடற்



படிப்பகம்

www.padippkam.com

படையினர் மீது கொலை வழக்கு பதிவு செய்து கைது செய்யவேண்டும் என்றும், மக்கள் அஞ்சலி செலுத்தும் பொருட்டு சகாயத்தின் உடலை கரையோர கிராமங்கள் வழியே கொண்டு செல்வது மக்களின் உரிமை என்றும் தொலைக்காட்சிகளுக்குப் பேட்டியளித்தார் ராஜு. ஞாயிற்றுக்கிழமையும் சவப்பரிசோதனை நடக்கவில்லை.

செப்.17 காலை மருத்துவமனை வாயிலில், சகாயத்தின் உறவினர்கள், வழக்குரைஞர்கள் மற்றும் சில இளைஞர்கள் உடலைப் பெறுவதற்காகக் காத்திருந்தனர். 50 வேன்களில் -ற்றுக்கணக்கான அதிரடிப்படை போலீசாரும், வஜ்ரா வேன்களும், கண்ணீர்ப் புகை குண்டுகளும் வந்து இறங்கின. உடலைப் பெற்றவுடனேயே வேனில் ஏற்றியது போலீசு. வழிநெடுக அஞ்சலி செய்யக் காத்திருந்த மக்களை, அவர்களைவிட எண்ணிக்கையில் அதிகமான போலீசார் சுற்றி வளைத்திருந்தனர்.

வழியில் எங்குமே மக்களை அஞ்சலி செலுத்த அனுமதிக்காமல், நேரே இடிந்தகரை எல்லையில் கொண்டு போய் உடலை ஒப்படைத்தது போலீசு. போர்க்குணமிக்க முழக்கங்களுடன் ஊர்வலமாக மேடைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சகாயத்தின் உடலுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

கடற்படையால் கொல்லப்பட்ட சகாயம், மணப்பாடு கிராமத்தில் அநீதியான முறையில் நேருக்குநேர் சுட்டுக்கொல்லப்பட்ட அந்தோணி ஜான் ஆகியோரது தியாகங்கள் நீதிக்காகக் காத்திருக்கின்றன.

•••

**கூ**டங்குளம் அணு உலைக்கு எதிரான மக்கள் போராட்டத்திற்கு, ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் அளித்து வரும் ஆதரவென்பது, அடையாள ஆதரவோ தார்மீக ஆதரவோ அல்ல. அணு உலைத் திணிப்பின் அரசியல் பின்புலத்தை அம்பலப்படுத்தும் வகையிலும், மின்வெட்டைக் காட்டி அணு உலையை நியாயப்படுத்தும் பிரச்சாரத்தை முறியடிக்கும் வகையிலும் தமிழகமெங்கும் இவ்வமைப்புகள் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றன. பிப்ரவரி 11 அன்று கூடங்குளத்தில் நடத்திய போராட்டத்தை அடுத்து, சென்னையில் மிகப்பெரும் பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டது.

தொடர்ந்து, மார்ச் மாதத்தில் ஜெ. அரசின் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்ட நாட்களில், ம.உ.பா.மையத்தின் வழக்குரைஞர்கள் இடிந்தகரையிலும் கூடங்குளத்திலும் மக்களுடன் இருந்தனர். தற்போது செப்.9 முற்றுகைப் போராட்டத்திலும் மக்களோடு மக்களாக உடனிருந்து பணியாற்றியிருக்கின்றனர்.

அதேபோல, போலீசு அடக்குமுறைகளை ஊடகங்கள் இருட்டடிப்பு செய்து வந்த சூழலில், போராட்ட நிலைமைகள், போலீசு அடக்குமுறைகள் குறித்த செய்திகளை 'வினவு' இணையதளம் உடனுக்குடன் வெளிக்கொண்டு வந்தது. முள்ளிவாய்க்காலைப் போல போலீசால் முற்றுகையிடப்பட்டிருந்த அந்தப் பகுதியிலிருந்து நேரடி பேட்டிகளையும் ஒலிபரப்பியது. இத்தளத்தின் மூலம் களநிலைமைகள் ஏராளமான வாசகர்களைச் சென்றடைந்தன.

செப்.10 அன்று நடைபெற்ற போலீசு அடக்குமுறைக்கு எதிராக, செப்.11 அன்றே ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; ஆகிய அமைப்புகளின் சார்பில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. பல இடங்களில் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். மதுரை உயர்நீதிமன்ற வழக்குரைஞர்களைத் திரட்டி சாலை மறியல் போராட்டமும், சென்னையில் கோட்டை முன் வழக்குரைஞர்களின் மறியல் போராட்டமும் நடத்தப்பட்டன. தூத்துக்குடியில் மைசூர் எக்ஸ்பிரஸ் ரயிலை மறித்து -ற்றுக்கணக்கானோர் நடத்திய போராட்டத்தில், அந்நகரைச் சேர்ந்த ம.உ.பா.மைய வழக்குரைஞர்கள் முன்நின்றார்கள்.

செப்.13 அன்று சீரங்கத்துக்கு வந்த ஜெயலலிதாவுக்கு, விமான நிலையத்திலிருந்து வரும் பாதையில் கருப்புக் கொடி காட்டினார்கள் திருச்சி ம.க.இ.க; பெ.வி.மு. தோழர்கள். அ.தி.மு.க. காலிகளால் கொடூரமாகத் தாக்கப்பட்டு, 3 குழந்தைகள், பெண்கள் உள்ளிட்டோர் பொய் வழக்கில் சிறை வைக்கப்பட்டார்கள்.

செப்.22 அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற துறைமுக முற்றுகைப் போராட்டத்திலும் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் தோழர்கள் கலந்து கொண்டனர்.

இடிந்தகரை மக்கள் மீது போலீ நடத்திய தாக்குதலைக் கண்டித்து, திருச்சி ம.க.இ.க., பெ.வி.மு. அமைப்புகள், செப்.13 அன்று சிறீரங்கத்துக்கு வந்த ஜெயாவிற்குக் கருப்புக்கொடி காட்டும் போராட்டம் நடத்திய பொழுது, அ.தி.மு.க. குண்டர்களால் மண்டை உடைக்கப்பட்ட பெண் தோழர்.





படிப்பகம்

www.padippkam.com



இடிந்தகரை மக்கள் மீது போலீ நடத்திய தாக்குதலைக் கண்டித்து, உயர் நீதிமன்ற வழக்குரைஞர்களைத் திரட்டி, மனித உரிமைப் பாதுகாப்பு மையம் சென்னையில் நடத்திய கோட்டை நோக்கிச் செல்லும் பேரணி.

கூடங்குளத்தில் போலீசின் மனித உரிமை மீறல்கள் குறித்து, நீதி விசாரணை கோரி வழக்குரைஞர் வாஞ்சிநாதன் தொடுத்துள்ள வழக்கு மதுரை உயர் நீதி மன்றத்தில் நடந்து வருகிறது.

•••

**செப்.** 9 முற்றுகைப் போராட்டமும், அதில் இடிந்தகரை, கூடங்குளம் மக்கள் காட்டிய போர்க்குணமும், அரசையும் ஆளும் வர்க்கத்தையும் அச்சம் கொள்ள வைத்திருக்கிறது. போர்க்குணமிக்க மக்கள்திரள் போராட்டங்களுக்கும், போராட்ட முறைகளுக்கும் ஊக்கம் தந்திருக்கிறது. நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டக்கரையோர மக்களை அணு உலைக்கு எதிரான போராட்டக் களத்திற்குள் இழுத்து வந்திருக்கிறது.

அணு உலையின் அபாயம் குறித்து ஆழமாகப் புரிந்து வைத்திருக்கும் அந்த மக்களிடம், அதிகார வர்க்கத்தின் நைச்சியமான பேச்சுகளோ, போலீசின் உருட்டல் மிரட்டல்களோ செல்லுபடியாகவில்லை. அம்மக்கள் போராட்டத்தில் காட்டிய உறுதி, கண்மூடித்தனமான அணுஉலை ஆதரவுக் கருத்து கொண்ட நபர்களையும் சிந்திக்க வைத்திருக்கிறது.

இதற்கு நேர் மாறாக, நாராயணசாமியின் உளறல்களும், அணுசக்தி துறை அதிகாரிகளின் முன்னுக்குப்பின் முரணான, பித்தலாட்டமான பேச்சுகளும், அவர்கள் மீதான அவநம்பிக்கையை அதிகரித்திருக்கின்றன. அணு உலை ஆதரவு சவடால் அடித்து வந்த தமிழகத்தின் காங்கிரசு, பா.ஜ.க. கும்பல்கள்கூட இன்று அடக்கி வாசிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இன்னொருபுறம், அணு உலையின் பாதுகாப்பு குறித்து அசாத்திய அக்கறை கொண்டுள்ளதைப் போல, வாய்ச்சவடால் அடித்துவரும் உச்ச நீதிமன்றம், பொய்யான நம்பிக்கையை மக்களிடம் விதைத்து வருகிறது. குறிப்பிட்ட சில பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்த பின்னர், அணு உலையை இயக்குமாறு உத்தரவிடுவதற்கு மேல் வேறு எதையும் உச்ச நீதிமன்றம் செய்யாது. செய்யவும் இயலாது என்பதே உண்மை நிலை.

அணுமின் நிலையங்களுக்கு எதிராக அறிவியல்பூர்வமாக எத்தனை ஆதாரங்களை எடுத்து அடுக்கினாலும், வாதங்களை முன்வைத்தாலும் அவையெல்லாம் அரசின் முடிவைத் மாற்றப் போவதில்லை. ரசியாவுடனான ஒப்பந்தம், அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம் ஆகியவை பன்னாட்டு முதலாளிகளின் கொள்ளை இலாபத்துக்காகவும், இந்திய அரசின் இராணுவ நோக்கத்துக்காகவும் போடப்பட்டவை; மக்கள் நலனுக்கு எதிரானவை; நாட்டின் பொருளாதாரத்தைச் சூறையாடுபவை என்று தெரிந்தேதான், அவை நம்மீது திணிக்கப்படுகின்றன.

ஜெயா, பா.ஜ.க., மமதா போன்றவர்களைப் பொருத்தவரை, அவர்கள் தேர்தல் அரசியல் ஆதாயத்துக்காகத்தான் அணு உலை எதிர்ப்பு, வால்மார்ட் எதிர்ப்பு பேசுகிறார்கள். இருப்பினும் இவர்கள் மீது நம்பிக்கை ஏற்படுத்துபவர்கள், போகாத ஊருக்கு வழிகாட்டுகிறோம் என்று தெரிந்தேதான் மக்களுக்கு இந்தப் பிரமையை ஊட்டுகிறார்கள்.

அணு உலை எதிர்ப்பு போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வைகோ, ராமதாசு, நெடுமாறன் உள்ளிட்டோராக இருக்கட்டும், சில்லறை வணிகத்தில் பன்னாட்டு முதலீட்டையும், மின்சாரம் தனியார்மயத்தையும் எதிர்ப்பதாக கூறும் வலது-இடது கம்யூனிஸ்டுகளாக இருக்கட்டும், அவர்கள் இதனை இந்த நாடாளுமன்ற ஜனநாயக அரசியலுக்கு உட்பட்டுச்சாதிக்க முடியாது என்று தெரிந்தும், மக்களுக்குப் போலி நம்பிக்கையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நடந்து கொண்டிருப்பது ஒரு போர். தனியார்மய, தாராளமயக் கொள்கைகளை அமல்படுத்தி வரும் ஆளும் வர்க்கங்கள், சிங்குர், நந்திகிராம், கலிங்கா நகர், குர்கான், மானேசர் என்று பல இடங்களில் இது போர்தான் என்பதைத் தெளிவுபடுத்திவிட்டார்கள். இடிந்தகரையிலும் கூடங்குளத்திலும் இன்னுமொருமுறை இதனைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

இந்தப் போரில் எதிரியைத் தோற்கடிப்பது ஒன்றுதான் நம் முன் திறந்திருக்கும் ஒரே வழி. வேறு வழிகள் எதுவும் இல்லை. இதனைப் புரிந்து கொள்வதும், இதற்குப் பொருத்தமான முறையில் மக்களை போராட்டத்திற்கு அணிதிரட்டுவதும்தான் நம் முன் உள்ள பணி.

● தொரட்டி



படிப்பகம்

www.padippkam.com

# “சிங்கள இனவெறி பாசிஸ்ட் ராஜபக்சேவை இந்தியாவிற்குள் அனுமதிக்காதே! ஈழத் தமிழினப் படுகொலைக்கு அங்கீகாரமளிக்காதே!”

## - புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்

மத்தியப் பிரதேச அரசின் அழைப்பின் பேரில், சாஞ்சி நகரில் அனைத்துலக புத்தமதக் கல்விக் கழகத்துக்கு அடிக்கல் நாட்ட வருகை தரும் ராஜபக்சேவை எதிர்த்தும், ஈழத் தமிழர்களை இலட்சக்கணக்கில் கொன்று குவித்த சிங்கள இனவெறி பாசிஸ்ட் ராஜபக்சேவுக்கு காங்கிரசு, பா.ஜ.க. கட்சிகளும் அரசுகளும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றுக் கொண்டிருப்பதை எதிர்த்தும் ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புக்கள் இணைந்து, தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் 20.09.2012 அன்று விண்ணதிரும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டங்களை நடத்தின.



தஞ்சையில்...

சென்னை- தி.நகர் பேருந்து நிலையம் அருகில் ம.க.இ.க. மாவட்டச் செயலர் தோழர் வெங்கடேசன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், ‘‘ஈழத் தமிழர்களுக்கு தேசிய அளவில் ஒரே பாதுகாப்பு பா.ஜ.க.தான் என்று சவடால் அடித்த சுஷ்மா சுவராஜ், போர்க்குற்றவாளி ராஜபக்சேவை வரவேற்கக் காரணம் என்ன? சிங்களக் கால்பந்தாட்ட வீரர்களை விரட்டிய ‘ஈழத்தாய்’ ஜெயலலிதா, ராஜபக்சே வருகையை எதிர்த்து வாய் திறக்காததன் மர்மம் என்ன? ஈழத்தமிழரின் காவலனாகக் காட்டிக் கொள்ளும் ‘டெசோ’சூரர் கருணாநிதி, ராஜபக்சே வருகையை இந்தியா தவிர்த்திருக்க வேண்டுமென்று அடக்கி வாசிப்பதன் பின்னணி என்ன? ராஜபக்சே வருகையை எதிர்த்துச் சூரத்தனம் செய்யும் வைகோ, பா.ஜ.க.வை நண்பனாகக் காட்டிக் கொள்ளும் பின்னணி என்ன?’’ - என்று கேள்விகளை எழுப்பி, காங்கிரசு, பா.ஜ.க.போன்ற தேசியக் கட்சிகள் மட்டுமல்ல, தி.மு.க; அ.தி.மு.க; ம.தி.மு.க. போன்ற தமிழகத்தின் பிழைப்புவாத ஓட்டுக்கட்சிகளும் இந்திய ஆளும் வர்க்கத்தின் நலனுக்காக நிற்பவைதான் என்பதையும், கொள்கை - இலட்சியத்தில் வேறுபட்டவர்களாகக் காட்டிக் கொள்ளும் இக்கட்சிகள், இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நலனையும் இந்தியத் தரகுப் பெருமுதலாளிகளின் நலனையும் கட்டிக் காப்பதில் ஓரணியில் நிற்பதை திரைகிழித்துக் காட்டியும் முன்னணியாளர்கள் உரையாற்றினர்.



சென்னையில்...

தோழர் இராவணன் தலைமையில், தஞ்சை - திருச்சி மாவட்டங்களின் புரட்சிகர அமைப்புகள் இணைந்து தஞ்சையில் ஜூபிடர் தியேட்டர் எதிரில் 20.9.2012 அன்று நடத்திய ஆர்ப்பாட்டத்தில் திருச்சி மாநகர பு.மா.இ.மு. தோழர் சங்கத் தமிழன், பட்டுக்கோட்டை வட்ட வி.வி.மு. அமைப்பாளர் தோழர் மாரிமுத்து, ம.க. இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

கரூரில் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு பு.மா.இ.மு. மாவட்டச் செயலாளர் தோழர் பாக்கியராஜ் தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ம. உ.பா. மையத்தின் இராமசாமி, திருச்சி தர்மராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

ஈழத் தமிழின அழிப்புப் போரை வழிநடத்திய இந்திய அரசு, இன்று போர்க்குற்றவாளி ராஜபக்சேவை வெளிப்படையாக வரவேற்பதைச் சாடியும், ஓட்டுக் கட்சிகளின் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்தியும், இந்தியத் தரகு முதலாளிகளின் நலனுக்காக செய்யப்படும் இந்த அநீதிக்கு எதிராக அணிதிரண்டு போராட உழைக்கும் மக்களை அறைகூவியும் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

-பு.ஜ. செய்தியாளர்கள்



படிப்பகம்

www.padippkam.com

## இருண்டது தமிழகம்:

# கையாலாகாத ஜெயாவே, பதவி விலகு!

**மின் பற்றாக்குறையைத் தீர்க்க திறன் இல்லாத ஜெயா, போலீசை ஏவி மக்களை ஒடுக்குவதில்தான் முனைப்பு காட்டி வருகிறார்.**

நான்காண்டுகளுக்கு முன்பு தொடங்கிய மின்வெட்டு பிரச்சினை இன்று பூதாகரமாகி, தமிழகத்தை இருளில் தள்ளியுள்ளது. சென்னையைத் தவிர, பிற பகுதிகளில் நாளொன்றுக்கு 12 மணி முதல் 16 மணி நேரத்துக்குத் தொடரும் மின்வெட்டால் தமிழக மக்கள் குமுறிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழகத்தின் பல்வேறு சிறுதொழில்களின் உற்பத்தியும், திருப்பூர் பின்னலாடை உற்பத்தியும் அடியோடு முடங்கிப் போயுள்ளன. ஏறத்தாழ 20 லட்சம் தொழிலாளர்கள் கோவை, திருப்பூர், சேலம், நாமக்கல், ஈரோடு, தர்மபுரி மாவட்டங்களில் வேலையிழந்துள்ளனர். மதுரை கப்பலூர் தொழிற்பேட்டையில் 30 சிறுதொழில் கூடங்கள் மூடப்பட்டுள்ளன. விருதுநகர் மாவட்டத்தில் தினமும் 12 மணிநேர மின்தடையால் அச்சுத் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் மட்டும் தினமும் 15 கோடி ரூபாய் அளவுக்கு உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது. பட்டறைகளுக்குப் பூட்டு போட்டு சாவியை மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைப்பதைத் தவிர வேறு வழிதெரியவில்லை என்கின்றனர், நவீன விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர் சங்கத்தினர். கோவை - திருப்பூர் பகுதிகளில் நாளொன்றுக்கு 16 மணி நேர மின்வெட்டினால் விசைத்தறிகள், துணி பதனிடும் ஆலைகள், சலவை ஆலைகள், ஆயத்த ஆடை உற்பத்தி நிறுவனங்கள், என்ஜினியரிங் ஆலைகள், உணவுப் பொருட்கள் தயாரிப்பு ஆலைகள் என 50-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் மூடப்பட்டு 8 இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்து பரிதவிக்கிறார்கள். 3 ஷிப்ட்டுக்குப் பதிலாக ஒரு ஷிப்ட்டில்தான் ஆலைகள் இயங்குவதாகவும், உற்பத்தி பாதிப்பால் தமிழகம் ஜவுளிச் சந்தையை இழந்து நிற்கிறது என்றும் புலம்புகிறார், தென்னிந்திய மில் உரிமையாளர் சங்கத் தலைவர்.

காவிரி டெல்டா பகுதியில் மும்முனை மின்சார சப்ளை ஒரு மணி நேரம்தான் கிடைப்பதால் தண்ணீர் இறைக்க முடியாமல் சம்பா பயிருக்கு நாற்று விடக்கூட முடியவில்லை. கருகும் பயிர்களைப் பார்த்து விவசாயிகள் கண்ணீர் வடிக்கிறார்கள். அரசு மருத்துவமனைகளில் மின்விசிறி இல்லாமல் பச்சிளம் குழந்தைகளும் தீக்காயமடைந்தோரும் வேதனையில் துடிக்கிறார்கள். பிணவறைகளுக்கு மின்சாரம் இல்லாமல் துர்நாற்றம் தெருவரை வீசுகிறது. விவசாயம் செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிப்பு, சிறுதொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு நட்டம், தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு, மாணவர்களின் படிப்பு பாதிப்பு, குழந்தைகளும் முதியோரும் நோயாளிகளும் தூக்கமின்மையாலும் கொசுக்கடியாலும் பாதிப்பு - என அனைத்துத் தரப்பு உழைக்கும் மக்களையும் வாட்டி வதைக்கும் ஜெயா அரசு, மின்வெட்டுக்கு எதிராகத் தன்னெழுச்சியாக சாலை மறியல், ஆர்ப்பாட்டங்களை நடத்தும் மக்கள் மீதும் போலீசை ஏவி ஒடுக்கும் பேயாட்சியாக மாறிவிட்டது.

கடும் மின்வெட்டால் விவசாயம் அழிந்து உணவுப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் நிலவிய போதிலும், அரசாங்கமோ பன்னாட்டு கம்பெனிகளுக்கும் ஷாப்பிங் மால்களுக்கும் வாசல் முதல் கழிப்பறை வரை தடையில்லா மின்சாரத்தை அள்ளி வழங்குகிறது. கரண்டு தர முடியாத கையாலாகாத அரசு என்று சாடும் மக்கள், இந்த நிலை தொடர்ந்தால் இனி

அறிவிக்கப்படாதபலமணி நேர மின்வெட்டால் முடங்கிப் போய்விட்ட சிறுதொழில்.





படிப்பகம்

www.padippkam.com

ஊரெங்கும் கஞ்சித் தொட்டி திறக்க வேண்டியதாகிவிடும் என்கின்றனர்.



கோவையைச் சேர்ந்த சிறுதொழில் அதிபர்கள்-தொழிலாளர்கள் மின்வெட்டைக் கண்டித்து மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு நடத்திய போராட்டம்.

ஆட்சிக்கு வந்தால் 3 மாதங்களில் மின்வெட்டைப் போக்குவேன் என்று வாக்குறுதி தந்த ஜெயா ஆட்சியில், கடந்த 15 மாதங்களில் ஒரு மெகாவாட் மின்சாரத்தைக் கூட கூடுதலாக உற்பத்தி செய்ய முடியவில்லை. ஜெயா ஆட்சியின் திறமையற்ற நிர்வாகத்தால் தமிழகத்தின் மின் உற்பத்தி 2300 மெகாவாட் குறைந்ததுதான் மிச்சம். மின்சாரம் எப்போது வரும் , மின்தடை எப்போது நீங்கும் என்பதற்கு எவ்விதமான பொறுப்பான பதிலும் அரசிடம் இல்லை. மின்சாரப் பற்றாக்குறையைத் தீர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது, எடுக்கப் போகிறது என்பது சிறீரங்க நாயகிக்கே வெளிச்சம்.

மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அதிகாரிகளோ, ஏற்ற இறக்கத்தோடு காற்று வீசுவதால் காற்றாலைகளில் மின் உற்பத்தி குறைந்துவிட்டதாலும், மத்திய மின் தொகுப்பிலிருந்து தமிழகத்துக்கு 1000 மெகாவாட் மின்சாரம் குறைவாகவே கிடைப்பதாலும், நீர்த்தேக்கங்களில் தண்ணீர் இல்லாததால் நீர் மின்சாரம் தடைப்பட்டுள்ளதாலும், மின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதென்றும், இந்தக் குறை எப்போது தீரும் என்று நம்பிக்கையே இல்லை என்றும் கூறுகின்றனர். ஆனாலும் மின்துறை அமைச்சர் நத்தம் விசுவநாதன், டிசம்பர் மாத இறுதிக்குள் மின்தடை பிரச்சினை சீராகிவிடும் என்றும், 2013 முதல் தமிழகம் மின்சாரத்தில் தன்னிறைவு பெற்றுவிடும் என்றும் அம்மாவின் ஆசிப்படி ஆரூடம் கூறுகிறார்.

அன்று கருணாநிதி ஆட்சியின் போது, மின்வெட்டுத் துறை அமைச்சர் என்று ஆற்காடு வீராசாமிக்குப் பெயர் சூட்டி, ஆட்சியின் நிர்வாகத் திறமையின்மையும் ஊழலும்தான் மின்வெட்டுக்குக் காரணம் என்பதாக பெருங் கூச்சல் போட்ட பார்ப்பன ஊடகங்கள், இன்று அதை விடக் கேவலமான நிலைமை ஜெயா ஆட்சியில் தொடர்ந்த போதிலும் வாய்மூடிக் கிடக்கின்றன. மின்சார வாரியத்தில் பெரிய தொழிற்சங்கமாக உள்ள போலி கம்யூனிஸ்டுகள், ஜெயா அரசின் நிர்வாகச் சீர்கேட்டை அம்பலப்படுத்திப் போராட முன்வராமல் ஒதுங்கி நிற்கின்றனர்.

கடந்த தி.மு.க. ஆட்சியின் கடைசி ஆண்டில் 7 மின் உற்பத்தித் திட்டங்களுக்கு மத்திய - மாநில அரசுகளின் ஒப்புதல் கிடைத்து, மின் உற்பத்தியைத் துவக்கலாம் என்ற அனுமதியைத் தரவேண்டிய நேரத்தில் ஆட்சி மாறியது. தி.மு.க. ஆட்சியில் போடப்பட்ட திட்டம் என்பதால், மொத்தத்தில் 7,798 மெகாவாட் கிடைக்கும் இத்திட்டங்களை விரைவுபடுத்த ஜெயா ஆட்சியில் முறையாக முயற்சிகள் மேற்கொள்ளப்படாததால் பயனுக்கு வராமல் உள்ளன. மறுபுறம், தமிழகத்தில் புதிய மின்நிலையங்களை உருவாக்கும் திட்டமோ, குறுகிய கால புதிய மின் திட்டங்களோ எதுவும் அரசிடம் இல்லை. முன்பு கருணாநிதி ஆட்சியில் போடப்பட்ட மின்திட்டங்கள் நிறைவேறினால்தான் ஓரளவுக்காவது மின்சாரம் கிடைக்கும் என்ற நிலைமைதான் உள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் புதுவை எல்லையருகே அமைந்துள்ள கோட்டைக்குப்பம் கிராம மக்கள் மின்வெட்டைக் கண்டித்து நடத்திய சாலைமறியல் போராட்டத்தைக் கலைக்க போலீ நடத்திய தடியடி.



காற்றாலை மூலம் தொடர்ச்சியாக மின்சாரம் கிடைக்கவில்லை என்றும், கிடைக்கும் மின்சாரத்தைக் கொண்டு செல்லவும் பயன்படுத்தவும் அதற்கான கிரிட் இல்லை என்றும் கூறி, அந்த மின் உற்பத்தியையே அரசு நிறுத்தி விட்டது. காற்றாலைகளை மூடிவிடுமாறு தங்களுக்கு அரசு அறிவித்துள்ளதாகக் காற்றாலை முதலாளிகளே பேட்டியளிக்கின்றனர்.

தமிழகத்தில் நி0லவும் மின்பற்றாக் குறை காரணமாக பிற மாநிலங்களிலிருந்து அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்கியதால் மின் வாரியத்துக்கு நட்டம் ஏற்



படிப்பகம்

www.padippkam.com

பட்ட போதிலும், அந்த நட்டத்தை ஓரளவு மாநில அரசு ஏற்கும் என்று சொல்லி தமிழகத்தின் மின்பற்றாக் குறையைத் தீர்க்க முனைந்தது முந்தைய தி.மு.க. அரசு. தனியார்மயம் என்ற போதிலும் தற்போதைய நெருக்கடி யான நிலைமையில் அதைக்கூட செயல்படுத்த ஜெயா அரசு முனையவில்லை.

முந்தைய கருணாநிதி ஆட்சியில் பற்றாக்குறை நீடித்த போதிலும், குறிப்பிட்ட நேரத்தில் மின்தடை இருக்கும், குறிப்பிட்ட நேரத்துக்குப் பிறகு மின்சாரம் தொடர்ந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையாவது இருந்தது. இப்போது அத்தகைய நேரப் பட்டியல் ஏதும் கிடையாது. வரும், ஆனா வராது என்ற நிலைமைதான் உள்ளது. இதனால் சிறு வீதத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களை வேலைக்கு வரச்சொல்லி விட்டுப் பின்னர் மின்சாரம் இல்லாமல் தவிப்பதும், மின்சாரம் வராத நேரத்தில் வேலைக்கு வரவேண்டாம் என்று அறிவித்த பிறகு, திடீரென மின்சாரம் சில மணி நேரங்களுக்கு வருவதுமாகி சிறுதொழில் முதலாளிகள் என்ன செய்வதென்று புரியாமல் தடுமாறுவதும் பெருத்த நட்டமடைவதும் தொடர்கிறது. மின் பற்றாக்குறையால் ஏற்பட்டுள்ள மின்வெட்டை சென்னை மற்றும் பிற மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிப்பது பற்றிய கொள்கையும் இல்லை. வெறுமனே அலங்கார விளக்குகள் பயன்படுத்தக்கூடாது என்று மின்வாரிய அதிகாரிகள் அறிவித்ததற்கு மேல் வேறெந்த நடவடிக்கையும் இல்லை. பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கும் தரகு முதலாளித்துவ நிறுவனங்களுக்கும் தடையற்ற மின்சாரத்தை வழங்கிச் சாதமாக நடந்து கொள்ளும் ஜெயா அரசு, ஒருதலைப் பட்சமாக தமிழகத்தின் பிற மாவட்டங்களில் தீராத மின்வெட்டைத் திணித்து வருகிறது.

தொகுப்பாகக் கூறினால், ஜெயா ஆட்சியில் இன்று எந்த நிர்வாகமும் இல்லாமல் போனதே மின்வெட்டு தீவிரமானதற்குக் காரணமாகும். மின் பகிர்மானம் ஒருதலைப்பட்சமாக இருப்பதாலேயே தமிழகத்தின் பிற பகுதிகள் இருளில் தவிக்கின்றன. இருப்பினும், நிர்வாகச் சூரப்புலி என்று ஒரு பிம்பத்தை ஊடகங்கள், பிழைப்புவாதிகள் மூலம் உருவாக்கிக் கொண்டு, அதை விளம்பரப்படுத்திக் கொள்வதைத் தவிர வேறு முயற்சியும் ஜெயா அரசிடமில்லை. சென்னையிலும் மின்வெட்டு அதிகமானால் ஒட்டுமொத்த தமிழக மக்களிடம் மேலும் அம்பலப்பட்டுத் தனிமைப் பட நேரிடும் என்பதால், சென்னையில் மட்டும் ஓரிரு மணி நேரத்துக்குத் தொடரும் மின்வெட்டைக் காட்டி, இதேபோலத்தான் தமிழகமும் இருப்பதாக மாயத் தோற்றத்தை ஏற்படுத்தி ஜெயா அரசு ஏய்த்து வருகிறது.

மின்வெட்டுக்கு எதிராகத் தமிழகமெங்கும் தன்னெழுச்சியாகப் போராடிவரும் மக்கள், தமிழகத்தை இருளில் தள்ளி தண்டித்துவரும் கேடுகெட்ட ஜெயா ஆட்சிக்கு உரிய தண்டனையை வழங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை.

● தனபால்

## “பன்னாட்டு நிறுவனங்களுக்கான தடையற்ற மின்சாரத்தை ரத்து செய்!”

## - பெ.வி.மு. ஆர்ப்பாட்டம்




**க**டுமையான மின்வெட்டால் தமிழக மக்கள் குமுறிக் கொண்டிருக்கும் நிலையில், ‘‘அறிவிக்கப்படாத 12 மணி நேர மின்வெட்டு! மின்சாரப் பற்றாக்குறை என மக்களை ஏமாற்றாதே! பன்னாட்டு நிறுவனங்களுக்கான தடையற்ற மின்சாரத்தை ரத்து செய்! பகற்கொள்ளையடித்து மின்வாரி யத்தை நட்டத்தில் தள்ளும் தனியார் மின் நிறுவனங்களை அரசுடமை யாக்கு!’’ என்ற முழக்கத்துடன் கடந்த ஆகஸ்ட் 29 அன்று திருச்சி ஜங்ஷன் - காதி கிராப்ட் அருகே பெண்கள் விடுதலை முன்னணி கண்டன ஆர்ப்பாட் டத்தை நடத்தியது. திருச்சி மாவட்ட பெ.வி.மு. தலைவர் தோழர் நிர்மலா தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், சிறப்புரையாற்றிய பெ.வி.மு தோழர் கலா, மக்கள் கலை இலக்கிய கழகத்தின் தோழர் ராஜா ஆகி யோர் இலட்சக்கணக்கான சிறு தொழிற்சாலைகளுக்கும் விவசாயத்திற்கும் திட்டமிட்டே மின்சாரத்தைப் பறிப்பதோடு, மணிக்கு ஒருமுறை மின் சாரத்தை நிறுத்தி உழைக்கும் மக்களைச் சித்திரவதை செய்யும் ஜெயா அரசு, பன்னாட்டு கம்பெனிகளை வாழவைக்கவே மக்களை இருளில் ஆழ்த்தி விட்டு மின் பற்றாக்குறை நிலவுவதாக பச்சைபொய்யை கூறுகிறது என் பதைப் புள்ளிவிவர ஆதாரங்களுடன் சாடினார். இடைஇடையே மையக் கலைக்குழு தோழர்கள் இசைத்த புரட்சிகர பாடல்கள் போராட்ட உணர்வைத் தட்டியெழுப்பின.

பாசிச ஜெயா அரசின் பொய் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்திக் காட்டி, தனியார் மின்சாரநிலையங்களை அரசுடமை ஆக்கவும், சிறுதொழில் நிறுவனங்களுக்கும் விவசாயத்துக்கும் தடையில்லா மின்சாரத்தை வழங்கக் கோரியும், நோக்கியா, ஹூண்டாய், ஃபோர்டு முதலான பன்னாட்டு ஏக போக நிறுவனங்களுக்குத் தடையின்றி மின்சாரம் வழங்குவதை நிறுத்தவும் போராட அறைகூவிய இந்த ஆர்ப்பாட்டம் உழைக்கும் மக்களிடம் சிறப் பானதொரு வரவேற்பைப் பெற்றது.

-பு.ஜ. செய்தியாளர், திருச்சி



படிப்பகம்



ஈகவடார் தூதகரகச் சாளரத்தில் நின்று கொண்டு தனது ஆதரவாளர்களிடம் உரை நிகழ்த்தும் ஜூலியன் அசாஞ்சே.

# அமெரிக்கத் திமிருக்கு விழுந்த அடி!

ஜூலியன் அசாஞ்சே ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர். இவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், விக்கிலீக்ஸ் இணையதளம் மூலம் அமெரிக்க இராணுவத்தின் போர்க் குற்றங்களையும், மற்ற நாடுகளில் உள்ள தனது தூதர்களைக் கொண்டு அந்நாடுகளில் அமெரிக்கா செய்துவந்த உளவு/சதி வேலைகளையும் அம்பலப்படுத்தினார். இதன் மூலம் அமெரிக்காவின் பகையைச் சம்பாதித்துக் கொண்ட அசாஞ்சே, தான் சதித்தனமான முறையில் அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்படுவதைத் தவிர்க்க தற்போது போராடிக் கொண்டிருக்கிறார்.

அசாஞ்சே மீது அமெரிக்காவில் பல வழக்குகள் பதியப்பட்டுள்ளன. அசாஞ்சேயை, உளவாளி எனக் குற்றஞ்சாட்டும் டெயன் பெயின்ஸ்டன் என்ற அமெரிக்க செனட்டர், மரண தண்டனை விதிக்கப்படக்கூடிய பிரிவுகளின் கீழ் அவரை விசாரிக்கவேண்டும் என வன்மத்தோடு கூச்சல் எழுப்பி வருகிறார். அமெரிக்கத் துணை அதிபர் ஜோபிடன் அசாஞ்சேவைப் பயங்கரவாதியென்றே சாடியிருக்கிறார்.

அசாஞ்சேவிற்குத் தகவல்களைக் கொடுத்ததாகக் குற்றஞ்சுமத்தி, பிராட்லி மேனிங் என்ற இளம் இராணுவ வீரரைக் கைது செய்து வைத்திருக்கும் அமெரிக்க அரசு, ''அவரை மிருகத்தைவிடக் கேவலமான முறையில், கொடூரமான முறையில் சிறையில் அடைத்து வைத்திருப்பதை'' ஐ.நா. வின் சித்திரவதைகளைக் கண்காணிக்கும் அமைப்பு உறுதி செய்திருக்கிறது. எனவே, அசாஞ்சே அமெரிக்காவிடம் அகப்பட்டால், அவரது நிலை பிராட்லியைவிட மோசமாகும் என்பது உறுதி.

அசாஞ்சே, அமெரிக்காவின் போர்க் குற்றங்களை ஒன்றன்பின் ஒன்றாக இணையதளம் மூலம் அம்பலப்படுத்திக் கொண்டிருந்த வேளையில், அவர் மீது சுவீடன் நாட்டில் இரண்டு பாலியல் வன்தாக்குதல் வழக்குகள் தொடுக்கப்பட்டன. வழக்குகள் தொடுக்கப்பட்ட சமயத்தில், தனது நாட்டில் தங்கியிருந்த அசாஞ்சேவை இவ்வழக்குகளுக்காக சுவீடனிடம் ஒப்படைக்கப் போவதாக இங்கிலாந்து அரசு உடனடியாக அறிவித்தது. தன்னை சுவீடனிடம் ஒப்படைப்பதை எதிர்த்து அசாஞ்சே தொடுத்த வழக்கினை இங்கிலாந்து நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்ட நிலையில், அவர் தற்பொழுது இங்கிலாந்திலுள்ள ஈகுவடார் நாட்டின் தூதரகத்தில் அரசியல் தஞ்சமடைந்திருக்கிறார்.

அசாஞ்சே, தன் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கு விசாரணையை இங்கிலாந்தில் வைத்தே நேரடியாகவோ அல்லது வீடியோ கான்ஃபிரன்சிங் வசதி மூலமாகவோ சுவீடன் போலீசாரும் நீதிமன்றமும் நடத்திக் கொள்ள முன்வந்ததை, சுவீடன் அரசு அடாவடித்தனமாக மறுத்துவிட்டது. இப்படி சுவீடன் அரசு மறுத்திருப்பது, ''அசாஞ்சேவைத் தன்னிடம் ஒப்படைக்கச் சொல்வதற்கு ஏற்றபடி சுவீடனில் அசாஞ்சே மீது இதுவரை எந்தவொரு வழக்கும் புனையப்படவில்லை என்பதைத்தான் காட்டுகிறது'' என ஸ்டாக்ஹோம் மாவட்டத் தலைமை அரசு வழக்குரைஞர் கூறியிருப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இவற்றின் அடிப்படையில் அசாஞ்சே மீது சுவீடன் நாட்டில் தொடரப்பட்டுள்ளதாகக் கூறப்படும் இரண்டு வழக்குகளும் சோடிக்கப்பட்டவையாகவும்; சுவீடன் வழியாக அவரை அமெரிக்காவிடம் ஒப்படைப்பதற்கான சதித்திட்டமாகவும் இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தைப் பல்வேறு சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் ஆர்வலர்களும் எழுப்பியிருக்கின்றனர்.

அமெரிக்காவின் தலையாட்டிகளான ஆஸ்திரேலியாவும், ஐரோப்பா கண்டத்து நாடுகளும் அசாஞ்சேவிற்குத் தஞ்சமளிக்க மறுத்துவிட்டன. இப்படிப்பட்ட நிலையில்தான், தென்அமெரிக்கக் கண்டத்தைச் சேர்ந்த ஏழை நாடுகளுள் ஒன்றான ஈக்வடார் அரசு அசாஞ்சேவிற்கு அரசியல் தஞ்சமளிக்க முன்வந்தது.

இப்படி அரசியல் தஞ்சமளிக்கப்பட்டவர்களை, தஞ்சமளிக்கப்பட்ட நாட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பது சர்வதேச மரபு. ஆனால், இங்கிலாந்து அரசோ வீட்டுக் காவலில், போலீசு கண்காணிப்பின் கீழ் வைத்திருந்த அசாஞ்சேவைத் தனது நாட்டிலிருந்து ஈக்வடாருக்கு அனுப்பி வைக்க மறுத்துவிட்ட நிலையில், அசாஞ்சே தந்திரமான முறையில் வீட்டுக் காவலிலிருந்து தப்பி, இங்கிலாந்திலுள்ள ஈக்வடார் தூதரக அலுவலகத்தில் தஞ்சமடைந்தார்.

அசாஞ்சேவைத் தங்களிடம் ஒப்படைக்காவிட்டால், தூதரகத்தைத் தாக்கப்போவதாக இங்கிலாந்து ஈகுவடாரை மிரட்டியது. ஆனால், இங்கிலாந்தின் மிரட்டலுக்கு ஈகுவடார் அடிபணிய மறுத்துவிட்டது. இதனால் தூதரகத்தைவிட்டு அசாஞ்சே வெளியே வந்தால், அவரை உடனடியாகக் கைது செய்து சுவீடனிடம் ஒப்படைக்கும் திட்டத்தோடு, தூதரகத்தைச் சுற்றி உளவாளிகளையும் போலீசாரையும் குவித்து வைத்திருக்கிறது, இங்கிலாந்து அரசு. அசாஞ்சேயும் கடந்த மூன்று மாதங்களாக ஈகுவடார் தூதரகத்திற்குள்ளேயே அடைபட்டுக்கிடக்கிறார்.

www.padippkam.com

ஜெனிவா ஒப்பந்தத்தின்படி, தன்னிடம் அரசியல் தஞ்சம் கோருபவர்களுக்கு அடைக்கலம் கொடுக்க எல்லா நாடுகளுக்கும் உரிமை உண்டு. அமெரிக்காகூட பலருக்கும் தஞ்சமளித்துள்ளது; அளித்துவருகிறது. ஆனால், அமெரிக்கா அளிக்கும் அரசியல் தஞ்சத்திற்குப் பின்னால் உலக மேலாதிக்கம் எனும் மிகப் பெரிய சதிதான் ஒளிந்து கொண்டிருக்கிறது.

முன்னாள் சோவியத் யூனியனிலிருந்து தப்பியோடிய சோல்ஜெனிட்சின் போன்ற சோசலிச எதிரிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததுடன், அவர்கள் சோசலிசத்திற்கு எதிராகச் செயல்பட அமெரிக்கா தளமமைத்துக் கொடுத்திருக்கிறது. சீனாவின் தியான்மென் சதுக்க போராட்டக்காரர்கள் உள்ளிட்டு, சீன அரசிற்கு எதிரானவர்கள் பலருக்கும், ''மனித உரிமைப் போராளிகள்'', 'ஜனநாயகக் காவலர்கள்' எனப் பட்டமளித்து, அவர்களுக்கு அரசியல் தஞ்சமளிப்பதை அமெரிக்கா வாடிக்கையாகக் கொண்டுள்ளது.

இவர்கள் மட்டுமின்றி, கியூபாவின் பாடிஸ்டா, ஈரானின் ஷா, தென் அமெரிக்க நாடுகளின் முன்னாள் சர்வாதிகாரிகள் உள்ளிட்ட ஜனநாயக விரோத சக்திகளுக்கும் அமெரிக்காதான் அன்றும் இன்றும் புகலிடமாக விளங்குகிறது. இப்படிபட்ட மனித குல விரோதிகளுக்குத் தஞ்சமளிக்க அமெரிக்காவிற்கு உரிமையுண்டென்றால், ஒரு மனித உரிமை செயல்வீரருக்குத் தஞ்சமளிக்க ஈகுவடாருக்கு எல்லா வகையிலும் உரிமையும் உண்டு; தார்மீக நியாயமும் உண்டு.

அசாஞ்சே மீது புனையப்பட்டுள்ள வழக்குகளும், அவரது தற்போதைய நிலையும், அவரது தனிப்பட்ட பிரச்சனைகள் அல்ல. உலகம் முழுவதும் ஆதிக்கம் செலுத்திவரும் அமெரிக்காவை எதிர்ப்பவர்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும், அவர்களைச் சர்வதேச சட்டவிதிகள்-மரபுகளை மீறித் தண்டிக்க முயலும் அமெரிக்காவின் மேலாதிக்க வெறியைத்தான் அம்பலப்படுத்திக் காட்டுகிறது.

• அழகு

## அரசு மருத்துவமனைகளின் அவலம்:

# எலிகள் ஒழிகின்றன! பெருச்சாளிகள் நுழைகின்றன!!



முகத்தில் எலி கடித்த காயத்துடன் இறந்த குழந்தையின் சடலம்.

சென்னை போன்ற பெருநகரங்களில், மேலைநாடுகளின் தரத்துக்கிணையான மருத்துவ சிகிச்சையை அளிப்பதாகச் சொல்லிக்கொள்ளும் தனியார் மருத்துவமனைகள் எண்ணிக்கையில் பெருகிக் கொண்டுள்ளன. அதே நகரங்களில் இருக்கும் அரசு மருத்துவமனைகளில் நவீன மருத்துவக் கருவிகளோ, அத்தியாவசிய மருந்துகளோ இருப்பதில்லை. சென்னை பொதுமருத்துவமனையில் புற்றுநோய், இதயநோய் ஆகியவற்றுக்கான 39 மருந்துகள் இருப்பில் இல்லை என்று மருந்துக் கிடங்கின் பதிவேடே கூறுகிறது. அவசர சிகிச்சைகளுக்குத் தேவைப்படும் அத்தியாவசியமான 25 வகை மருந்துகள் மிகக் குறைந்த அளவில்தான் சப்ளை செய்யப்படுகின்றன.

திருச்சி மருத்துவமனையில் கழிவறைகளுக்கு எதிரில் நோயாளிகளைக் கிடத்திச் சிகிச்சையளிக்கின்றனர். மின்தடை காரணமாக அறுவைச் சிகிச்சைகள் கூடப் பல மருத்துவமனைகளில் நடைபெறுவதில்லை.

இவை அனைத்தையும் சகித்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றால், அங்கேயுள்ள மருத்துவர்களின் பொறுப்பின்மையால் பல ஏழைகளின் உயிர்கள் பறிக்கப்படுகின்றன. திருச்சி மருத்துவமனையில் இரட்டைக் குழந்தைகளை அறுவைச் சிகிச்சையின் மூலம் பெற்றெடுத்த காளியம்மாளிடம் ஒரு குழந்தை இறந்துவிட்டதெனச் சொன்ன மருத்துவர்கள், குப்பையோடு குப்பையாக மார்பிலும் காலிலும் கத்திக் காயங்களோடு பச்சிளங்குழந்தையின் பிணத்தை ஒரு அட்டைப்பெட்டியில் போட்டுத் தந்துள்ளனர்.

நாகர்கோவிலில் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட ருக்மணிக்குச் சுவாசிக்க ஆக்சிஜனுக்குப் பதில், மயக்கமடையச் செய்யும் நைட்ரஸ் ஆக்சைடை செலுத்தியுள்ளனர். சில நிமிடங்களில் உடல் எல்லாம் நீலம் பாரித்து வீங்கி விரைத்துப்போனார், ருக்மணி.

அரசு மருத்துவமனைகளின் மோசமான நிலைமை நன்றாகவே தெரிந்தபோதிலும், அதனை நாடி வரும் மக்களின் கூட்டமோ சிறிதும் குறைவதில்லை. தனியார் மருத்து



படிப்பகம்

www.padippkam.com

வமனைக்குச் சென்று தரமான சிகிச்சை பெற வேண்டு மானால் கந்துவட்டிக்குக் கடன் வாங்கினால்தான் சாத்தியம் எனும் அவர்களின் இயலாமைதான், அரசு மருத்துவமனை நோக்கி மக்களைத் தள்ளுகிறது.

அரசு மருத்துவமனைகளோ, தினசரி அகற்றப்படாத குப்பைகளாலும், பராமரிப்பில்லாத கழிவறைகளாலும், முறைப்படி அழிக்கப்படாத மருத்துவக் கழிவுகளாலும் நோய்பரப்பும் மையங்களாகியுள்ளன. மருத்துவமனை வளாகங்களுக்குள் எலிகளும் தெருநாய்களும் பன்றிகளும் சுற்றித் திரிகின்றன.

சென்னை கஸ்தூரிபாய் அரசு மகப்பேறு மருத்துவமனையில் கடந்த ஆகஸ்ட் 15 அன்று பிறந்த பெண் குழந்தை ஒன்றை அங்குள்ள இங்குபேட்டரில் வைத்திருந்தனர். எடைகுறைவாகப் பிறந்த அக்குழந்தை சில நாட்களில் இறந்துவிட்டது. மருத்துவமனை நிர்வாகம், எலிகளால் கடிக்கப்பட்டிருந்த பிணத்தைத்தான் குழந்தையின் பெற்றோரிடம் மறுநாள் ஒப்படைத்தது. கொதித்தெழுந்த உறவினர்களும், அப்பகுதி மக்களும் சாலை மறியலில் ஈடுபட்டதையடுத்து, உடனடியாக அதிரடி நடவடிக்கை எனும்பேரில் 2 மருத்துவர்களைப் பணியிடை நீக்கம் செய்த அரசு, எலிப் பொந்துகளை சிமெண்டால் அடைத்தும், எலிபிடிக்க ஆட்களை அனுப்பியும் மக்கள் நலத்தின் மீது அக்கறையுள்ளது போல நடித்தது. இந்த எலிவேட்டையின்போது மதுரை மருத்துவமனையில் சாரைப்பாம்புகள் பிடிபட்டுள்ளன. ஈரோட்டில் நோயாளியைப் பார்க்க வந்தவர் மருத்துவமனைக்குள்ளேயே பாம்பால் கடிபட்டு இறந்துள்ளார்.

பெரும்பாலான அரசு மருத்துவமனைகள், மூன்று பேர் தேவைப்படும் இடத்தில் ஒருவரை மட்டும் வைத்துக்கொண்டு துப்புரவுப் பணிகளை ஒப்பேற்றுகின்றன. பல மருத்துவமனைகளில், துப்புரவுப் பணிகளை ஒப்பந்த நிறுவனங்களிடம் ஒப்படைத்து விட்டனர். அறுவைச்சிகிச்சைகளில் கழித்துக்கட்டப்படும் சதைத் துண்டுகள் உள்ளிட்ட மருத்துவக் கழிவுகளை ஒப்பந்த நிறுவனங்கள் முறைப்படி அழிப்பதில்லை. அக்கழிவுகளால் ஈர்க்கப்படும் தெருநாய்கள், எலிகள் போன்றவற்றின் புகலிடமாகின்றன, மருத்துவமனைகள். எலிகளை ஒழிப்பதற்கு மிகக்குறைவான நிதி ஒதுக்கப்படுவதால் அப்பணிகளைச் செய்ய யாரும் முன்வருவதில்லை.

சென்னை இராயப்பேட்டை மருத்துவமனை சவக்கிடங்கில் போதுமான குளிர்சாதன வசதி இல்லாததால் மக்கள் நெருக்கமிக்க அப்பகுதி பிணநாற்றத்தில் மூழ்கியுள்ளது.

அர மருத்துவமனைகள் இவ்வாறு கேவலமாகப் பராமரிக்கப்பட்டுவந்தபோதிலும், அங்கு ஏழைகளுக்கு மருத்துவம் இலவசமாகத்தான் இன்னமும் வழங்கப்படுகிறது. இந்த இலவச மருத்துவத்திற்கும் உலை வைக்க அரசு தயாராகி விட்டது.

அடுத்த ஆண்டில் செயல்படத் தொடங்கும் பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக டாக்டர் ஸ்ரீநாத் ரெட்டி என்பவரின் தலைமையில் நியமிக்கப்பட்ட உயர்மட்ட நிபுணர் குழு தந்திருக்கும் பரிந்துரைகள், சுகாதாரத் துறையைக் கூறுபோட்டுத் தனியாருக்குத் தந்துவிடத் துடிக்கிறது.

இராணுவத்துக்கு ரூ.ஒரு லட்சத்து 60 ஆயிரம் கோடியை ஒதுக்கியிருக்கும் அரசு, சுகாதாரத்துறைக்கு ஒதுக்கியது வெறும் 24 ஆயிரம் கோடிதான். இந்த நிதியையும் பாதிக்கும் மேல் குறைக்க நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.5 சதவீதத்தை பொதுச்சுகாதாரத்துக்கு உலக சுகாதார நிறுவனம், ஒதுக்கக் கோருகின்றது. ஆனால் 'நிபுணர்'களோ இதனை 1.58 சதவீதமாகக் குறைத்து, மிச்சத்தை அந்தந்த மாநில அரசுகளே திரட்டிக்கொள்ளட்டும் என வழிகாட்டுகின்றனர்.

அரசு மருத்துவமனைகள் வழங்கும் சிகிச்சைகளை ''நிர்வகிக்கப்படும் சிகிச்சை'' (மேனேஜ்டு கேர்) எனும் பெயரில் மாற்றி அமைக்கச் சொல்கிறது திட்ட முன்வரைவு. இம்முறைப்படி, தற்போது அரசு மருத்துவமனைகளில் இருக்கும் நோய்காண் பிரிவு, புறநோயாளிகள்பிரிவு, அறுவைச் சிகிச்சை பிரிவு, தீவிரசிகிச்சைபிரிவு போன்றவை கூறுகளாகப் (செல்போன் சேவைகளில் இருக்கும் பேக்கேஜ்கள் போல) பிரிக்கப்பட்டு, அவை கார்ப்பரேட் மருத்துவ நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்





படிப்பகம்

www.padippkam.com

படும். மக்களுக்குத் தனித்தனி சேவைகளாக வழங்கும் கார்ப்பரேட் நிறுவனங்கள், அரசின் நிதியை அதற்கெனப் பெற்றுக் கொள்ளும். மகப்பேறு, குழந்தை நலம், தடுப்பூசி ஆகியவற்றை மட்டும் அத்தியாவசிய சுகாதாரக் கூறு (பேக்கேஜ்) என்ற ஒரு பிரிவில் அரசின் நலத்துறை தன்வசம் வைத்துக் கொண்டு, மற்ற எல்லா நோய்ச் சிகிச்சைகளையும் கார்ப்பரேட் நிறுவனங்கள் வசம் ஒப்படைக்கும். பயனாளிகளான நோயாளிகள் அனைவரும் காப்பீட்டுத் திட்டத்தில் இணைக்கப்படுவர். காப்பீடு பெற்றவர்கள் மட்டுமே சிகிச்சை பெறத் தகுந்தவராவர்.



விரிவாக்கப்பட்ட மருத்துவக் காப்பீடு திட்டத்தைத் தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைக்கும் முதல்வர் ஜெயா. (கோப்புப் படம்)

இந்த முறை நடைமுறைப்படுத்தப்பட்ட மேலைநாடுகளில் ஏழைமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்ட முன் அனுபவமுள்ளது. மருத்துவக் காப்பீட்டில் இணைக்கப்பட்ட அம்மக்களுக்கு அவர்கள் கட்டிவரும் பிரீமியத் தொகைக்கேற்ற சிகிச்சைகள் மட்டுமே வழங்கப்பட்டன. சிகிச்சை செலவைக் குறைத்து இலாபத்தை அதிகரிக்க சேவையின் தரத்தைக் குறைத்துக் கொண்டன, கார்ப்பரேட் நிறுவனங்கள். நோயாளிகளின் மருத்துவக் காப்பீடு குறைவாகவும், கண்டறியப்பட்ட நோய் கடுமையானதாகவும் இருந்தால், நோயாளிகள் தங்களது பிரீமியத்தை உயர்த்திக் கொண்டால் மட்டுமே (டாப் அப்) அந்நோய்க்கு சிகிச்சை தொடங்கப்படும். உதாரணமாக, ஒரு நோயாளிக்கு நோய் கண்டறியும் பிரிவுக்கு மட்டும் காப்பீடு இருக்கும்போது இதயநோய் கண்டறியப்படுகிறது என்றால், அவர் சிகிச்சைக்கான காப்பீடு பிரீமியத்தை 'டாப் அப்' ஆக செலுத்தினால் மட்டுமே அவருக்கு இதயநோய்க்கான சிகிச்சை ஆரம்பமாகும். அங்கே கருணை, மனிதாபிமானம் அனைத்துமே செல்லாக்காசுதான். இதே முறைதான் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இங்கே வரப்போகிறது.

முந்தைய தி.மு.க. அரசு, கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் பெயரில் ஸ்டார் மருத்துவக் காப்பீட்டு நிறுவனத்திற்கு ரூ.500 கோடிக்கும் மேல் வழங்கி, -ற்றுக்கணக்கான தனியார் மருத்துவமனைகளை அத்திட்டத்தில் சேர்த்தது. அரசு மருத்துவமனைகளிலிருந்து நோயாளிகளை 'கலைஞர் காப்பீடு' பெற்ற தனியார் மருத்துவமனைகளுக்கு 'ஆற்றுப்படுத்தினர்' அரசு மருத்துவர்கள். தனியார் மருத்துவமனைகளோ, ஸ்டார் மருத்துவக் காப்பீட்டு நிறுவனத்திடம் சிகிச்சைக்கான செலவை வசூலித்துக் கொண்டன.

கருணாநிதியின் இந்தத் தனியார்மயத் திட்டத்தைக் கடுமையாகச் சாடிய ஜெயலலிதாவோ, ஆட்சிக்கு வந்த பின்னர், 'விரிவுபடுத்தப்பட்ட காப்பீட்'டை அறிமுகப்படுத்தி, மருத்துவம் தனியார்மயமாவதை மேலும் தீவிரப்படுத்தினார்.

அம்மாவின் திட்டப்படி, அரசு மருத்துவமனைகளில் செயல்படும் கட்டண சிகிச்சை முறை தற்போது தனியார் காப்பீட்டு நிறுவனத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. இதன்படி மருத்துவக் காப்பீடு வைத்துள்ளவர்கள், கட்டணப் பிரிவில் சிகிச்சை பெற்றுக் கொண்டால், அதற்கான செலவுகளை தனியார் காப்பீடு நிறுவனம் அந்தந்த மருத்துவமனைக்குத் தந்துவிடும். கடந்த ஜனவரியில் இருந்து இதுவரை அரசு மருத்துவமனைகள் ரூ.94 கோடி ரூபாய்வரை காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்றுள்ளன.

சுகாதாரத்துறை அமைச்சர், ''இந்த வருவாயைக் கொண்டு மருத்துவமனைகள் தங்களது மேம்பாட்டுப் பணியை செய்து கொள்ளலாம்'' என்கிறார். இதுதான் திட்டக்கமிசன் வகுத்தளித்துள்ள 'வருவாயை ஈட்டிக் கொள்ள வேண்டிய' முறை. இனி பொது சுகாதாரத்துறை, அரசு மருத்துவமனை மேம்பாட்டுக்கு நிதி ஒதுக்காது.

மக்களைப் பழக்கப்படுத்துவதற்காக 'விரிவுபடுத்தப்பட்ட' மருத்துவக் காப்பீட்டின் பிரீமியத்தை அரசே செலுத்தி வருகிறது. அடுத்து மக்களே இந்த பிரீமியத்தை செலுத்தவேண்டும் என்று மாற்றப்படலாம்.

அப்போதும் அரசு மருத்துவமனைகள் இருக்கும். ஆனால், மருத்துவக் காப்பீடு பெறாதவர்களுக்கு அங்கே இடம் இருக்காது. நோய் கண்டறியப்படுகையில், அதற்குரிய கூடுதல் காப்பீடு செலுத்தாவிட்டால் ஆரம்ப கட்ட சிகிச்சைகூட கிடைக்காது. 'சிகிச்சை பெறக் காசு இல்லாவிட்டால் செத்துத் தொலை' என்பதுதான் இந்த சீர்திருத்தத்தின் விளக்கவுரை.

காசு இல்லாவிட்டால் குடிக்க நீரில்லை. காசில்லாவிட்டால் கல்வி இல்லை. இனி, காசில்லாவிட்டால் மருத்துவமும் இல்லை என முடிவு செய்து விட்ட இந்த அரசை அடித்து நொறுக்கி அழிக்காமல் விட்டுவைத்தால், நிச்சயமாக நமக்கு எதிர்காலமே இல்லை.

● அன்பு



படிப்பகம்

www.padippkam.com

# அம்பேத்கரியம் சாதித்தது என்ன?

**தீண்டாமைக்கும் சாதியக் கட்டமைப்புக்கும் எதிராக அம்பேத்கரால் நடைமுறைப்படுத்தப்பட்டு, தற்கால தலித் இயக்கங்களாலும் பின்பற்றப்படும் நான்கு மூல உத்திகள் எதையும் சாதிக்கவில்லை.**

''புதிய ஜனநாயகம்'' 2012 செப்டம்பர் இதழில் ''தாழ்த்தப்பட்ட மக்கள் வேண்டுவது சீர்த்திருத்தமா? புரட்சியா?'' என்ற கேள்வியை எழுப்பும் நீண்ட கட்டுரை வெளியிடப்பட்டிருந்தது. அதில், பல எடுத்துக்காட்டுகளுடன் சில முடிவுகளும் கேள்விகளும் முன்வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் தொகுப்பு பின்வருமாறு:

● இதுவரை இத்தனை ஆண்டுகளாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரசு மேற்கொண்ட சமூக நீதிக்கான இட ஒதுக்கீடுகளும், தீண்டாமை-வன்கொடுமைத் தடுப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டங்களும், வளர்ச்சி-முன்னேற்றத்துக்கான திட்டங்களும் நிதி ஒதுக்கீடுகளும் இம்மக்கள் வாழ்வில், சமூகத்தில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்துவிடவில்லை. மாறாக, இத்தகைய முயற்சிகள் மூலம் சாதிய சமத்துவத்தை ஒருக்காலும் ஏற்படுத்தி விட முடியாது என்பதையே நாளும் பெருகிவரும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான வன்கொடுமைத் தாக்குதல்கள் திரும்பத் திரும்பக் காட்டுகின்றன.

● ஆங்கிலேயக் காலனியவாதிகளால் கட்டியெழுப்பப்பட்டு, காந்தி-நேரு-காங்கிரசினால் வரித்துக் கொள்ளப்பட்ட இந்திய அரசுக் கட்டமைப்பு என்பது சாதிய சமுதாய அமைப்பு குலைந்து போகாமல் காப்பதற்கானதுதான். இதன் அங்கங்களான அதிகார வர்க்கம், இராணுவம், போலீ, நீதிமன்றங்கள் எல்லாம் சாதிய சமுதாய அமைப்பைக் கட்டிக் காப்பதற்காக உள்ளவைதாம்.

அம்பேத்கர் புனா ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதைப் போல சித்தரிக்கும் ஓவியம்.



இந்த நேக்கத்துக்காகவே போதனையும் பயிற்சியும் அளித்து வளர்க்கப்பட்ட மேற்படி அரசு அமைப்பினரே ஒரு தனிவகை சாதியினர். சமத்துவத்தையோ, ஜனநாயகத்தையோ இந்தத் தனிவகைச் சாதிய அமைப்பு ஒரு போதும் ஏற்றுக் கொள்ளாது. இத்தகைய அரசு அமைப்பை, தனிவகைச் சாதியினை தாக்கித் தகர்த்துவிட்டு, தமக்கென ஒரு புதிய அரசுக் கட்டுமானத்தை நிறுவிக் கொள்வதுதான் அரசியல் புரட்சி; இவ்வாறான அரசியல் புரட்சி ஒன்றின்றி சமூகப் புரட்சி சாத்தியமே கிடையாது. இப்போதுள்ள அரசுக் கட்டுமான அமைப்பை அப்படியே தக்க வைத்துக் கொண்டு ஒடுக்கப்படும் சாதியினர் தமது நலன்களுக்கான சமத்துவம், ஜனநாயகம், சமூக நீதியை நிறுவுவதற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியாது.

● பெரியார், அம்பேத்கர் முதலியவர்களுக்கு எவ்வளவுதான் நேர்மையான, உயரிய நோக்கங்கள் இருந்தபோதும் அவர்கள் முன்வைத்த தீர்வுகள் இந்தக் கட்டமைவைத் தகர்த்து, புதிய கட்டுமானத்தை நிறுவுவதற்கான புரட்சிகர உள்ளடக்கத்தையும் வழிமுறைகளையும் கொண்டவையாக இல்லை. மார்க்சிய ஆசான்களாலேயே முன்வைக்கப்படாத, உலகில் வேறெங்கும் இல்லாத தனிச்சிறப்பான சாதியாதிக்க சமூகத்தைக் கொண்டது இந்திய நாடு, என்கிற பேருண்மையைப் பெரியாரும் அம்பேத்கரும் மட்டுமே கண்டுபிடித்து விட்டதாக அம்பேத்கரிய, பெரியாரியவாதிகளால் உரிமை பாராட்டப்படுகிறது. ஆனால், அச்சாதி ஆதிக்க சமூகத்தைத் தகர்க்கவும், சமத்துவ, ஜனநாயக சமுதாயத்தை உருவாக்கவும் கூடிய, உலகில் வேறெங்கும் இல்லாத தனிச் சிறப்பான, புரட்சிகரமான தீர்வுகளையும் வழிமுறைகளையும் அவர்கள் முன்வைத்துள்ளார்களா?

● அடுக்கடுக்கான படிநிலை சாதிய சமுதாயத்தில் சாதி இந்துக்களுக்கு மட்டுமே சாதி ஆதிக்கமும் அதிகாரமும் உள்ளது. அவை பலவீனமடைவதாக உணரும் போதெல்லாம் ஆதிக்க சாதிகள் புதுப்புது நடைமுறைகள் மூலம் மீண்டும் தமது அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் நிலைநிறுத்திக் கொள்கிறார்கள். ஆகவே, வேண்டுவது மேலும் மேலும் சீர்திருத்தங்கள் அல்ல!



படிப்பகம்

www.padippkam.com

கெட்டி தட்டிப் போயிருக்கும் சாதியாதிக்க சமுதாயத்தை உலுக்கித் தலைகீழாகப் புரட்டிப் போடும், உழைக்கும் மக்கள் தலைமையிலான சமூக அரசியல் புரட்சி! ''தலித்'' தலைவர்களும் அமைப்புகளும் அத்தகைய புரட்சிக்குத்தான் பணியாற்றுகிறார்களா?

தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக மற்றும் அரசியல் நிலைமை, சாதிய ஒடுக்குமுறை பற்றி இங்கே தொகுக்கப்பட்டிருக்கும் எடுத்துக்காட்டுகள், தமிழ்நாட்டில் உள்ளவை மட்டும்தாம். நாட்டின் பிற மாநிலங்களில், குறிப்பாக அரியானா, பீகார், முன்னாள் உ.பி. மற்றும் முன்னாள் ம.பி., ஒரிசா, மராட்டியம், கர்நாடகம் மற்றும் ஆந்திராவில் உள்ள நிலைமைகளோ படுமோசமானவை.



அம்பேத்கர், நேரு அரசில் சட்டத்துறை அமைச்சராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறார். (கோப்புப் படம்)

ஆகவே, நாட்டிலுள்ள ''தலித்'' அரசியல் கட்சிகளும், ''தலித்'' விடுதலை இயக்கங்களும், ''தலித்'' அறிவுஜீவிகளும் உடனடியாகச் செய்ய வேண்டியது ஒன்றுண்டு. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் தீண்டாமை, வன்கொடுமைகளை முறியடிப்பதற்கும், சமூக விடுதலைக்கும் அம்பேத்கர் காலந்தொட்டு இதுவரை, இவ்வளவு காலமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஏற்படுத்தியுள்ள விளைவுகளைத் தொகுத்தறிய வேண்டியுள்ளது. யதிருப்தியை உதறிவிட்டு ய பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

ஓட்டுக் கட்சி அரசியலில் குதித்து சந்தர்ப்பவாத அரசியல் கூட்டுகள் அமைத்துக் கொண்டு, தாழ்த்தப்பட்ட ஆதிக்கச் சாதிகளுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் விவாசமாக நடந்து கொண்டு, மக்களுக்குத் துரோகமிழைத்தும் கருங்காலித்தனம் செய்தும் ஒரு சில தனிநபர்கள் குடியர த் தலைவர், துணைத் தலைவர், துணைப் பிரதமர், மத்திய-மாநில அமைச்சர் பதவிகளைக் கைப்பற்ற முடிந்தது. இடஒதுக்கீடு மூலம் அர ப் பதவிகளைப் பிடித்து, அதிகார வர்க்கம்-போலீசின் உயர்ந்த பதவிகளையும்கூட ஒரு சிலர் பிடிக்க முடிந்தது. (அவர்களிலும் மாயாவதி, ராம்விலாஸ் ப வான், முத்துக்கருப்பன் போன்ற ஒரு சிலர் கோடீ வரர்களாகவும் முடிந்தது.) தாழ்த்தப்பட்ட மக்கள் தொகையில் இத்தகையவர்கள் ஒரு சதவீதத்தினர் கூட கிடையாது. அதேசமயம், இப்படி உயர்ந்தவர்கள்கூட ஆதிக்க சாதியினருக்குச் சமமான சமூக மதிப்பைப் பெற்றுவிட முடியவில்லை. துணைப் பிரதமராக இருந்த ஜெகஜீவன்ராம் முதல் மத்திய அமைச்சராக இருந்த தென்காசி அருணாச்சலம் வரை சாதி அடிப்படையில் இழிவுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

ஆனால், தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கி வைக்கப்பட்டு, அதிகரித்த அளவில் வன்கொடுமைத் தாக்குதல்களுக்கு இலக்காகி வரும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு சமூகம் என்ற முறையில் சமத்துவம், விடுதலை என்பதை நோக்கி ஒரு சிறு அளவுகூட முன்னேறி விடவில்லை. அம்பேத்கரால் முன்வைக்கப்பட்ட தலித்-சூத்திரக் கூட்டு என்ற பகுஜன் சமாஜ் வழியில் நாட்டிலேயே பெரிய மாநிலமான உத்திரப்பிரதேசத்தில் முதன்முறையாக ''தலித்'' முதலமைச்சரானார், மாயாவதி. அவர் ஆட்சியில்கூடத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் தடுத்து நிறுத்தப்படவில்லை; முன்னைவிடப் பெருகித்தான் வந்துள்ளன.

அதற்குக் காரணம், பத்து மாநிலங்களில் கால் பதித்துள்ள பகுஜன் சமாஜ் கட்சியின் மாயாவதி, ராம்விலாஸ் ப வான், அம்பேத்கரின் பேரன் பிரகாஷ் அம்பேத்கர், அதாவாலே, திருமாவளவன், கிருஷ்ணசாமி போன்ற ''தலித்'' தலைவர்கள் ஓட்டுக் கட்சி அரசியலில் புகுந்து சீரழிந்து போய் விட்டார்கள்; அம்பேத்கரின் தத்துவத்தையும் வழிமுறைகளையும் புரிந்து கொள்ளவுமில்லை; பற்றி நிற்கவும் இல்லை-என்று நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே சிந்திக்கும் காஞ்சயிலைய்யா, ஆனந்த் தெல்தும்டே போன்ற இன்றைய ''தலித்'' சிந்தனையாளர்களும் அறிவுஜீவிகளும் வாதிடுகிறார்கள்.

உண்மையில், ''தலித்'' அரசியல் தலைவர்கள் அம்பேத்கரைத் தமது சமூக மற்றும் அரசியல் குறியீடாகவும் அடையாளமாகவும் கருதுகின்றனர். அம்பேத்கரை வழிபாட்டுக்குரிய ஒரு அரசியல் ''தெய்வமாக''வே முன்வைக்கின்றனர். அவரது தத்துவம் மற்றும் வழிமுறைகள் மீதான விமர்சனப்பூர்வ ஆய்வுகள், மதிப்பீடுகள் எதையும் தாழ்த்தப்பட்ட சமூகம் முழுமைக்கும் எதிரான தாக்குதல்களாகவே சித்தரிக்கின்றனர். அம்பேத்கரின் சிலைகளை அவமரியாதை செய்யும் சாதி இந்துக்களை வெறுப்பதைப் போல அம்பேத்கரின் கருத்துக்களை விமர்சிப்பவர்களை வெறுக்கிறார்கள். திருமாவளவன் போன்ற ''தலித்'' தலைவர்களுக்கு எதிரான விமர்சனங்கள்கூட இதற்கு நிகராகவே வெறுக்கப்படுகின்றன.

விடுதலைப் புலித் தலைவர் பிரபாகரனை விமர்சிப்பவர்கள் மட்டுமல்ல; அவர் கொல்லப்பட்டு விட்டார் என்ற உண்மையைச் சொல்பவர்கள் தமிழினத் துரோகிகள் என்று முத்திரை குத்தப்படுகிறார்கள். திருமாவளவனின் குறைபாடுகள், சந்தர்ப்பவாதங்களை எடுத்துரைப்பவர்கள் ''தலித் எதிரிகள்'' என்று சித்தரித்துத் தாக்கப்படுகிறார்



படிப்பகம்

www.padippkam.com

கள். இந்தச் சூழலில் அம்பேத்கரியம் பற்றிய விமர்சனப் பூர்வமான மதிப்பீடுகள் எவ்வாறு சித்தரிக்கப்படும் என்று சொல்ல வேண்டியதில்லை! என்றாலும், அப்பணி இன்றைய நிலையில் அவசியமாக உள்ளது.

தீண்டாமை மற்றும் சாதியக் கட்டமைப்புக்கு எதிராக அம்பேத்கரின் பங்களிப்புகளை சாரமாகத் தொகுத்துச் சொல்வதற்குப் பதிலாக, அவர் விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட மாமேதையாகவும், புரட்சியாளராகவும் காட்டுவதற்காக அம்பேத்கரின் மேற்கோள்கள், தொகுப்பு -ல்கள், உரைகளுக்குள் தலையைக் கவிழ்த்துக் கொள்ளும்படி ''தலித் அறிவுஜீவிகள்'' செய்கிறார்கள். ஆனால், தீண்டாமை, சாதியக் கட்டமைப்பைத் தகர்ப்பதற்கு அரசியல் மற்றும் சமூகத்தளங்களில் அவர் முன்மொழிந்த தீர்வுகளும் நடைமுறைகளும் தோற்றுப் போய்விட்டன என்பதுதான் எதார்த்த உண்மையாக உள்ளன.

இந்த உண்மையை, தலித் ஆய்வுகளுக்கான இந்தியக் கழகம் 2008-ஆம் ஆண்டு ஏற்பாடு செய்த அம்பேத்கர் நினைவு முதற் சொற்பொழிவில் பிரெஞ்சு பேராசிரியர் கிறிஸ்டோப் ஜெஃப்பர்லோ மிகவும் எளிமையாகவும் சாரமாகவும் நிரூபித்திருக்கிறார். தீண்டாமைக்கும் சாதியக் கட்டமைப்புக்கும் எதிராக அம்பேத்கர் தன் வாழ்நாளில் நான்கு மூல உத்திகளை மேற்கொண்டார் என்று தொகுக்கிறார் கிறிஸ்டோப் ஜெஃப்பர்லோ.

''சமனற்ற வெவ்வேறு படிநிலைகளைக் கொண்ட (இந்திய) சமூகம், கீழ்நிலை சாதிகள் (சூத்திரர்கள்) - தலித்துகள் என்றும், சூத்திரர்களும் தலித்துகளுமே பல சாதிகள் என்றும் பிளவுபட்டுள்ளனர். டாக்டர் அம்பேத்கரின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, முதலாவதாக ''தலித்'' மக்களை ஐக்கியப்படுத்துவது; பிறகு தலித்துகள் - சூத்திரர்கள் அடங்கிய பகுஜன் சமாஜ் மக்களை ஐக்கியப்படுத்துவது. இரண்டாவதாக, அவர்கள் அனைவருக்கும் தனியொரு அடையாளத்தை உருவாக்கிக் கட்டமைப்பது; அது அவர்களுக்கு சமஸ்கிருதமயமாக்கத்திலிருந்து (பார்ப்பனமயமாக்கத்திலிருந்து) விடுபடுவதற்கான மாற்று வழியைத் தரும். இந்த இரண்டு நோக்கங்களையும் ஈடேற்றுவதற்காக நான்கு வெவ்வேறு மூல உத்திகளை - போர்த்தந்திரங்களை - தமது நாற்பதாண்டு கால நீண்ட பொதுவாழ்வில் அம்பேத்கர் நடைமுறைப்படுத்தினார்.

1. தீண்டத்தகாதவர்களுக்கு மண்ணின் மைந்தர்கள் என்ற அடையாளத்தை உருவாக்கினால், அவர்கள் சாதிகள் அடிப்படையில் அல்லாத ஒரு மாற்று அடையாளத்தைப் பெறுவார்கள் என்று அம்பேத்கர் நம்பினார்; அவர்கள் தமது சுயமரியாதையை மீட்பதற்காகவும், தம்மிடையே உள்ள உட்பிரிவுப் பிளவுகளைக் கடப்பதற்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தாம் மண்ணின் மைந்தர்கள் என்ற பெருமைக்குரிய வரலாற்றை அவர்களுக்கு உருவாக்கித் தருவதற்கு அம்பேத்கர் முயன்றார். தீண்டத்தகாதவர்கள் பூர்வீகத்தில் பௌத்தர்கள், இந்த மண்ணின் மைந்தர்கள் என்பதை உணருவார்களேயானால், அவர்கள் தமக்குள் நிலவும் சாதியப் பிளவுகளைக் கடந்து தாம் ஒரே இனக்குழுவினர் என்ற நிலைப்பாடு எடுப்பார்கள்; இதனால் பழைய, ஒட்டுமொத்தக் கட்டமைப்புக்கும் எதிராக எழுந்து நிற்பார்கள் என்று அம்பேத்கர் நம்பிச் செயல்பட்டார்.

2. தேர்தல் அரசியல் ஈடுபாடு. இந்து சமுதாயத்தில் உண்மையில் நிலவும் முரண்நிலை - பிளவு, பிராமணர் - பிராமணர் அல்லாதவர் என்பதல்ல; தீண்டத்தக்கவர் - தீண்டத்தகாதவர் என்பதாகும்; இதனால் அனைவருக்கும் சமமான வாக்குரிமை தரும் பிரதேச அடிப்படையிலான தொகுதிகள் என்ற தேர்தல் முறை ஏற்கக்கூடியதல்ல. இதனால் ஒவ்வொரு தொகுதியிலும் தீண்டத்தகாதவர்கள் சிறுபான்மையினர் ஆகிவிடுவார்கள் என்பதால், அவர்கள் பிரதிநிதித்துவம் பெற முடியாமல் போகும். ஆகவே, தீண்டத்தகாதவர்களுக்கென தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும் அல்லது தீண்டத்தகாதவர்களைத் தனியான வாக்காளர்களாகக் கொள்ளவேண்டும் என்று அம்பேத்கர் கோரினார்.

இரண்டாவது வட்டமேசைக்குப் பிறகு வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஒதுக்கீடு செய்து, தீண்டத்தகாதோரைத் தனி வாக்காளர் தொகுப்பாக அங்கீகாரம் செய்யப்பட்டது. அது இந்து சமூகத்தை வகுப்புவாரியாகப் பிளவுபடுத்தி விடும் என ஆத்திரமுற்ற காந்தி, ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்து உண்ணாநிலையை மேற்கொண்டார். 71 பிரதிநிதிகளை மட்டுமே கொண்ட தனிவாக்காளர் தொகுப்புமுறையைக் கைவிட்டால், 148 தனித் தொகுதிகள் ஒதுக்கீடு தருவதாக காந்தி கும்பல் பேரங்கள் நடத்தியபோது, அம்பேத்கர் பணிந்து

1956, அக்.14 அன்று மகாராஷ்டிராவிலுள்ள நாகபுரியில் பல -றாயிரக்கணக்கான மகர் சாதியினரோடு புத்த மதத்தைத் தழுவும் அம்பேத்கர். (கோப்புப் படம்)





படிப்பகம்



புனா ஒப்பந்தத்தை ஏற்றார். (காந்தியின் உண்ணாநிலை, தீண்டத்தகாத மக்களுக்கு எதிராக இந்து சமூகத்தை ஆத்திரங்கொள்ளச் செய்துவிடும்; விளைவுகள் விபரீதமாகிவிடும் என்பதால் காந்தியின் நிர்ப்பந்தத்தை ஏற்கும்படியானது என்று அம்பேத்கரும் பிற தலித்துகளும் வாதிடுவதுண்டு).

அந்த அடிப்படையில், 1936-இல் அம்பேத்கர் நிறுவிய இந்தியத் தொழிலாளர் கட்சி அடுத்த ஆண்டு நடந்த தேர்தல்களில் பெருந்தோல்விகளைச் சந்தித்தது. அதற்கு முக்கியக் காரணம், அம்பேத்கர் தன்னைப் பொதுவில் தொழிலாளர்களின் தலைவராகக் காட்டிக் கொண்டு, தீண்டத்தகாதவர்களுக்கு அப்பாலுள்ள வெகுமக்கள் ஆதரவோடு பரந்த சமூக அடித்தளத்தைப் பெற முயன்ற அதேசமயம், வர்க்க அடிப்படையிலான மார்க்சியப் பார்வையை நிராகரித்து, இந்திய சமூகத்தின் அடிப்படை அலகாக சாதியம் மட்டுமே இருக்க முடியும் என்ற முரண்பட்ட இரட்டை நிலையை மேற்கொண்டதுதான். மேலும் மராட்டியத்திலேயே மகர், மாங்க், சாம்பர் ஆகிய உட்பிரிவுகளைக் கடந்த தலித் ஒற்றுமையை ஏற்படுத்துவதிலேயே அவர் தோல்வியடைந்ததை இந்தியத் தொழிலாளர் கட்சி நிராகரிக்கப்பட்டது காட்டியது. அடுத்து, அவர் நிறுவிய பட்டியல் சாதிகளின் பேரவையும் தேர்தல் களத்தில் பெருந்தோல்வியைக் கண்டது. சாதிய அடித்தளத்தைப் பரவலாக்குவது மற்றும் தீண்டத்தகாத மக்கள் நலன்களை மட்டும் காப்பது ஆகிய நிலைகளிடையே ஊசலாடியதுதான் அவரது அரசியல் தோல்விக்கும் பின்னடைவுக்கும் காரணமாயின. இறுதியில், சாதிய அடிப்படையைக் கடந்ததாக இந்தியக் குடியரசுக் கட்சியை அம்பேத்கர் நிறுவினாலும், அவரே நேரடியாகத் தோல்வியைத் தழுவி, தேர்தல் அரசியலில் பின்னடைவே நிரந்தரமானது.

> **"தேர்தல் அரசியல் ஈடுபாடு தலித் அரசியல் தலைவர்கள், அமைப்புகளை மிக மோசமான அரசியல் சந்தர்ப்பவாதத்திலும் பிழைப்புவாதத்திலும் மூழ்கடித்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்கள் அடகு வைக்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெறுவதற்கு மாறாக, தேர்தல் அரசியல் மீது நம்பிக்கை வைக்கும்படி சீரழிக்கப்படுகிறார்கள். ஆட்சியாளர்களையும் அதிகார அரசு அமைப்பையும் பகைச் சக்திகளாகக் கருதி அவர்களை எதிர்த்துப் போராடி, வீழ்த்த வேண்டிய பணிகளை - பாதையை நிராகரிக்கின்றனர்."**

3. அம்பேத்கரின் அரசியல் செயல்பாடு, அரசியல் கட்சிகளை உருவாக்கித் தேர்தல்களில் பங்கெடுப்பதோடு நின்றுவிடவில்லை. தனது தனிப்பட்ட தகுதிகளின் அடிப்படையில் ஆங்கிலேய அல்லது காங்கிரசு அரசாங்கங்களில் செல்வாக்குகளை ஏற்படுத்தித் தீண்டத்தகாதவர்களின் நலன்களுக்கான தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ளவும் கடுமையாக முயன்றார். ஆங்கிலேய ஆட்சியின் கீழ், ஒருபுறம் மேல்சாதிகளின் பிரதிநிதியாகிய காங்கிரசின் ஆதிக்கம் நிலவிய தேசவிடுதலை இயக்கத்தை நிராகரித்தார். இதனால் தனது சமத்துவ உணர்வுகளைப் பகிர்ந்து கொண்ட ஆங்கிலேயர்களுடன் நெருக்கம் கண்டு, சாதி இந்துக்களுக்கு எதிராகத் தலித்துகள் பாதுகாப்பைப் பெறமுடியும் என்று நம்பினார். மறுபுறம், இந்தியராகிய அம்பேத்கரால் தனது நாடு ஒரு அந்நிய சக்தியினால் ஆதிக்கம் செலுத்தப்படுவதையும், அதற்கு மேல் அவர் மிகவும் நேசித்த சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மதிப்பீடுகள் நசுக்கப்படுவதையும் சகித்துக் கொள்ள முடியவில்லை. இதனால் ஒருவகைக் குழப்பத்தில் மூழ்கி இருந்த அம்பேத்கர் 1930-களில் காங்கிரசுக்கு எதிரான பகைமை நிலைமை காரணமாக தேசிய உணர்வுகளை மீறி, ஆங்கிலேயர்களுடன் சமசரம் செய்து கொண்டு தீண்டத்தகாதவர்களுக்கு ஓரளவு சாதகமான பலன்களைப் பெற முயன்றார். இதனால் ஆங்கிலேயர் ஆட்சியில் தலித் தலைவர்கள் சில பதவிகளையும் தீண்டத்தகாதோர் சில சலுகைளையும் பெற்றனர். ஆனால், அம்பேத்கரின் கட்சிகள் அடுத்தடுத்துத் தேர்தல் தோல்விகளைச் சந்தித்ததால் ஆங்கிலேய ஆட்சியில் தலித்துகளின் அமைப்புகள் என்ற வகையில் தலித்துகள் விரும்பிய ஆதாயங்களை அடைய முடியவில்லை.



1946-லிருந்து 'விடுதலை'யை நோக்கி நாடு நகர்ந்த போது நடைமுறை அரசியலுக்குத் தகுந்தபடி காங்கிரசுக்



படிப்பகம்

www.padippkam.com

கட்சியுடன் அம்பேத்கர் நெருக்கமானார். காந்தியின் நிர்ப்பந்தம் காரணமாக 1947 'விடுதலை'க்குப் பிறகு அமைந்த அமைச்சரவையில் அம்பேத்கரைச் சட்ட மந்திரியாக்கினார், நேரு. எந்தவித நிபந்தனையும் விதிக்கப்படவில்லை; வெளியிலிருப்பதை விட அரசாங்கத்தில் பங்கேற்றுப் பட்டியலினச் சாதிகளின் நலன்களுக்கு எளிதில் சேவை செய்ய முடியும் என்பதால் காங்கிரசு ஆட்சியில் அம்பேத்கர் பங்கேற்றார். அரசியல் நிர்ணயச் சட்ட வரைவுக் கமிட்டித் தலைவர், சிறுபான்மையினர் கமிட்டி உறுப்பினர் என்று பல கமிட்டிகளில் அம்பேத்கர் பங்கேற்று தலித்துகளின் நலன்களுக்கான விவாதங்களில் பங்கேற்றார். என்றாலும் வல்லபாய் பட்டேல், ராஜேந்திர பிரசாத், பட்டாபி சீதாராமையா போன்ற காங்கிரசுப் பிற்போக்காளர்களின் முயற்சியாலும் நேருவின் துரோகத்தாலும் இந்து சிவில் சட்டத்தை நிறைவேற்ற முடியாமல் அம்பேத்கர் முறியடிக்கப்பட்டார். ஆட்சியாளர்களுடன் அம்பேத்கர் மேற்கொண்ட கூட்டுறவு மூலம் அமெரிக்க மற்றும் ஆங்கிலேய பாணியிலான, வலுவான முதலாளிய மைய அரசமைப்பை உருவாக்குவதில் வெற்றி பெற்ற அம்பேத்கர், அதற்குள்ளாகவே இந்து சமூக அமைப்பில் சீர்திருத்தங்களைப் புகுத்தும் முயற்சியில் முறியடிக்கப்பட்டு, கசப்பான உணர்வுடன் அரசாங்கத்திலிருந்து வெளியேறினர். தொடர்ந்து வந்த இந்தியக் குடியரசின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியும் அடைந்தார்.

*4. மதமாற்றம்:* அம்பேத்கரின் கடைசி மூலஉத்தி. சாதிய அமைப்பிலிருந்து விடுபடுவதற்கு வேறொரு மதத்திற்கு மாறிவிடுவது என்ற முடிவு இந்து மதம் பற்றிய அம்பேத்கரின் ஆய்விலிருந்து தர்க்கரீதியாக வந்ததாகும். ''தமக்குத் தேவை சமூக சமத்துவம்; முடிந்தவரை இந்து அமைப்புக்குள் அதைப் பெறுவோம்; இல்லையானால் பயனற்ற இந்து அடையாளத்தைத் தூக்கியெறிவோம்; இந்துத்துவத்தை விட்டொழிக்க வேண்டுவது அவசியமானால், இந்துக் கோவில்கள் பற்றி எங்களுக்குக் கவலையில்லை'' என்று 1927 ஒடுக்கப்பட்ட வகுப்புகளின் மாநாட்டுக்குத் தலைமையேற்று அம்பேத்கர் பேசினார். அதைத் தொடர்ந்து பத்துப் பன்னிரண்டு மகர் சாதியினர் இசுலாத்துக்கு மதம் மாறினர்.

பின்னர், 1935 இயோலா மாநாட்டில், ''இந்து மதத்தில் இருப்பதால்தான் நாம் இழிவுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கிறோம்; இந்துத்துவத்துடனான எல்லாத் தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டு நிபந்தனையற்ற சமத்துவம், தகுதி, வாய்ப்புகளை உறுதிப்படுத்தும் வேறெந்த மதத்துக்கும் மாறிப் போய் விடுங்கள்'' என்று தீண்டத்தகாதோருக்கு அம்பேத்கர் அறைகூவல் விடுத்தார். வெவ்வேறு மதங்களை ஒப்பீடு செய்து, தாழ்த்தப்பட்டோருக்கு அம்மதத் தலைவர்களிடையே உள்ள வரவேற்பையும் ஆய்வு செய்தார். பிறகு 1936-இல் சீக்கிய மதத்திற்கு மதம் மாறுவதைத் தெரிவு செய்தார்.

சீக்கியராக மதம் மாறும் தீண்டத்தகாதோருக்கு இட ஒதுக்கீடு வழங்குமாறு புதிய அரசியல் சட்டம் இயற்றும்படி ஆங்கிலேயரிடம் அம்பேத்கர் கோரினார். பஞ்சாபிலுள்ள சீக்கியருக்கு மட்டுமே அது பொருந்தும் என்று ஆங்கிலேயத் தலைவர்கள் நிராகரித்தனர். பஞ்சாபிலிருந்த சீக்கியத் தலித்துகள், அங்கு ஜாட் சாதியினர் தமக்கு இழைக்கும் கொடுமைகளை எடுத்துச் சொன்னார்கள். சீக்கியர்களின் அரசியல் தலைமையான அகாலிகளும் தீண்டத்தகாதோரின் பெருந்திரள் மதமாற்றத்தை எதிர்த்தனர். சாதி இந்துக்களின் சமூகப் புறக்கணிப்பு மற்றும் திருப்பித் தாக்கும் நடவடிக்கைகளைக் கண்டஞ்சிய அம்பேத்கர், மதமாற்ற முயற்சிகளை அப்போதைக்குக் கைவிட்டார்.

தீண்டாமை மற்றும் சாதி ஆதிக்கத்துக்கு எதிரான பிற மூல உத்திகள் தோல்வியடைந்த பிறகு, மீண்டும் மத மாற்றத் தீர்வை அம்பேத்கர் கையிலெடுத்தார். இறப்பதற்குச் சில வாரங்கள் முன்பாக 1956 அக். 14 அன்று மிகப் பெரிய விழாவொன்றில் நாகபுரியில் பல -றாயிரக்கணக்கான மகர் சாதியினர் புத்த மதத்தைத் தழுவினர். புத்த மதத்தை இந்து மதத்தின் ஒரு பிரிவாகவே சட்டமும் சாதி இந்துத் தலைமையும் கருதுவதால் கடும் எதிர்ப்பு கிளம்பவில்லை. ஆனாலும், இந்துமதத்துக்கு எதிரான நடவடிக்கை என்று பிரகடனம் செய்யும் வகையில் மராட்டியத் தீண்டத்தகாதோர் குடியிருப்புப் பகுதியிலிருந்த இந்துக் கடவுளர் சிலைகள் சாதி இந்துக்களிடமே ஒப்படைக்கப்பட்டன.

இதன் மூலம் புத்த மதத்தைத் தழுவிய மக்கள் தமக்குத் தாமே ஒரு புதிய அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டாலும், சமுதாயத்தில் நிலவும் சாதியப் படிநிலையிலிருந்து அம்மக்கள் விடுதலை பெறவே இல்லை. நகர்ப்புறக் குடிசைப் பகுதிகளிலும், கிராமப்புற பகுதிகளில் நிலமற்ற விவசாயிகளாக வாழும் பௌத்த பெருந்திரள் மக்கள் பழைய முறையிலேயே வாழ்கிறார்கள். ஒரு முக்கிய வேறுபாடு, தங்களுக்கு முன்பு மறுக்கப்பட்ட (சடங்கு - சாத்திர) நடைமுறைகள் தமக்குத் தடை செய்யப்பட்டவை என்பதற்காக அல்ல, தாமே தனியினம் என்ற உணர்வுடன் அவற்றைப் பின்பற்றுவதைக் கை விட்டுள்ளனர். மேலும், சம்பர்கள் போன்ற பிற தீண்டத்தகாதவர்கள் புத்தமதத்தைத் தழுவுவதை நிராகரித்து விட்டனர். புத்த மதத்தைத் தழுவிய மகர்களிலும் ஏழை-எளிய மக்கள் பழைய வழக்கங்களைத் தொடர்கிறார்கள்.

இவ்வாறு தீண்டாமையையும் சாதிய அமைப்பையும் தகர்ப்பதற்கு அம்பேத்கரே முன்வைத்து நடைமுறைப்படுத்திய தீர்வுகளையும் போதனைகளையும் நேர்மையாகத் தொகுத்தறியும் எவரும், அவை தமது நோக்கங்களை ஈடேற்றக் கூடியவை என்று கூற முடியாது. மாறாக, அவை எதிர்மறைப் படிப்பினையைத்தான் கொடுத்திருக்கின்றன.

முதலாவதாக, தீண்டத்தகாதோர் இந்த மண்ணின் மைந்தர்கள் என்ற அடையாளத்தையும் தலித்துகள்-சூத்திரர்களை ஐக்கியப்படுத்தி, அவர்கள் அனைவருக்கும் சாதி அடிப்படையில் அல்லாத தனியொரு மாற்று அடையாளத்தையும் தருவதன் மூலம் சாதிய உட்பிரிவுகளைக் கடந்த ஐக்கியத்தை ஏற்படுத்தி விடமுடியும் என்று அம்பேத்கர் நம்பினார். அதற்கு நேர்மாறாக ஒவ்வொரு சாதிய



படிப்பகம்

உட்பிரிவுகளும் தனித்தனி சாதி அடையாளத்தை வலுப்படுத்தி கொள்கிறார்கள். ஓட்டுக்கட்சி அரசியலின் வாக்கு வங்கி உருவாக்கம் மற்றும் சாதிய அரசியல், சமூக ஆதிக்கத்துக்கு இது அவசியமாக உள்ளது. தலித் மக்களிடையேகூட சாதிய உட்பிரிவு அடையாளங்கள் இறுக்கத்தையும் சீரழிவையும்தான் ஏற்படுத்தியிருக்கின்றன.

இரண்டாவதாக, தேர்தல் அரசியல் ஈடுபாடு தலித் அரசியல் தலைவர்கள், அமைப்புகளை மிக மோசமான அரசியல் சந்தர்ப்பவாதத்திலும் பிழைப்புவாதத்திலும் மூழ்கடித்திருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்கள் அடகு வைக்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள் அரசியல் விழிப்புணர்வு பெறுவதற்கு மாறாக, தேர்தல் அரசியல் மீது நம்பிக்கை வைக்கும்படி சீரழிக்கப்படுகிறார்கள். சாதி, மத அடிப்படையில் மக்களைஅணிதிரட்டி ஆதிக்க சாதியினர் ஆதாயம் அடையும் சூழலில் தலித் கட்சிகளின் சக்தியை பிற அரசியல் கட்சிகள் அங்கீகரிக்க மறுப்பதாக தலித் அரசியல் தலைவர்கள் அவர்களிடம் கெஞ்சுகிறார்கள்.

மூன்றாவதாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான தீண்டாமை, வன்கொடுமை மற்றும் சாதியக் கட்டமைப்பை முறியடிப்பதற்கு பதிலாக, ஆட்சியாளர்களின் தயவில் இம்மக்களுக்கு சலுகைகளையும் பதவிகளையும் பெற்று விட முடியும் என்ற நம்பிக்கை. இதன் காரணமாக, ஆட்சியாளர்களையும் அதிகார அரசு அமைப்பையும் பகைச் சக்திகளாகக் கருதி அவர்களை எதிர்த்துப் போராடி, வீழ்த்த வேண்டிய பணிகளை - பாதையை நிராகரிக்கின்றனர். மாறாக, எப்போதும் தற்காலிக நிவாரணங்களையும், எதிரிகளுடன் சமரச-சரணடைவுப் போக்கையுமே மேற்கொள்கின்றனர்.

இவைதாம் அம்பேத்கரிடமிருந்து தலித் தலைவர்கள் கற்றுக்கொண்டவை. இவைதாம் அம்பேத்கரியம் அவர்களுக்கு கற்றுக் கொடுத்தவை!

இதற்கு மாறாக, தீண்டாமையையும் சாதிய சமுதாயத்தையும் பாதுகாத்துவரும், ஆதிக்க சாதிகளுக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் சேவை செய்யும் அரசுக் கட்டமைப்பைத் தாக்கித் தகர்க்கவேண்டும். சமூக, அரசியல் ஜனநாயகப் புரட்சி மூலம் சமுதாயத்தைத் தலைகீழாகப் புரட்டிப் போடும் புரட்சியால்தான் தீண்டாமையும் சாதியமும் இல்லாத சமுதாயத்தை உருவாக்கிக்கொள்ள முடியும். அரசியல், ஜனநாயகப் புரட்சியில் பங்கேற்பதன் ஊடாகத்தான் சாதிகளைக் கடந்த உழைக்கும் மக்களின் ஒற்றுமையும் சமத்துவமும் ஏற்பட முடியும்.

எதிரிச் சக்திகளுடன் நேரடியான மோதலும் புரட்சியும் இல்லாமல், பழைய சாதிய சமூகக் கட்டமைப்புக்குள்ளாகவே கொண்டு வரப்படும் சீர்திருத்தங்களால் அம்பேத்கரே முன்மாதிரியாகக் கருதிய மேலைநாடுகளில் கூட சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் அடங்கிய ஜனநாயகம் வந்துவிடவில்லை. ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்கள் தீண்டாமை-சாதிய சமூகத்திலிருந்து விடுதலைக்கு வேண்டுவது சீர்திருத்தங்கள் அல்ல; மேற்கத்திய பாணியிலான ஜனநாயகப் புரட்சி கூட அல்ல. புதிய ஜனநாயகப் புரட்சி!

● ஆர்.கே.

## “கிராமப்புற பேருந்துகளையும் சாலை வசதிகளையும் மேம்படுத்து! விபத்துகளைத் தடுக்க நடவடிக்கை எடு!”

## - வி.வி.மு. ஆர்ப்பாட்டம்



கடந்த ஆகஸ்ட் 21 அன்று பென்னாகரத்தை அடுத்துள்ள முதுகம்பட்டி அருகே அரசுப் பேருந்து கவிழ்ந்து அதில் பயணம் செய்த 60 பேர் படுகாயமடைந்தனர். முதலாளிகளின் நலனுக்காக தேசிய நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்தும் அரசு, மலைப்பாங்கான இப்பகுதியில் சாலைகளை அகலப்படுத்தி செப்பனிடாமல் கிராமப்புறங்களை அறவே அலட்சியம் செய்து வருவதே இந்த விபத்துக்குக் காரணம். பேருந்து கட்டணத்தைப் பலமடங்கு உயர்த்திய அரசு, புதிய பேருந்துகளையோ கூடுதல் பேருந்துகளையோ இயக்காமல், பழைய ஓட்டை ஒடிசலான பேருந்துகளை வைத்து இயக்கி மக்களை ஆடு-மாடுகளைப் போல அடைத்துச் செல்வதே இப்பகுதியில் அடுத்தடுத்து நிகழும் இத்தகைய விபத்துகளுக்குக் காரணம்.

இவ்விபத்தில் பாதிக்கப்பட்டோரை மருத்துவமனையில் சந்தித்து ஆறுதல் கூறிய வி.வி.மு; அடுத்த நாளே கிராமப்புற பேருந்துகளையும் சாலை வசதிகளையும் மேம்படுத்தாமல் புறக்கணித்துவரும் அரசை எதிர்த்து சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்டதோடு, பள்ளி-கல்லூரி நேரங்களில் கூடுதல் பேருந்துகள் இல்லாமல் மாணவர்கள் அவதிப்படுவதை விளக்கி துண்டுப் பிரசுரங்களுடன் இப்பகுதியில் வீடுவீடாகப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியாக, பள்ளி-கல்லூரி மாணவர்களையும் உழைக்கும் மக்களையும் அணிதிரட்டி 24.8.2012 அன்றுமாலை 5 மணியளவில் பென்னாகரம் டெம்போ ஸ்டாண்டு அருகில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. போராடாமல் கோரிக்கைகளை வெல்ல முடியாது என்பதை உணர்ந்த உழைக்கும் மக்களும் இளைஞர்களும் மாணவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் உற்சாகத்துடன் பங்கேற்றதோடு, திடீரென மழை வந்த போதிலும், கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் இறுதிவரை விண்ணதிரும் முழக்கங்களை எழுப்பி,வி.வி.மு.வின் மீது தங்களது பற்றையும் உளமார்ந்த நம்பிக்கையையும் வெளிப்படுத்தினர்.

-பு.ஜ. செய்தியாளர், பென்னாகரம்

www.padippkam.com

# அமெரிக்க டாலருக்காகப் பலியான உயிர்கள்

**பாகிஸ்தான்–கராச்சி நகரிலுள்ள ஆயத்த ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்து முதலாளித்துவ பயங்கரவாதமே!**

அண்டை நாடான பாகிஸ்தானின் கராச்சி நகரில் கடந்த செப்டம்பர் 12 அன்று அலி எண்டர்பிரைசஸ் என்ற ஆயத்த ஆடை தயாரிப்புத் தொழிற்கூடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 289 தொழிலாளர்கள் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். இது, பாகிஸ்தான் இதுவரை கண்டிராத மிகக் கொடிய கோரமான ஆலை விபத்து. கராச்சியின் வடமேற்கேயுள்ள பால்தியா நகரத் தொழிற்பேட்டையிலுள்ள இத்தொழிற்கூடத்தின் மூன்று மாடிகளிலும் தீப்பற்றியதால், தப்பிக்க வழியில்லாமல் கூண்டில் சிக்கிய பறவைகள் போலத் தொழிலாளர்கள் தீயில் வெந்து கரிக்கட்டைகளாகியுள்ளனர்.



289 பேரைப் பலி கொண்ட முதலாளித்துவ பயங்கரவாதத்தின் கோரம்: பிணக்குவியலில் தமது உற்றார் உறவினரைத் தேடும் அவலம்.

கொல்லப்பட்டவர்களில் பெரும்பான்மையினர் இளைஞர்கள். இன்னும் பலர் 12 முதல் 15 வயது வரையிலான சிறுவர்கள். ஏறத்தாழ 1200 முதல் 1500 பேர்வரை வேலை செய்யும் அந்தத் தொழிற்கூடத்தில் அன்றைய ஷிப்ட்டில் ஏறத்தாழ 400 பேர் பணியாற்றிக் கொண்டிருந்த போதுதான் இந்தக் கோர விபத்து ஏற்பட்டுள்ளது.

அதேநாளில் லாகூரின் கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமாக இயங்கிவந்த ஒரு செருப்பு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 10-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். மொத்தத்தில் 315-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அடுத்தடுத்து நடந்த தீ விபத்துகளில் கொல்லப்பட்டுள்ளனர். 250-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

கராச்சியிலுள்ள ஆயத்த ஆடைத் தொழிற்கூடத்தில் அவசர வழிகள் ஏதும் கிடையாது. ஆலைக்குள் தண்ணீர் தெளிப்பான்களோ, தீ தடுப்புச் சாதனங்களோ கிடையாது. ஆடைத்துண்டுகளும் பாதுகாப்பற்ற இரசாயனப் பொருட்களும் குவிந்திருந்ததால் விரைவில் தீப்பற்றி நச்சுவாயு பரவிப் பலரை மயக்கமடையச் செய்து, தப்பிக்க முடியாத நிலையில் கொத்துக்கொத்தாக தொழிலாளர்கள் தீயில் சிக்கி பலியாகியுள்ளனர்.

ஆலைக்கு வரும் தொழிலாளர்களை ஷிப்ட் முடிந்த பிறகு சோதனையிட்ட பின்னரே வெளியே அனுப்புவதற்காக ஒரேயொரு கதவை மட்டும் வைத்து, அக்கதவையும் மூடிவிடுவதுதான் அங்கு வழக்கமாக இருந்துள்ளது. இதனால் தொழிலாளர்கள் நாற்புறமும் தீப்பற்றியதும் தப்பிச் செல்ல முடியாமல் துடிதுடித்து தீயில் சிக்கி மாண்டு போயுள்ளனர். ஒரு சில தொழிலாளர்கள் இரும்புக் கம்பிகளைக் கொண்டு ஜன்னலை உடைத்து நெருப்பிலிருந்து தப்பிக்க மூன்றாவது மாடியிலிருந்து கீழே குதித்து கை கால் முறிந்து மாண்டு போயுள்ளனர். ஒரு சிலரே உயிர் பிழைத்து மருத்துவமனையில் குற்றுயிராகக் கிடத்தப்பட்டுள்ளனர்.

ஒரு தெருவுக்கு ஏறத்தாழ 8 பேர் வீதம் கொல்லப்பட்ட கொடூரம்: ஒரே நேரத்தில் கணவனையும் மகனையும் மகளையும் சகோதரனையும் இழந்துவிட்ட மாளாத்துயரில் கதறும் தாய்மார்கள்.





படிப்பகம்

www.padippkam.com

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் நவீன வடிவமைப்புகளுடன் விற்பனை செய்யப்படும் ஆயத்த ஆடைகளில் ஒட்டப்பட்டுள்ள லேபிள்கள் பன்னாட்டு நிறுவனங்களுடையவை. உழைப்போ, பாகிஸ்தான் போன்ற ஏழை நாட்டுத் தொழிலாளிகளினுடையவை. இத்தொழிற்கூடங்களில் 8 மணி நேர வேலை என்பதெல்லாம் கிடையாது. 12 மணிநேர வேலைக்கு மாதத்துக்கு 58 டாலர்தான் ஊதியமாகத் தரப்படும்.

தனியார்மயம் -தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கக் கொள்கை பாகிஸ்தானில் திணிக்கப்பட்ட பிறகு, 2003-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பஞ்சாப் தொழிற்கொள்கை, தொழிலாளர் நலனையும் கண்காணிப்புகளையும் அறவே புறக்கணித்தது. ஆயத்த ஆடை ஏற்றுமதி மூலம் பெருமளவு அந்நியச் செலாவணி கிடைப்பதால், தொழில் வளர்ச்சிக்கு இது அவசியமானது என்று நியாயம் கற்பித்தது. பாகிஸ்தானின் பொருள் உற்பத்தித் துறையில் ஏற்றுமதிக்கான ஆடைகள் தயாரிப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. ஏறத்தாழ 38 சதவீத தொழிலாளர்கள் இத்துறையில் பணியாற்றுகின்றனர். அனைத்துலகச் சந்தையைப் பிடிக்க பாகிஸ்தான் தரகுப் பெரு முதலாளிகள் எவ்விதப் பாதுகாப்புமின்றி அற்பக் கூலிக்குத் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து கொத்தடிமைகளாக நடத்துகின்றனர். கடந்த 2011-இல் மட்டும் பாகிஸ்தானில் 151 தொழிலாளர்கள் விபத்துகளில் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொடிய சுரண்டலும் கொத்தடிமைத்தனமும் அடக்குமுறையும் பாதுகாப்பின்மையும் அந்நியச் செலாவணியின் பெயராலும் வேலைவாய்ப்பின் பெயராலும் ஏழை நாடுகளில் நியாயப்படுத்தப்படுகின்றன.

இத்தனியார்மய - உலகமயக் கொள்கைதான் எவ்விதப் பாதுகாப்புமின்றித் தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக நடத்துவதோடு, ஊழலையும் கொள்ளையையும் ஊட்டி வளர்த்துத் தொழிலாளர்களின் உயிரையும் பறிக்கிறது. முதலாளித்துவ ஊடகங்களோ இதனை முதலாளிகள் நடத்திய படுகொலையாகக் காட்டாமல், அக்கறையின்மையால் ஏற்பட்ட விபத்தாகச் சித்தரிக்கின்றன. எந்தத் தனியார்மயமும் உலகமயமும் வங்கதேச ஆயத்த ஆடைத் தொழிலாளர்களைத் தீ விபத்துகளில் தள்ளி உயிரைப் பறிக்கிறதோ, எந்தத் தனியார்மயம் தமிழகத்தில் ஜேப்பியார் கல்லூரியின் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்ட தொழிலாளர்களைப் பலி கொண்டதோ, அந்தத் தனியார்மயமும் உலகமயமும்தான் பாகிஸ்தான் தொழிலாளர்களின் உயிரையும் பறித்துள்ளது.

தனியார்மயம் - உலகமயம் எனும் கொடிய சிலந்தி வலையில் சிக்கிக் கொண்டுள்ள ஏழை நாடுகளின் தொழிலாளி வர்க்கம், தமது பொது எதிரியான பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கும் அவற்றின் கூட்டாளிகளான உள்நாட்டுத் தரகுப் பெருமுதலாளிகளுக்கும் எதிராக ஓரணியில் திரண்டு போராட வேண்டிய அவசியத்தை இன்றைய உலக நிலைமைகள் சுட்டிக் காட்டுகின்றன. தனியார்மயமும் உலகமயமும் எவ்வளவு கொடூரமானது, பயங்கரமானது என்பதை உலகுக்கு மீண்டும் உணர்த்திவிட்டு, பாகிஸ்தான் தொழிலாளி வர்க்கம் மீளாத் துயரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

● பாலன்

## “சிவகாசி படுகொலையைப் பற்றிப் பேசாதே!”

### - ஓசூர் போலீசின் வாய்ப்பூட்டு



கடந்த 05.09.2012 புதன்கிழமை அன்று சிவகாசி அருகில் உள்ள முதலிப்பட்டி கிராமத்தில் ஓம் சக்தி புளூ மெட்டல்ஸ் எனும் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 50-க்கும் மேற்பட்டவர்கள் பலியாகி, -ற்றுக் கணக்கானோர் படுகாயமுற்ற செய்தியறிந்தவுடன், இது முதலாளிகளின் இலாபவெறிக்காக நடத்தப்பட்ட படுகொலை என்ற உண்மையை மக்களிடம் விளக்கும் நோக்குடன், 07.09.2012 அன்று மாலை 5 மணியளவில் ஓசூர் நகராட்சி அருகே பு.ஜ.தொ.மு. தெருமுனைக் கூட்டத்தை நடத்தியது.

பட்டாசு ஆலை முதலாளிகள்- அதிகாரிகள் - ஓட்டுக் கட்சிகளின் கூட்டணியை அம்பலப்படுத்தும் முழக்கங்கள் எங்கும் எதிரொலிக்க,தோழர் ரவிச்சந்திரன் தலைமையில், தோழர் வரதன் விளக்க உரை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது, முன் அனுமதியின்றி கூட்டம் நடத்துவதாகக் குற்றம் சாட்டி, போலீசார் இத்தெருமுனைக் கூட்டத்தை தடுத்து நிறுத்தி, கொடிகள் பேனர்களைப் பிடுங்கினர். முதலாளிகளின் சட்டவிரோத கொலை பாதகச் செயல் மக்களிடம் அம்பலப்பட்டு விடாமல் தடுக்கும் நோக்குடன் போலீசார் நடத்திய இந்த ஜனநாயக விரோத அடாவடித்தனத்தை எதிர்த்து தோழர்கள் முழக்கமிட்டு போலீசுடன் வாதிட்டனர். கருத்துரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து மக்களிடம் விளக்கிய தோழர்கள், மீண்டும் அனுமதி பெற்று கூட்டம் நடத்துவதாக அறிவித்து,முதலாளித்துவ பயங்கரவாதத்தையும் போலீசின் அடாவடித்தனத்தையும் எதிர்த்துப் போராட அறைகூவினர்.

-பு.ஜ. செய்தியாளர், ஓசூர்



படிப்பகம்

www.padippkam.com

## நரோடா பாட்டியா படுகொலை தீர்ப்பு:

# பத்துக்கு ஒன்பது பழுதில்லை!

**பத்தாண்டு காலப் போராட்டத்தின் விளைவாகக் கிடைத்துள்ள இத்தீர்ப்பு, முழுமையான நீதியை வழங்கவில்லை**

குஜராத் முசுலீம் படுகொலை தொடர்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ள -ற்றுக்கணக்கான வழக்குகளுள், ஒன்பது வழக்குகளை மட்டும் உச்ச நீதிமன்றம் தனது கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்து, அவற்றின் புலன் விசாரணையைச் சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் ஒப்படைத்திருந்தது. அவ்வழக்குகளில் ஒன்றான நரோடா பாட்டியா படுகொலை வழக்கில் 32 பேரைத் தண்டித்துத் தீர்ப்பு அளித்திருக்கிறது, சிறப்பு விரைவு நீதிமன்றம்.

அகமதாபாத் நகரின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள முசுலீம்களின் காலனியான நரோடா பாட்டியாவில் நடந்த இத்தாக்குதலின்பொழுது 97 பேர் கொல்லப்பட்டனர். இந்த 97 பேரில் 30 பேர் ஆண்கள்; 32 பேர் பெண்கள்; 35 பேர் குழந்தைகள் மற்றும் சிறுவர்-சிறுமியர். இப்படுகொலையின்பொழுது கொல்லப்பட்டோரில் பெரும்பாலோர் கண்டம் துண்டமாக வெட்டப்பட்டு, குற்றுயிராகக் கிடந்த அவர்களின் மேல் மண்ணெண்ணெய் ஊற்றப்பட்டு எரித்துக் கொல்லப்பட்டனர்; பெண்கள் கும்பல் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு, பின் தீவைத்துக் கொல்லப்பட்டனர்; இப்படி உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டவர்களுள் 20 நாட்களே ஆன ஒரு பச்சிளங்குழந்தையும், ஒன்பது மாத நிறை கர்ப்பிணியான கவுசர் பானுவும் அடக்கம்.

இப்படுகொலை வழக்கில் தண்டிக்கப்பட்டுள்ள 32 பேரில், அப்படுகொலை நடந்த சமயத்திலும் தற்பொழுதும் நரோடா பாட்டியா தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவுள்ள மாயாபென் கோட்னானி; குஜராத் மாநில பஜ்ரங் தள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பாபு பஜ்ரங்கி; பா.ஜ.க.வைச் சேர்ந்த அகமதாபாத் மாநகராட்சி மன்ற உறுப்பினர் கிஷன் கோரானி ஆகியோரோடு, விசுவ இந்து பரிசத்தைச் சேர்ந்த பிபின் பாஞ்சால், அசோக் சிந்தி, சுரேஷ் சாரா உள்ளிட்டு, அவ்வமைப்பைச் சேர்ந்த ஏழு உள்ளூர் தலைவர்களும் அடக்கம்.

கோத்ரா ரயில் தீ விபத்து நடந்த மறுநாளே 10,000-க்கும் அதிகமான இந்து மதவெறிக் குண்டர்கள் நரோடா பாட்டியைச் சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்திய சமயத்தில், அத்தொகுதியின் எம்.எல்.ஏ.வாக இருந்த கோட்னானி கைத்துப்பாக்கியோடு அப்பகுதியைச் சுற்றிசுற்றி வந்ததோடு, இந்து மதவெறி பயங்கரவாதிகளுக்குத் தேவையான ஆயுதங்களையும், மண்ணெண்ணெயையும் “சப்ளை” செய்தார். பெண்களையும் குழந்தைகளையும் தீயில் போட்டுத் துடிதுடிக்கக் கொன்ற வெறியாட்டத்துக்குத் தலைமை தாங்கிய மாயாபென் கோட்னானி ஒரு மகப்பேறு மருத்துவர் என்பது முரண் நகைக்கு எடுத்துக்காட்டு; அப்படிபட்ட ஈவிரக்கமற்ற கொலைகாரியை, மோடி தனது அமைச்சரவையில் குழந்தைகள் மற்றும் பெண்கள் நலத் துறையின் துணை அமைச்சராக்கி அழகு பார்த்தார் என்பது அவரது குரூரப் புத்திக்கு எடுத்துக்காட்டு. இப்படுகொலையின் இன்னொரு தளகர்த்தாவான பாபு பஜ்ரங்கி, தான் எப்படியெல்லாம் முசுலீம் பெண்களையும், குழந்தைகளையும் துடிதுடிக்கக் கொன்றேன் என்பதை தெகல்கா இதழின் நிருபர் ஆஷிஷ் கேதான் எடுத்த இரகசிய பேட்டியில் எகத்தாளத்தோடு பட்டியலிட்டிருக்கிறான்.

நரோடா பாட்டியா மு லீம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பொழுது, ஈவிரக்கமின்றி எரித்துக்கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் (கோப்புப் படம்).





படிப்பகம்

www.padippkam.com



நரோடா பாட்டியா படுகொலைக்காகத் தண்டிக்கப்பட்டுள்ள இந்து மதவெறி பயங்கரவாதிகள் மாயாபென் கோட்னானி (இடது) மற்றும் பாபு பஜ்ரங்கி.

மாயாபென் கோட்னானி, பாபு பஜ்ரங்கி ஆகியோர் தலைமையில் வந்த இந்து மத வெறி பயங்கரவாதக் கும்பல்தான் நரோடா பாட்டியா படுகொலையைத் தூண்டி விட்டு நடத்தியது என்பதற்கு இப்படி அநேக ஆதாரங்களும், நேரடி சாட்சியங்களும் இருந்தபோதும், குஜராத் முதல்வர் நரேந்திர மோடி மிகக் கொடூரமாக நடத்தப்பட்ட இப்படுகொலையை, ''கோத்ராவில் இந்துக்கள் கொல்லப்பட்டதற்கு எதிர்வினையாகவும், இந்துக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு நடத்திய தாக்குதலாகவும்'' கூறிவந்தார். ஆனால், சிறப்பு விரைவு நீதிமன்றத்தின் பெண் நீதிபதி ஜோஸ்னா யாக்னிக், ''இத்தாக்குதல் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட சதிச் செயல்; இதனை கோத்ராவின் எதிர்வினை எனக்கூறி, தாக்குதலின் கொடூரத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது'' எனத் தீர்ப்பில் குறிப்பிட்டு, மோடியின் வஞ்சகமும் திமிரும் நிறைந்த புளுகு மூட்டையை அம்பலப்படுத்தியிருக்கிறார்.

மாயாபென் கோட்னானியை நரோடா பாட்டியா படுகொலையின் சூத்திரதாரியெனக் குறிப்பிட்டுள்ள நீதிபதி ஜோஸ்னா யாக்னிக், அவருக்குச் சதி, கொலை, முசுலீம்களுக்கு எதிரான மதவெறியைத் தூண்டிவிடுதல் உள்ளிட்டப் பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் மொத்தமாக 28 ஆண்டுகள் சிறை தண்டனை அளித்திருக்கிறார்; பாபு பஜ்ரங்கிக்குச் சாகும் வரையில் சிறை தண்டனையும், சுரேஷ் சாரா உள்ளிட்ட இந்து மதவெறிக் கும்பலைச் சேர்ந்த ஏழு உள்ளூர் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் 31 ஆண்டுகள் சிறை தண்டனையும்; மற்ற 22 குற்றவாளிகளுக்கு 14 ஆண்டு கால ஆயுள் தண்டனையும் அளிக்கப்பட்டுள்ளது.

கோட்னானி உள்ளிட்டுக் குற்றவாளிகள் அனைவரும் பல்வேறு கிரிமினல் சட்டப்பிரிவுகளின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைக் காலத்தை ஏககாலத்தில் இன்றி, முழுமையாகவும் மொத்தமாகவும் சிறையில் கழிக்க வேண்டும் எனத் தீர்ப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது. குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள ஒருவர் தலைமறைவாக இருப்பதால், அவருக்கான தண்டனை தீர்ப்பில் குறிப்பிடப்படவில்லை. அதேசமயம், இவ்வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டிருந்த போலீசு ஆய்வாளர் மைசூர்வாலா உள்ளிட்ட 29 பேருக்கு எதிரான சாட்சியம் வலுவாக இல்லையெனக் கூறப்பட்டுச் சந்தேகத்தின் பலனின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

• • •

''இத்தீர்ப்பு இந்திய அரசின் மதச்சார்பின்மையை உறுதிப்படுத்தியிருப்பதாகவும் ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை மீட்டெடுத்திருப்பதாகவும் பொதுமக்களின் உரிமையைக் காப்பதில் அரசின் உறுதியை வெளிப்படுத்தியிருப்பதாகவும்'' குறிப்பிட்டு, நடுத்தர வர்க்க அறிவுஜீவிகளில் ஒரு சாரர் இத்தீர்ப்பை வானளாவப் புகழ்ந்து வருகின்றனர். அதாவது, ''தற்பொழுதுள்ள அரசியல் அமைப்பு, சட்டதிட்டங்களின் படியே இந்து மதவெறி பயங்கரவாதிகளை, அவர்கள் அதிகாரப்பீடத்தின் உச்சியில் இருந்தாலும் தண்டித்துவிட முடியும் என்ற நம்பிக்கையைப் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்திவிட'' இத்தீர்ப்பை உதாரணமாகக் காட்டிவருகின்றனர்.

இத்தீர்ப்பு வரவேற்கத்தக்கதெனினும், அப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான நீதியை வழங்கவில்லை. குறிப்பாக, இப்படுகொலைக்குத் துணையாக நின்ற எந்தவொரு போலீசுக்காரனையும் இத்தீர்ப்பு தண்டிக்கத் துணியவில்லை. நரோடா பாட்டியா படுகொலை நடந்தபொழுது அந்தப் பகுதியின் போலீசு ஆய்வாளராக இருந்த கே.கே. மைசூர்வாலா, இவ்வழக்கின் முதன்மைக் குற்றவாளியான பிபின் பாஞ்சாலுடனும், நரோடா காவ் என்ற பகுதியில் முசுலீம்களை வேட்டையாடிக் கொண்டிருந்த விசுவ இந்து பரிசத்தின் மாநிலப் பொதுச் செயலர் ஜெய்தீப் படேலுடனும்; அகமதாபாத் நகரத் துணை போலீசு கமிசனர் பி.பி. கோந்தியா, மாயாபென் கோட்னானி மற்றும் ஜெய்தீப் படேலுடனும்; படுகொலையை நடத்திவந்த மாயாபென் கோட்னானி முதலமைச்சர் அலுவலகத்துடனும், உள்துறையின் துணை அமைச்சராக இருந்த கோர்தன் ஜடாபியாவுடனும் கைபேசி வழியாகத் தொடர்பு கொண்டிருந்ததற்கான ஆதாரங்களை, குறிப்பாக படுகொலை நடந்து கொண்டிருந்த சமயத்தில் அவர்களுக்கு இடையே நடந்த உரையாடல்களை ராகுல் சர்மா என்ற போலீசு அதிகாரி சி.டி.யில் பதிவு செய்து, அதனை நானாவதி கமிசனிடம் சாட்சியமாக அளித்தார்.

ராகுல் சர்மா நானாவதி கமிசனிடம் அளித்த சி.டி.யைப் பரிசீலனை செய்த வழக்குரைஞர் முகுல் சின்ஹா அதனை நரோடா பாட்டியா வழக்கிலும் சாட்சியமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் எனப் பாதிக்கப்பட்டவர்களின் சார்பாகச் சிறப்பு நீதிமன்றத்தில் வாதாடினார். இதனை



படிப்பகம்

www.padippkam.com



நரேந்திர மோடி அர நடத்திய மு லீம் படுகொலைக்கு நீதி கேட்டு நெடியதொரு போராட்டம் நடத்திவரும் வழக்குரைஞர் தீஸ்தா சேதல்வாத், வழக்குரைஞர் முகுல் சின்கா மற்றும் தெகல்கா நிருபர் ஆஷிஷ் கேதான்.

யடுத்து அந்த சி.டி.யின் உண்மைத்தன்மையைப் பரிசீலித்து, அறிக்கை அளிக்குமாறு சிறப்புப் புலனாய்வுக் குழுவிற்கு நீதிபதி யாக்னிக் உத்தரவிட்டார். ஆனால், சிறப்புப் புலனாய்வுக் குழு நீதிமன்றம் கோரிய அறிக்கையை உரிய காலத்தில் அளிக்காமல், தீய உள்நோக்கத்தோடு காலம் கடத்தியது. வழக்கை விசாரித்த சிறப்பு விரைவு நீதிமன்றமும் இத்தாமதத்தையே காரணமாகக் காட்டி, கொலைகாரர்களுக்கு அனுசரணையாக நடந்து கொண்ட போலீசு அதிகாரிகளைத் தண்டிக்காமல் விடுவித்துவிட்டது. அதனால்தான், இப்படுகொலையின்பொழுது தனது 19 உறவினர்களை இழந்து நிற்கும் இம்ரான் அக்தர் ஷேக், இத்தீர்ப்பை ''50% நீதி'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவதாக, இத்தீர்ப்பு நீதிமன்றத்தின் முனைப்பு காரணமாகவோ, உச்ச நீதிமன்றம் நியமித்த சிறப்புப் புலனாய்வுக் குழுவின் நீதி வழுவாத் தன்மையின் காரணமாகவோ கிடைத்துவிடவில்லை. இப்படிபட்ட தீர்ப்பினைப் பெறுவதற்கு, இந்து மதவெறிக் கும்பல் நடத்திய தாக்குதலின்பொழுது தப்பிப் பிழைத்தவர்களும், நேரடி சாட்சிகளும் அவர்களுக்கு உறுதுணையாக நின்ற தீஸ்தா சேதல்வாத், வழக்குரைஞர் முகுல் சின்கா உள்ளிட்ட பல சமூக ஆர்வலர்களும் உள்ளூர் நீதிமன்றம் தொடங்கி உச்ச நீதிமன்றம் வரை ஒரு பெரும் போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. அப்போராட்டம் சட்டவரம்புகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டதுதான் என்றபோதும், அதற்காக அவர்கள் தங்கள் உயிரையே பணயம் வைக்க வேண்டியிருந்தது.

தெகல்கா ஆங்கில வார இதழின் நிருபர் ஆஷிஷ் கேதான் இப்படுகொலைகள் பற்றி இரகசியமாகப் புலனாய்வு (Sting operation) செய்து வெளியிட்ட கொலைகாரர்களின் வாக்குமூலங்கள், நரோடா பாட்டியா வழக்கில் மாயாபென் கோட்னானி, பாபு பஜ்ரங்கி உள்ளிட்ட இந்து மதவெறிக் கும்பலின் தலைவர்களைத் தண்டிக்க முக்கிய சாட்சியங்களாகப் பயன்பட்டுள்ளன. ஆஷிஷ் கேதான் இந்த இரகசியப் புலனாய்வை ஆறு மாதங்களாக நடத்தி வந்ததைப் பற்றி இப்படிக் கூறிகிறார் - ''இந்தப் பயணத்தில் பயமும் நம்பிக்கையும்தான் என் தோழர்கள். உண்மையைக் கண்டுபிடிக்க முடியும் என்ற நம்பிக்கையும், அதனாலேயே விழுங்கப்படுவோம் என்ற பயமும்; கொலைகாரர்களை வேட்டையாட முடியும் என்ற நம்பிக்கையும் நான் வேட்டையாடப்படலாம் என்ற பயமும்; பயம் நிரந்தர நிழலாகத் தாக்குவதற்குத் தயாராகத் தோளில் அமர்ந்துள்ளது.''

இப்படி உயிரைப் பயணம் வைத்து எடுக்கப்பட்ட இந்தப் புலனாய்வின் உண்மைத்தன்மையை நரோடா பாட்டியா வழக்கைக் கண்காணித்து வந்த உச்ச நீதிமன்றம்கூட உடனடியாக ஏற்றுக் கொள்ளவில்லை. தெகல்கா இதழ் வெளியிட்டுள்ள சாட்சியங்களை நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கோரி தீஸ்தா சேதல்வாத் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில், ''நாங்கள் உடனடியாக இதில் தலையிட மாட்டோம்; காலம் வரும்பொழுது தெகல்காவின் டேப் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்'' என அலட்சியமாகத் தீர்ப்பளித்தார்கள், நீதிபதிகள். இதன் பின் இது குறித்து தேசிய மனித உரிமை கமிசனிடம் தீஸ்தா முறையிட்டார். அப்பொழுது அக்கமிசனின் தலைவராக இருந்த நீதிபதி ராஜேந்திர பாபு, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த டேப்பின் உண்மைத்தன்மை குறித்து சி.பி.ஐ. விசாரிக்க உத்திரவிட்டார்.

''சி.பி.ஐ.-க்குப் பதிலாக, இந்த டேப்பின் உண்மைத் தன்மையை விசாரிக்கும் பொறுப்பு ராகவன் தலைமையில் அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால், இந்த சாட்சியங்களை அவர்கள் குழிதோண்டி புதைத்திருப்பார்கள்'' எனக் குறிப்பிடுகிறார், தீஸ்தா சேதல்வாத். இது மட்டுமின்றி, நரோடா பாட்டியா படுகொலை வழக்கு விசாரணை சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகும்கூட, அக்குழு மாயாபென் கோத்னானியைக் குற்றவாளியாக வழக்கில் சேர்க்காமல் இழுத்தடித்து வந்தது. இதற்கு எதிராகவும் நாங்கள் போராடிய பிறகுதான் அவரது பெயர் சேர்க்கப்பட்டது எனச் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் யோக்கியதையை அம்பலப்படுத்தியிருக்கிறார், அவர் (தெகல்கா, இதழ் எண்.36, பக்.42-43). .

உச்ச நீதிமன்றம் நியமித்த சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணை என்பது உண்மையில் நயமாகவும், வஞ்சகமாகவும் நடந்த குஜராத் போலீசு விசாரணைதான் எனக் குற்றஞ்சுமத்துகிறார், ஆஷிஷ் கேதான் (தெகல்கா, இதழ் எண்.36, பக்.37). இச்சிறப்புப் புலனாய்வுக் குழு மாயாபென் கோட்னானி, பாபு பஜ்ரங்கி போன்ற சில முதலைகளை மட்டும் பலிகொடுத்துவிட்டு, படுகொலை குற்



படிப்பகம்

www.padippkam.com

றச்சாட்டிலிருந்து மோடி என்ற திமிங்கலத்தையும், உயர் போலீசு அதிகாரிகள், துணை அமைச்சர்கள் உள்ளிட்ட பல சுறாமீன்களையும் தந்திரமாகத் தப்பவைத்துவிட்டது.

''இவை போன்ற பல ஓட்டைகளை நீதிமன்றத்திடமும், சிறப்புப் புலனாய்வுக் குழுவிடமும் காணமுடியும். இவற்றுக்கு எதிராகவெல்லாம் நாங்கள் போராட வேண்டியிருந்தது; இப்படிப் போராட வேண்டியிருந்த ஒவ்வொரு முறையும் நாங்கள் பல அச்சுறுத்தல்களை, மோசடியான குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது'' எனக் குறிப்பிடுகிறார், தீஸ்தா.

நரோடா பாட்டியா வழக்கில் குற்றவாளிகளுக்கு எதிராகச் சாட்சியம் அளித்தவர்களுள் பெரும்பாலோர் பெண்கள். இவ்வழக்கு விசாரணை நெடுகிலும் அவர்கள் காட்டிய துணிவு அசாத்தியமானது எனக் குறிப்பிடுகிறார், தீஸ்தா. ஏனென்றால், இவ்வழக்கு விசாரணை நடந்துகொண்டிருந்தபொழுதே, முக்கிய குற்றவாளிகளான மாயாபென் கோட்னானி, பாபு பஜ்ரங்கி உள்ளிட்ட இந்து மதவெறிக் குண்டர்களை, அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்ட இரண்டே மாதங்களுக்குள் பிணையில் வெளியே அனுப்பிவிட்டது, சிறப்பு விரைவு நீதிமன்றம். அரசியல் பலத்தோடு வெளியே சுதந்திரமாகச் சுற்றி வந்த இந்தக் கும்பல் சாட்சிகளைப் பணம் கொடுத்துக் கலைக்கவும், மிரட்டிப் பிறழ் சாட்சியாக மாற்றவும் தீவிரமாக முயன்று வந்தது.



இந்து மதவெறி பயங்கரவாதிகளுக்கு எதிராகத் துணிந்து சாட்சியமளித்த (இடமிருந்து) மெஹ்முதா பீபி, ஷாஜஹான் மிஸ்ரா, சையத் ரூபினா உள்ளிட்டோர்.

இதனால், ''இப்படுகொலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் சாட்சியம் அளித்தவர்களுக்கும் துணை இராணுவப் படையினரின் பாதுகாப்பைப் போராடிப் பெற வேண்டிய கட்டாயத்திற்குள் நாங்கள் தள்ளப்பட்டோம்; சாட்சியம் அளித்தவர்களுக்குத் தேவைப்படும் அனைத்துவிதமான சட்ட ஆலோசனைகளையும் உதவிகளையும் நாங்கள் தினந்தோறும் அளித்து வந்தோம்; சாட்சியங்கள் ஒவ்வொருவரும் தமக்கான வழக்குரைஞரை வைத்துக் கொள்ளும் சட்ட உரிமையைப் பயன்படுத்தி, வழக்குரைஞர்களை ஏற்பாடு செய்து கொண்டோம். இவை போன்ற பல முன்னேற்பாடுகளை, பாதுகாப்புகளை ஏற்படுத்தியதால்தான், நீதியைப் பெற முடிந்திருக்கிறது'' எனத் தாங்கள் நடத்திய போராட்டத்தை விவரிக்கிறார், தீஸ்தா சேதல்வாத்.

குஜராத் படுகொலைகளுக்கு இணையாக நடந்த மும்பய்ப் படுகொலையில் தொடர்புடைய இந்து மதவெறி பயங்கரவாதிகளுள் ஒருவர்கூட, அப்படுகொலை நடந்து இருபது ஆண்டுகள் கடந்த பின்னும் ஏன் தண்டிக்கப்படவில்லை என்ற கேள்வியைக் கேட்டுப் பாருங்கள், அப்பொழுதுதான் தீஸ்தா உள்ளிட்டோர் நடத்தி வரும் போராட்டத்தின் முக்கியத்துவத்தை உணர முடியும். இப்படிபட்ட போராட்டம் இல்லையென்றால், இந்திய நீதித் துறை இந்து மதவெறி பயங்கரவாதிகளுக்கு எதிரான வழக்குகளை ஊறப் போடவும் தயங்கியிருக்காது என்ற உண்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

நரோடா பாட்டியா சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான கோட்னானி தண்டிக்கப்பட்டிருப்பது; களத்தில் நின்று முசுலீம்களை வேட்டையாடிய இந்து மதவெறிக் கும்பலுக்கும், உயர் போலீசு அதிகாரிகள், முதலமைச்சர் அலுவலகம், துணை அமைச்சர்கள் ஆகியோருக்கும் இடையே நடந்த தொலைபேசி உரையாடல்கள் அம்பலமாகியிருப்பது; ஐ.பி.எஸ். அதிகாரிகளான சஞ்சீவ் பட், சீறிகுமார் ஆகியோர் இப்படுகொலைக்கும் மோடி அரசுக்கும் இடையே உள்ள தொடர்பை ஆதாரங்களோடு உச்ச நீதிமன்றத்திடமும், நானாவதி கமிசனிடமும் அளித்திருப்பது ஆகிய இவையனைத்தும் இப்படுகொலையை மோடி அரசுதான் திட்டமிட்டு, தூண்டிவிட்டு நடத்தியது என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

எனினும், உச்ச நீதிமன்றம்கூட இந்தக் கோணத்தில் இப்படுகொலையைப் பார்க்காமல், தனித்தனி வழக்குகளாக விசாரணை நடத்துவதை அனுமதித்து வருகிறது. சங்கப் பரிவார அமைப்புகள்தான் இந்தப் படுகொலையை நடத்தியிருக்கின்றன என்பது அம்பலமான பிறகும், அவ்வமைப்புகளைத் தடைசெய்யச் சொல்லி எந்தவொரு நீதிமன்றமும் உத்தரவிட மறுக்கின்றன. இடதுசாரிகள் உள்ளிட்டு, மதச்சார்பற்ற கட்சிகள் என்று பீற்றிக் கொள்ளும் எந்தவொரு ஓட்டுக்கட்சியும்கூட இந்தக் கோரிக்கையை முன் வைக்க மறுக்கின்றன. இந்த நாட்டின் கிரிமினல் சட்டங்களும், நீதித்துறையும், அரசியலமைப்பும் குஜராத் முசுலீம் படுகொலை தொடர்பாகக் காட்டிவரும் இந்தச் சலுகைதான் கொலைகாரன் மோடிக்கு, தன்னை வளர்ச்சியின் நாயகனாக மக்கள் முன் காட்டிக் கொள்ளுவதற்கும்; ''நான் குற்றவாளி எனில், என்னைத் தூக்கிலிடுங்கள்'' எனச் சவால் விடுவதற்குமான துணிவைத் தந்திருக்கிறது.

● செல்வம்



படிப்பகம்

www.padippkam.com

## 2ஜி  கோல்கேட்

# இரண்டு கார்ப்பரேட் கொள்ளைகள் இருவேறு அணுகுமுறைகள்

### “ஊழலை யார் செய்தார்கள்?” என்பதுதான் ஊழல் அம்பலமாவதைத் தீர்மானிக்கிறது

நிலக்கிரி வயல்கள் ஒதுக்கீடு, மீப்பெரும் அனல் மின்நிலையத் திட்டங்களை நிறுவி இயக்குவது, டெல்லியிலுள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தைப் பராமரித்து இயக்குவதில் அரசு - தனியார் கூட்டு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் ஆகிய மூன்றிலும் நடைபெற்றுள்ள கார்ப்பரேட் கொள்ளையால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து இந்திய அரசின் தலைமை தணிக்கைத் துறை அதிகாரி அளித்திருந்த அறிக்கைகள் கடந்த ஆகஸ்டு மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டன. தலைமைத் தணிக்கைத் துறை அதிகாரி தந்துள்ள அறிக்கைகளின்படி, 2004-2009 - ஆம் ஆண்டுகளில் பல்வேறு தனியார் நிறுவனங்களுக்கு நிலக்கரி வயல்களை ஒதுக்கீடு செய்ததில் நடந்துள்ள முறைகேடுகளால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு 1.86 இலட்சம் கோடி ரூபாய்; மகாராஷ்டிரா மாநிலத்தில் சித்ராங்கி எனுமிடத்தில் மீப்பெரும் அனல் மின்நிலையத்தை நிறுவி இயக்குவதற்காக அனில் அம்பானிக்குக் காட்டப்பட்டுள்ள முறைகேடான சலுகையால், அம்பானி என்ற தனியொரு முதலாளிக்குக் கிடைக்கவுள்ள நிகர இலாபம் 11,852 கோடி ரூபாய்; டெல்லி சர்வதேச விமான நிலையத்தைப் பராமரித்து இயக்குவதற்காக ஜி.எம்.ஆர். குழுமத்திற்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளால், அடுத்த 60 ஆண்டுகளில் அந்நிறுவனத்திற்குக் கிடைக்கவுள்ள வருவாய் 1,63,557 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவை மூன்றில், ‘தேசிய’ப் பத்திரிகைகளும் பா.ஜ.க.வும் நிலக்கரி வயல்கள் ஒதுக்கீட்டில் நடந்துள்ள முறைகேடுகள் பற்றி மட்டும்தான் கூச்சல் போட்டு வருகின்றன; மற்ற இரண்டு கார்ப்பரேட் கொள்ளைகள் பற்றி எந்தவொரு எதிர்க்கட்சியும் தேசியப் பத்திரிகைகளும் வாயே திறக்கவில்லை. நிலக்கரி வயல் ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்த விதமும், ஊழலும் 2 ஜி ஒதுக்கீட்டில் நடந்த ஊழலைக் காட்டிலும் சதித்தனம் நிறைந்தது, பிரம்மாண்டமானது என்ற போதிலும், நிலக்கிரி ஊழல் ‘தேசிய’வாதிகளால் அடக்கியே வாசிக்கிப்படுகிறது; அல்லது கண்டுகொள்ளமால் விடப்படுகிறது.

2 ஜி ஊழல் வழக்கில் தி.மு.க. வையும், அக்கட்சியைச் சேர்ந்த ராஜாவையும் போட்டுப் பார்க்க பெரும் முனைப்புக் காட்டிவரும் சுப்பிரமணிய சுவாமியும்; 2 ஜி ஊழலை மையப்படுத்திப் பிரச்சாரம் செய்து ஆட்சியைக் கைப்பற்றியுள்ள அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதாவும் நிலக்கரி வயல் ஒதுக்கீடு முறைகேடு பற்றி இதுவரை ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை; ராஜாவையும் தி.மு.க.வையும் பக்கம்பக்கமாக எழுதி அம்பலப்படுத்திய ஜூனியர் விகடன், குமுதம் ரிப்போர்டர் உள்ளிட்ட தமிழக கிசுகிசு ஏடுகள், நிலக்கரி ஊழல் விவகாரத்தில் கள்ள மௌனம் சாதிக்கின்றன.

2 ஜி ஒதுக்கீடு முறைகேடு மூலம் தி.மு.க. 200 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் செய்திருப்பதாகக் குற்றஞ்சுமத்தி எழுதிய பத்திரிகைகள், அப்படிபட்ட பொதுப்பணத்தைச் சுருட்டிக்கொண்ட குற்றச்சாட்டு எதையும் நிலக்கரி முறை






படிப்பகம்




கேட்டின் முக்கியப் புள்ளியான மன்மோகன் சிங் மீதோ, காங்கிரசு மீதோ சுமத்துவதில்லை. ''இந்த விசயத்தில் முடிவெடுக்காமல் அமைதியாக இருந்தது தான் மன்மோகன் சிங்கின் குற்றமே தவிர, தனிப்பட்ட ரீதியாக அவர் எந்த ஆதாயத்தையும் இதன் மூலம், அடையவில்லை'' என அவை எழுதுகின்றன. இம்முறைகேடு பற்றி முறையான விசாரணை தொடங்குவதற்கு முன்பே மன்மோகன் சிங்கை உத்தமனாக்கிவிட்டன.

நிலக்கரி முறைகேட்டை அடக்கி வாசிப்பது தலைமை தணிக்கை அதிகாரியிடமிருந்தே தொடங்கிவிடுகிறது. இந்த முறைகேடான ஒதுக்கீட்டினால் தனியார் நிறுவனங்கள் அடைந்த அதிரடி இலாபம் 4.79 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இருக்கக்கூடும் எனக் கூறி வந்த தணிக்கைத் துறை, தனது அறிக்கையில் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு 1.86 இலட்சம் கோடி ரூபாய்தான் எனக் குறைத்துக் காட்டியிருக்கிறது.

ஆ.ராசா 2 ஜி அலைக்கற்றை விற்பனையை அரசின் கொள்கை முடிவுப்படிதான் - முன்னால் வந்தவருக்கு முன்னுரிமை - விற்பனை செய்தார். அவ்விற்பனையில் அவர் வரிசையை மாற்றிக் கொடுத்துவிட்டார்தான் என்பதுதான் ராசா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு. ஆனால், நிலக்கரி வயல் ஒதுக்கீட்டிலோ, வயல்களை ஏலத்தில்தான் விடவேண்டும் என்ற கொள்கை முடிவை 2004 - ஆம் ஆண்டு எடுத்துவிட்டு, அந்தக் கொள்கைக்கு ஏற்பச் சட்டத்திருத்தம் செய்யாமல் கிடப்பில் போட்டுவிட்டு, நிலக்கரி வயல்களைக் கேட்டு விண்ணப்பித்த பெயர்ப்பலகை நிறுவனங்களுக்கெல்லாம் பெருமாள் கோவில் உண்டக்கட்டியைப் போல, நிலக்கரி வயல்களைத் தூக்கிக் கொடுத்திருக்கிறார், மன்மோகன் சிங்.

நிலக்கரி வளம் 1973-ஆம் ஆண்டில் தேசியமயமாக்கப்பட்டாலும், அப்பொழுதே இரும்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்களுக்கு நிலக்கரி வயல்களை ஒதுக்கிக் கொடுக்கும் எனச் சலுகை அளிக்கப்பட்டிருந்தது. தனியார்மயம் - தாராளமயம் அமலுக்கு வந்த பின், 1993-இல் மின்சாரம், சிமெண்ட் உற்பத்தியில் ஈடுபடும் அல்லது அத்தொழில்களைத் தொடங்கப் போவதாகச் சொல்லும் தனியார் நிறுவனங்களுக்கும் நிலக்கரி வயல்களை ஒதுக்கீடு செய்யலாம் என அச்சலுகை விரிவாக்கப்பட்டது. 2006-இல் மின்சாரம், சிமெண்ட், இரும்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு நிலக்கரியை விற்பதாகக் கூறும் ஏஜெண்டுகளுக்கும் நிலக்கரி வயல்களை ஒதுக்கலாம் எனத் தாராளமயம் புகுத்தப்பட்டது. இதன் பிறகுதான் தனியார் நிறுவனங்களுக்கு நிலக்கரி வயல்களைத் தூக்கிக் கொடுப்பது முன்னெப்போதும் இல்லாத அளவிற்குச் சூடு பிடித்தது.

1993 தொடங்கி 2003 வரையில் 41 வயல்கள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபொழுது, 2004 ஆம் ஆண்டு தொடங்கி 2009 ஆம் ஆண்டுக்குள் 175 வயல்கள் தன்னிச்சையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவற்றுள் 111 நிலக்கரி வயல்கள் தனியார் நிறுவனங்களுக்கு வாரி வழங்கப்பட்டுள்ளன. நிலக்கரி வயல்களைத் தனியாருக்குத் தாரை வார்ப்பது சூடுபிடித்த நேரத்தில், அதாவது 2006 முதல் 2009 முடிய அத்துறையின் பொறுப்பு பிரதமர் மன்மோகன் சிங்கிடமிருந்து குறிப்பிடத்தக்கது.

காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினரான நவீன் ஜிண்டாலுக்குச் சொந்தமான ஜிண்டால் இரும்பு மற்றும் எரிசக்தி நிறுவனம்; மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள யவட்மால் தொகுதியைச் சேர்ந்த காங்கிரசு எம்.பி. விஜய் தர்தாவின் தம்பியும் மகாராஷ்டிரா மாநில அமைச்சருமான தேவேந்திர தர்தா இயக்குநராக உள்ள ஜே.ஏ.எஸ். குழுமம்; நிலக்கரித்துறை அமைச்சர் சிறீ பிரகாஷ் ஜெய்ஸ்வாலின் உறவினரான மனோஜ் ஜெய்ஸ்வாலால் நடத்தப்படும் அபிஜித் குழுமம்; பா.ஜ.க.வின் தேசியத் தலைவர் நிதின் கட்காரியின் உதவியாளர் அஜய் சஞ்சேட்டிக்குச் சொந்தமான எஸ்.எம்.எஸ். இண்டஸ்ட்ரீஸ்; பா.ஜ.க.வைச் சேர்ந்த நீனா சிங்கின் கணவர் வீ.கே. சிங்கிற்குச் சொந்தமான நவபாரத் பவர் லிமிடெட் ஆகியவையும் நிலக்கரி வயல்களைப் பெற்றுள்ளன. ஆனாலும், இந்த அரசியல் தலைவர்கள், ''நாங்கள் லாபியிங் செய்து வயல்களைப் பெறவில்லை; தகுதியின் அடிப்படையில் பெற்றோம்'' என்கிறார்கள். அதாவது பனைமரத்தடியின் கீழ் உட்கார்ந்து கள்ளைக் குடித்துவிட்டு, பாலைத்தான் குடித்தோம் எனச் சத்தியம் செய்கிறார்கள்.

2 ஜி ஒதுக்கீடில் ராஜா - கனிமொழி - நீரா ராடியா இடையே நடந்த தொலைபேசி உரையாடல்களை வெளியிட்டு, லாபியிங் பற்றிக் கூச்சல் போட்ட முதலாளித்துவப் பத்திரிகைகளுள் ஒன்றுகூட, நவீன் ஜிண்டாலும், விஜய்



படிப்பகம்



நிலக்கரி ஊழலில், தமது நிறுவனங்களுக்கு வயல்களைப் பெற்றதன் மூலம் நேரடியாக ஆதாயமடைந்துள்ள காங்கிர எம்.பி.க்கள் நவீன் ஜிண்டால் (இடது ஓரம்) மற்றும் விஜய் தர்தா; தரகு வேலை பார்த்த நிலக்கரித் துறை அமைச்சர் சிறீ பிரகாஷ் ஜெய்ஸ்லால் (வலது ஓரம்).

தர்தாவும், அஜய் சஞ்சேட்டியும் நிலக்கரி வயல்களை எப்படிப் பெற்றார்கள் என்ற புலனாய்விற்குள் இறங்கவுமில்லை. நிலக்கரி வயல்களை ஒதுக்கீடு செய்வதில் நடந்துள்ள லாபியிங் இவர்களோடு மட்டும் நின்றவிடவுமில்லை.

கூடங்குளத்தில் இன்னும் மின் உற்பத்தித் தொடங்கப்படவேயில்லை; ஆனாலும், அவ்வணு உலையை எதிர்த்துப் போராடும் மீனவர்கள் மீது நாட்டின் வளர்ச்சியைச் சீர்குலைப்பவர்கள் எனக் குற்றஞ்சுமத்தி, அவர்கள் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டம் ஏவிவிடப்படுகிறது. அதேசமயம், நிலக்கரி வயல்களைப் பெற்று, திட்டமிட்டே உற்பத்தியில் ஈடுபடாமல் இருந்து, 'வளர்ச்சியை'ச் சீர்குலைத்திருக்கும் டாடா, அம்பானி, ஜிந்தால், ரிலையன்ஸ், மிட்டல், மனோஜ் ஜெய்ஸ்வால் உள்ளிட்ட பெரும் தரகு முதலாளிகள் மீது என்ன நடவடிக்கை பாய்ந்திருக்கிறது?

இந்த ஒதுக்கீடு தொடர்பாக விசாரணை நடத்திவரும் சி.பி.ஐ., கணக்குக் காட்டுவதற்காக ஏழு உப்புமா கம்பெனிகள் மீது மோசடி உள்ளிட்ட சில குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்கிறது. அமைச்சரவை இடைக்குழு, 58 வயல்களைப் பெற்றுள்ள 29 நிறுவனங்களுக்கு, ''நீங்கள் ஏன் நிலக்கரியைத் தோண்டவில்லை?'' என நோட்டீஸ் அனுப்பிவிட்டு, அவர்களின் பதில்களைக் கேட்டு வருகிறது. அமைச்சரவை இடைக்குழு சிபாரிசு செய்தபடி 4 நிலக்கரி வயல்களின் ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டதற்கு மேல் தனியார் நிறுவனங்கள் மீது எந்தப் பூச்சாண்டியும் பாயவில்லை.

ஏல முறையில் ரோடு போடும் வேலையை விடுவதிலேயே ஊழலும் முறைகேடுகளும் தாண்டவமாடும்பொழுது, நிலக்கரி ஒதுக்கீட்டில் ஏல முறையைக் கொண்டு வந்திருந்தால் இந்த ஊழல் நடைபெற்றிருக்காது என பா.ஜ.க., பிரசாந்த் பூஷண் உள்ளிட்ட பலரும் வாதாடுவது நகைப்புக்குரியது. தனியார்மயம் என்பதே ஊழல்தான். ஊழலற்ற தனியார்மயம் என்பதே கிடையாது. ஒரிசாவில் பல இலட்சம் கோடி ரூபாய் பெறுமான இரும்புக் கனிம வளத்தை போஸ்கோ என்ற அந்நிய நிறுவனத்திற்கு வெறும் 50,000 கோடி ரூபாய் மூலதனத்திற்குத் தாரை வார்த்திருக்கிறார்களே, அது ஊழலில்லையா? இப்படிச் 'சட்டபூர்வமாக' நீர், நிலம், அலைக்கற்றை, கனிம வளங்கள் ஆகியவையும் பொதுத்துறை நிறுவனங்களும் தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கப்படுவதை, இக்கும்பல் வளர்ச்சி என்ற பெயரில் நியாயப்படுத்துகிறது.

தனியார்மயத்தின் பின் சட்டவிரோதமான முறையில் நடந்துள்ள ஊழல்கள் என்று பார்த்தால், கடந்த இருபது ஆண்டுகளில் பங்குச் சந்தை மோசடி தொடங்கி நிலக்கரி வயல் ஒதுக்கீடு முறைகேடு முடிய பல -று ஊழல்கள் நடந்திருப்பதை, நடந்துவருவதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அவற்றுள் ஒரு சில ஊழல்களைத்தான் எதிர்க்கட்சிகளும், தேசியப் பத்திரிகைகளும் தங்களது அரசியல் நோக்கங்களுக்கு ஏற்ப மக்கள் முன் வைத்துள்ளன.

உதாரணத்திற்குச் சொன்னால், 2 ஜி ஊழல் தி.மு.க. மட்டுமே செய்த ஊழலாக மக்கள் முன் கொண்டு செல்லப்பட்டது. அதேசமயம், முகேஷ் அம்பானி, காங்கிரசு கட்சியின் முரளி தியோரா சம்பந்தப்பட்ட கே.ஜி. எண்ணெய் வயல் ஊழல், காங்கிரசு கட்சியின் பிரஃபுல் படேல் சம்பந்தப்பட்ட ஏர் இந்தியா ஊழல் உள்ளிட்ட பல மெகா ஊழல்கள் வெளியே கசிந்த நிலையிலேயே அமுக்கப்பட்டன. 2 ஜி வழக்கில் தி.மு.க.வைச் சேர்ந்த ராஜா, கனிமொழி ஆகியோர் வழக்கை எதிர்கொள்ளும் போது, காங்கிரசின் ப.சிதம்பரம் குற்றமற்றவராக நீதிமன்றத்தால் அறிவிக்கப்படுகிறார். இவை அனைத்துக்கும் மேலாக, ''2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டை ஏலமுறையில் விட வேண்டும் என்று கூறியிருப்பதால், அதே நடைமுறை அனைத்து இயற்கை வளங்களுக்கும் பொருந்தாது'' என 2ஜி தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்திருப்பதன் மூலம், நிலக்கரி ஒதுக்கீட்டில் நடந்துள்ள கார்ப்பரேட் கொள்ளை தொடர்பாக யார் மீதும் ஊழல் குற்றமோ, வழக்கோ தொடுக்க முடியாது என்ற நிலையை உருவாக்கிவிட்டது. ● திப்பு

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippkam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



சென்னையில்30.8.2012 அன்று பெண்கள் விடுதலை முன்னணியினர் பல்லாவரம் - நாகல்கேணி எம்.ஜி.ஆர். சிலை அருகில் தெருமுனைக் கூட்டத்தை நடத்தினர். தோழர் ராஜி தலைமையில் நடந்த இக்கூட்டத்தில், சிறப்புரையாற்றிய பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன், மாருதி தொழிலாளர்கள் மீது மட்டுமின்றி, அனைத்துப் பிரிவு உழைக்கும் மக்கள் மீது முதலாளித்துவம் ஏவிவரும் வன்முறையையும், இப்பகுதியில் நீண்டகாலமாக கழிவுகளை வெளியேற்றி சுற்றுச்சூழலை நஞ்சாக்கி மக்களுக்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்தி வரும் தோல் தொழிற்சாலை முதலாளிகளின் பயங்கரவாதத்தையும் விளக்கி, இவற்றுக்கெதிராக உழைக்கும் மக்கள் அணிதிரண்டு போராட அறைகூவினார்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே செக்காணூரணியில் 8.9.2012 அன்று வி.வி.மு. சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் ஆசை தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், உசிலை வட்ட வி.வி.மு. செயலாளர் தோழர் குருசாமி, ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு ஆகியோர், யார் பயங்கரவாதி, யார் போராளி, எது வன்முறை என்பதை விளக்கி சிறப்புரையாற்றினர். இப்பகுதியில் போலீசு மற்றும் அதிகார வர்க்கத்தின் அடாவடி அட்டூழியங்களால் புழுங்கிக் கொண்டிருந்த ஆட்டோ, வேன் ஓட்டுநர்களும் சிறு வியாபாரிகளும் பெருமளவில் அணிதிரண்டு ஆதரித்த இக்கூட்டத்தில், ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய புரட்சிகர கலை நிகழ்ச்சியும், ‘‘கும்மிருட்டு ... ஜெயலலிதாவைப் போட்டு உருட்டு‘‘ என்ற பாடலும் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

16.9.2012 அன்று தருமபுரி ராஜகோபால் பூங்கா அருகே பென்னாகரம் வி.வி.மு. தோழர் சிவா தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில், வி.வி.மு. வட்டச்செயலர் தோழர் கோபிநாத், ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கிரானைட் கொள்ளையன் பி.ஆர்.பி.யின் பயங்கரவாதம் முதல் கூடங்குளம் போராட்டத்தை ஒடுக்கும் போலீசின் பயங்கரவாதத்தைத் திரைகிழித்தும், தொழிலாளர்களின் சம்பளத்தை மட்டுமின்றி நமது வரிப்பணத்தையும் பொதுச் சொத்துக்களையும் விழுங்கி முதலாளிகள் பல கோடிகளைச் சுருட்டியதையும், வன்முறை, கதவடைப்பு, வரிஏய்ப்பு, கூலிப்படைகளைக் கொண்டு தாக்குவது - என முதலாளித்துவ பயங்கரவாதம் தலைவிரித்தாடுவதை அம்பலப்படுத்தியும் போராட அறைகூவினர். ம.க. இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியுடன் நடந்த இப்பொதுக்கூட்டம், இப்பகுதிவாழ் உழைக்கும் மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

சிவகங்கை - அரண்மனை வாயில் பகத்சிங் அரங்கில் பு.ஜ.தொ.மு. 20.9.2012 அன்று பொதுக்கூட்டத்தை நடத்தியது. சிவகங்கை - இராமநாதபுரம் மாவட்டங்களின் பு.ஜ.தொ.மு. அமைப்பாளர் தோழர் நாகராசன், ம.க.இ.க. கவிஞர் தோழர் துரை.சண்முகம் ஆகியோர் தமது சிறப்புரையில், கல்வி மருத்துவம், விவசாயம், உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் முதலாளிகள் நடத்தும் கொடூரமான வன்முறையையும் பயங்கரவாதத்தையும் தோலுரித்துக் காட்டினர். ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியானது, முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிராகத் தொழிலாளர்களையும் உழைக்கும் மக்களையும் போராட அறைகூவியது.





ம.க.இ.க. வேலூர் கிளையின் சார்பில், தோல் தொழிற்சாலைகள் நிறைந்த ஆம்பூரில் 22.9.2012 அன்று கருத்தரங்கம் நடைபெற்றது. இப்பகுதியில், அற்பக் கூலிக்குத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக உழல்வதையும், ‘‘மரத்தடி மகாராஜாக்கள்’’ எனப்படும் தொழிற்சங்க புரோக்கர்களின் துரோகத்தையும் விளக்கி, எந்த தொழிற்சங்கத்தை தென்னிந்திய முதலாளிகள் சங்கம் தடை செய்யக் கோருகிறதோ அந்த பு.ஜ.தொ.மு. சங்கத்தைக் கட்டியமைத்து போராடாமல் தொழிலாளிகளுக்கு விடிவில்லை என்பதை தலைமையுரையாற்றிய மாவட்ட ம.க.இ.க. செயலர் தோழர் இராவணனும், பு.ஜ.தொ.மு. மாநிலப் பொருளாளர் தோழர் விஜயகுமாரும் உணர்த்தினர். இக்கருத்தரங்கமும் ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் ஆம்பூரில் ஓர் புரட்சிகர தொழிற்சங்கத்தைக் கட்டியமைக்க அடித்தளமிடுவதாக அமைந்தது.

-பு.ஜ. செய்தியாளர்கள்



படிப்பகம்

www.padippkam.com

# விவசாயிகளின் வாழ்வை அழிக்கும் 'வளர்ச்சி'!



இந்திரா சாகர் அணைக்கட்டின் நீர்மட்டம் உயர்த்தப்படுவதை எதிர்த்து 13 நாட்களாக தண்ணீரிலேயே நின்று கொண்டு போராடிய விவசாயிகளின் பாதங்கள் ஊறி, புண்ணாகி விட்ட அவலம்.

ஏழை எளிய மக்கள் தமது வாழ்வாதாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எப்படியெல்லாம், தமது உயிரையும் உடலையும் துச்சமாக மதித்துப் போராட வேண்டியிருக்கிறது என்பதற்கு இந்தப் படமே சாட்சி.

மத்தியப் பிரதேச மாநிலத்திலுள்ள ஹர்தா மாவட்டத்தில் நர்மதை நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள இந்திரா சாகர் அணையின் நீர்மட்டத்தை 260 மீட்டரிலிருந்து 262 மீட்டராக உயர்த்தும் நடவடிக்கையில் இறங்கியது, அம்மாநில அரசு. நீர் மட்டத்தை உயர்த்துவதால் மூழ்கவுள்ள கிராமங்களிலிருந்து அப்புறப் படுத்தப்படவுள்ள மக்களுக்கு உரிய நிவாரணமும், இருப்பிடமும், நிலமும் நீர் மட்டத்தை உயர்த்துவதற்கு முன்பாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நடந்த போராட்டம்தான் இது.

இதே போன்றதொரு போராட்டம் அதே மாநிலத்தின் மற்றொரு மாவட்டமான காண்ட்வாவில் அமைந்துள்ள கோகல் காவோன் என்றொரு கிராமத்திலும் நடந்தது. அம்மாவட்டத்தில் நர்மதை நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஓம்கரேஷ்வர் அணையின் நீர் மட்டத்தை உரிய நிவாரணமும், நிலமும் வழங்கப்படுவதற்கு முன்பாக உயர்த்தக்கூடாது என்பதுதான் அக்கிராம மக்களின் கோரிக்கையாக இருந்தது.

இவ்விரண்டு அணைக்கட்டுகளின் நீர் மட்டத்தை உயர்த்துவதற்கு முன்பாக, அதனால் பாதிக்கப்படும் மக்களுக்கு உரிய நிவாரணமும் நிலமும் வழங்கப்பட்ட பிறகே, நீர் மட்டத்தை உயர்த்த வேண்டும் என மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளன. இந்த உத்தரவை ஒத்துக் கொள்வதாக நீதிபதிகளின் முன் தலையாட்டிய அம்மாநில அரசு, தனது வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு விட்டு, நீர்மட்டத்தை உயர்த்தத் தொடங்கிய அடாவடித்தனத்தை எதிர்த்துதான் இந்தப் போராட்டங்கள் நடந்தன.

நீர்மட்டத்தை உயர்த்திக் கிராமங்களை மூழ்கடித்தால், போராட்டமும் பிசுபிசுத்துப் போய்விடும்; உரிய நிவாரணமும், நிலமும் வழங்காமலேயே போராட்டத்தில் குதித்திருக்கும் மக்களைக் கிராமங்களிலிருந்து துரத்திவிடவும் முடியும் எனத் திட்டம் போட்டு, அதனை நடைமுறைப்படுத்தவும் தொடங்கியது, அம்மாநில பா.ஜ.க. அரசு. ஆனால், போராட்டத்தில் இறங்கிய மக்களோ, அணையின் நீர் மட்டம் உயருவதற்கு ஏற்ப கிராமத்துக்குள் புகுந்த நீர் தமது கழுத்தளவைத் தொட்ட பிறகும்; பாதங்களும், உடம்புத் தோலும் புண்ணாகி உரிந்துவிடும் அளவிற்குப் பாதிப்படைந்த போதிலும் நீரிலிருந்து வெளியேறவுமில்லை; கிராமங்களைக் காலிசெய்து ஓடவும் துணியவில்லை.

அவ்விரண்டு பகுதிகளிலும் ''ஜல சத்தியாகிரகம்'' என்ற இந்தப் போராட்டம் நடந்துவந்த அதே சமயத்தில், நர்மதா பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த முன்னணியாளர்கள் ஹர்தா மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். இந்நிலையில், ஒருபுறம் ஓம்கரேஷ்வர் அணையின் நீர்மட்டத்தைக் குறைப்பதாக அறிவித்த பா.ஜ.க. அரசு, இன்னொருபுறம் இந்திரா சாகர் அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவதை எதிர்த்துப் போராடிய மக்களை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்திச் சிறையில் தள்ளியது.

இவ்விரண்டு போராட்டங்களும் பா.ஜ.க. அரசின் ஈவிரக்கமற்ற கோர முகத்தை மட்டுமின்றி, அதன் இரட்டை வேடத்தையும் நாடெங்கும் அம்பலப்படுத்தின. இரண்டு வார காலமாக நடந்துவந்த ஜல சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தற்பொழுது முடித்துக்கொண்டுள்ள நர்மதா பாதுக்காப்பு இயக்கத்தினர், நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப் போவதாக அறிவித்துள்ளனர்.

அணைக்கட்டுகள் தொடங்கி அணுமின் நிலையங்கள் வரையிலான அனைத்து 'வளர்ச்சித்' திட்டங்களும் அடித்தட்டு உழைக்கும் மக்களின் வாழ்க்கையைச் சூறையாடுவதாகவே உள்ளன என்பதை இப்போராட்டங்கள் எடுத்துக்காட்டவில்லையா?



படிப்பகம்